படைப்பு
சமூகத்தின் இணைப்பு

ஊற்று-7 | நதி-12 | ஏப்ரல் 2025 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## அம்மையார் ஹைறூன்பீவி நினைவு
## சிறுகதைப் பரிசுப்போட்டி 2025 – முடிவுகள்

நடுவர்: கவிஞர் அ. வெண்ணிலா

படைப்பு **தகவு**
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-12 | ஏப்ரல் 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நெறியாளர்:
**க.சோ.திருமாவளவன்**

நெறியாளர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**தேவம்.ஆரோன்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- தலையங்கம் ........ ப.4
- அம்மையார் ஹைநூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டி 2025 – முடிவுகள் ........ ப.5
- விடுதலை.. விடுதலை.. விடுதலை!
  கவிஜி ........ ப. 37
- கவிதைக்குள் கலந்திருக்கும் கதை
  மு.முருகேஷ் ........ ப. 41
- காலத்தால் மூத்த சுயமரியாதைக்காரர்
  மானசீகன் ........ ப. 48
- வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் – எதிர்மறை விளைவுகள்
  ஆதிரன் ........ ப. 52
- பாரதி மறந்த ஆசைமுகம்
  கவிதா லட்சுமி ........ ப. 57
- அய்ந்து விண்மீன்கள் ஓட்டலும் அரை பாக்கெட் வெந்நீரும்
  ஆண்டன் பெனி ........ ப. 60

## சிறுகதைகள்


- இடும்பி
  - கோ.சம்பத் ........ ப. 06
- கள்ளப்பா
  - கயப்பாக்கம் இரா.இரமேசு ........ ப. 14
- முகங்கள்...
  - ப. ஏகரசி ........ ப. 29


## கவிதைகள்


- மணி சண்முகம். ........ ப. 51
- விக்ரமாதித்யன் ........ ப. 62




## Facilities

- Capacity 90 - 100 (Persons)
- AC Hall with Audio system
- POP with Profile lights
- Tea / Coffee snacks place
- Projector


படைப்பு அரங்கம்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024
+91 73388 97788

# தலையங்கம்

வணக்கம். படைப்பு 'தகவு' எண்பத்திநான்காவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

படைப்பு குழுமம் வருடந்தோறும் நடத்திவரும் அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு சிறுகதைப் போட்டிக்கான முடிவுகள் இவ்விதழில் வெளியாகியுள்ளன. முதல் மூன்று பரிசு பெற்ற சிறுகதைகள் இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர் கோ.சம்பத் எழுதியுள்ள 'இடும்பி' என்ற சிறுகதை முதல் பரிசினைப் பெற்றுள்ளது. ஒரு பெண் கொற்றவையின் எச்சமாக உணரப்படும் தருணம் கதையாகியிருக்கிறது. அவள் சன்னதம் கொண்டு தன் வாழ்க்கைக்கான நியாயத்தைக் கேட்டுக் கதறுகிறாள். ஆபத்து நேருங்காலத்து அவள் எடுக்கும் பேருரு அநியாயக்காரனை நடுங்கவைக்கிறது. இடும்பி பாதிக்கப்படும் பெண்களுக்குப் பாதுகாவல் அளிக்கும் குறியீடாகிறாள். பெண்ணின் ஆக்ரோஷத்தையும் அறைகூவலையும் பேசுகிறது 'இடும்பி' சிறுகதை.

கயப்பாக்கம் இரா.இரமேசு எழுதியுள்ள 'கள்ளப்பா' சிறுகதை இரண்டாம் பரிசைப் பெற்றுள்ளது. கள்ளப்பா என்பது பெயரல்ல. அது நம்பிக்கைக்கான ஒரு அடையாளச் சொல். ஒரு பெண்ணின் மீதான ஈர்ப்பு இந்தப் பெயரை நோக்கிய தேடலை ஒருவனுக்கு ஏற்படுத்துகிறது. கள்ளப்பா என்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்று ஆராயப் புகுந்தவன் அந்தச் சொல்லாகவே ஆகிவிடுவதுதான் 'கள்ளப்பா' சிறுகதை.

ப.ஏகரசி எழுதியுள்ள 'முகங்கள்' சிறுகதை மூன்றாம் பரிசைப் பெற்றுள்ளது. ஒரு ஓவியன், முகங்களாக வரைகிறான். அவன் வரையும் ஓவியங்களும் வண்ணங்களும் பார்க்கும் கதைசொல்லியிடம் உணர்வு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. சங்கீதக் குறிப்புகளோடு நீல வண்ணத்தில் ஒரு படம் வரைந்து கொடுத்துவிட்டுச் செல்கிறான். இசைக்குறிப்புகளை வாசித்து ஓவியத்தைக் கவனிக்கிறவன் அது தனக்கான ஓவியம் என்பதை உணர்கிறான். வாய்பேச முடியாத காது கேட்காத அந்த ஓவியனைத் தேடிக் கதைசொல்லியின் பயணம் நீள்கிறது. அவன் இறந்திருக்கிறான். அவன் உலகத்தின் ஆன்மாவை வண்ணங்களாலும் இசைக்குறிப்புகளாலும் வரைந்திருக்கிறான் என்ற புரிதலுடன் கதை நிறைவடைந்துள்ளது. ஓவியம் பற்றிய குறிப்புகளுடன் ஒரு அகமனத் தேடலாகக் கதை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாரதி கவிதையை முன்வைத்து கவிதா லட்சுமி எழுதும் புதிய தொடர் தொடங்கியுள்ளது. பாரதியின் மீதான கட்டுரையாளரின் பெருவிருப்பம் அவரது கவிதைகளை உற்றுநோக்கிப் புது விதத்தில் பார்க்கவைக்கிறது; புதிய பரிமாணங்களை வெளிக்கொணரவைக்கிறது. இவையன்றி, தொடர்கள் எப்போதும் போல வாசிப்பிற்கு ஏற்ற சுவாரசியங்களோடு புதிய பொருண்மைகளோடு அமைந்துள்ளன.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

– ஆசிரியர்

# அம்மையார் ஹைநூன்பீவி நினைவு

# சிறுகதைப் பரிசுப்போட்டி 2025 - முடிவுகள்

படைப்புக் குழுமம் சிறுகதை இலக்கிய வகைமைக்குப் பங்களிக்கும் வகையில் 'சிறுகதைப் பரிசுப்போட்டி'யினைத் தொடர்ந்து நடத்திவருகிறது. படைப்புக் குழுமத்தின் முக்கிய அங்கத்தினரான சகா என்ற சலீம்கான் தன் தாயார் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகையினை வழங்குகிறார். படைப்பாளரின் விருப்பத்திற்கேற்ப தலைப்பு மற்றும் சிறுகதைக் கருக்கள் அமையலாம் எனப் படைப்பாளர்களுக்கான முழுச் சுதந்திரத்துடன் போட்டி நடத்தப்பட்டது. இணையத்தில் எழுத்தாளர்கள் பல்வேறு பொருண்மைகளில் சிறுகதைகளைப் பதிந்தனர்.

எழுத்தாளர் அ.வெண்ணிலா அவர்கள் நடுவராகப் பங்கேற்றுப் பரிசுக்குரிய சிறுகதைகளைத் தெரிவு செய்துள்ளார். முதல் மூன்று பரிசு பெற்ற சிறுகதைகள் சான்றிதழ்களுடன் இவ்இதழில் வெளியாகின்றன. சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதைகள் அடுத்த இதழிலிருந்து வெளியாகும்.

## பரிசு விவரம்:

**மொத்தப் பரிசு : 40,000 ரூபாய்**

**முதல் பரிசு :**

ஒரு நபர் - 20,000 ரூபாய்

**இரண்டாம் பரிசு :**

ஒரு நபர் - 10,000 ரூபாய்

**மூன்றாம் பரிசு :**

ஒரு நபர் - 5000 ரூபாய்

**சிறப்புப் பரிசுகள் :**

**ஐந்து நபர்கள்–தலா 1000 ரூபாய்**

படைப்பு விழாவன்று பரிசுத் தொகையும் சான்றிதழும் நேரில் வழங்கப்படும்.

**பரிசு பெற்ற சிறுகதைகள்:**

**முதல் பரிசு**

**இடும்பி**

(எழுத்தாளர் : கோ.சம்பத்)

**இரண்டாம் பரிசு**

**கள்ளப்பா**

(எழுத்தாளர் : கயப்பாக்கம் இரா.இரமேசு)

**மூன்றாம் பரிசு**

**முகங்கள்**

(எழுத்தாளர் : ப. ஏகரசி)

**சிறப்புப் பரிசுகள் :**

- **ஊமை** (எழுத்தாளர் : பிறைநுதல்)
- **வாய்க்கரிசி** (எழுத்தாளர் : பெத்தனசுதா அருஞ்சுனைக்குமார்)
- **காலத்தின் ஒப்பனைகள்** (எழுத்தாளர் : கவியோவியத்தமிழன்)
- **அறம் - பொருள் - துன்பம்** (எழுத்தாளர் : பா. ஜெயவேல்)
- **நகுலனின் முதல் நாள்** (எழுத்தாளர் : சந்துரு மாணிக்கவாசகம்)

முதல் பரிசு
பெற்ற சிறுகதை

கோ.சம்பத்




# இடும்பி

பொராணி பேசாமல் இன்றைய பொழுது முழுமையாகவே கழியவில்லை சாக்கிக்கு. முழக்கி நீட்டி ராகத்தோடு இழுவையாய் முடிக்கிற லாவகப் பேச்சுக்கென்றே சாக்கியின் வீட்டுத் திண்ணையில் சதா ஒரு சினேகக்கூடுகை நடக்கும். வெற்றிலை இல்லாமல் எவ்வளவு நேரம்தான் வெறும் வாயை மெல்வது. சற்று நேரத்தில் குழு களைகட்டியது. வெற்றிலைச் சாற்றையெல்லாம் விழுங்கிவிட்டுத் தாம்பூலச் சக்கையை வாயிலிருந்து மெல்ல உதிர்த்துவிட்டு வானத்தைப் பார்க்கிறாள் சாக்கி. கருந்திரளாய் மேற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது மேகம்.

"ஒலகமெல்லாம் பேஞ்சாலும் இந்த மல்லனூருக்கு மழை ஏது.. இது மலட்டு மேகம், மழை வராது பாரேன்."

சாக்கி சொல்லி முடித்து அடுத்த நொடி வெள்ளி வேர்களை வெளிச்சமிட்டுக் காட்டுவது மாதிரி அடிவானில் பெருமின்னல் வீசி மறைந்தது. அதைத் தொடர்ந்தாற்போல் பட்டாசு குடோன் வெடித்த மாதிரி படபடவென்று துவங்கி நெஞ்சைக் கலக்கும் பேரிடி ஒன்று இறங்கியது. சாக்கிக்கு எசப்பாட்டு மாதிரி ஓவென்று கனமழை கொட்டியது.

"என்னமோ சொன்னியேக்கா.."

மெல்லிய பரிகசிப்போடு சாக்கியைச் சீண்டினாள் ஒருத்தி. பேச்சை மாற்றும் பாவனையில் சாக்கி அவர்களைத் தட்டி எழுப்ப, வீட்டுக்குள் நுழைந்து கதவடைத்தனர்.

"சரியான இடி, பக்கமாத்தான் எங்கயோ எறங்கியிருக்கு," என்று கூறியபடியே வார்த்தையை நிறுத்திவிட்டுக் கலவரமாகி உறைந்து நின்றது சாக்கியின் முகம்.

"சாக்கியக்கா என்ன ஆச்சு?" என்று உசுப்பிய பெண்களிடம் நினைவு வந்தவளாய் "இடும்பிய மறந்துட்டோமே" என்றதும், ஆளுக்கொரு கோணிப்பையை எடுத்து முக்கோண மடிப்பிட்டுத் தலையோடு போர்த்தியவாறு இடும்பியைத் தேடி அடைமழை இருட்டில் தெறிக்கத் தெறிக்க ஓடுகின்றனர்.

எல்லோரும் இடும்பியின் மாட்டுக்கொட்டகையில் ஒதுங்கினர். கழுத்துமணிகள் ஓயாது ஒலித்துக்கொண்டிருந்ததிலிருந்தே மாடுகளின் பதற்ற நிலையை அறிய முடிந்தது. நாக்கு

மடித்து மாட்டின் செல்லக்குரலிட்டு அவைகளை நீவியபடியே மாடுகளை ஆற்றுப்படுத்தினர். சொதசொதவென்றிருந்த மாட்டுச்சாணத்தோடும் கோமியநெடியோடும் வால் சுழற்றி அடிக்கிற மாடுகளின் ஸ்பரிசத்தோடும் அவைகளின் கூட்டுப்பெருமூச்சோடும் தொழுவத்தில் ஒதுங்கியபடியே இடும்பியைத் தேடினர்.

சோடியம் விளக்கிலிருந்து மழை மஞ் சளாகப் பெய்துகொண்டிருந்தது. பரவலான சிமெண்டு தானியக்களத்தில் மழைநீர் நிரம்பி அலையடித்துக்கொண்டிருந்தது. நிரம்பியிருந்த மழைநீரில் தானியக்களத்தின் இந்தக் கரைக்கும் அந்தக் கரைக்குமாக மருள் வந்தவள் போல உருளுதண்டம் போட்டுக்கொண்டிருந்தாள் இடும்பி. துழாவிய கண்களுக்குத் தட்டுப்பட்டவள் போல சாக்கி அதோ எனக் கைக்காட்டுகிறாள். மாட்டுத்தொழுவத்தில் இருந்தபடியே எல்லோரும் அச்சத்தோடும் சற்றே பயம் குழைத்த பக்தியோடும் ஆத்தா என்று கன்னத்தில் இட்டுக்கொள்கின்றனர்.

பளீரென்று வீசுகின்ற மின்னல் ஒளியில் நல்ல பாம்பு ஒன்று ஒளிர்ந்து ஒளிர்ந்து நெளிவதைப்போல் தெரிந்தாள் இடும்பி. உடலெங்கும் ஆலங்கட்டிகள் வைரம் மாதிரி போர்த்தியிருந்தன. அவைகளை உதறிச் சட்டென எழுந்து நின்று அந்தப் பேய்மழையில் இரண்டு கைகளையும் வானத்திடம் ஏந்தி ஏதோ அறைகூவல் விடுக்கிறாள்.

வயிற்றைக் கலக்கும் மற்றுமொரு பேரிடி. தொழுவத்தில் எல்லோரும் காதைப் பொத்திக் கட்டிக்கொள்கின்றனர். இடும்பியோ "வாடா வா, நான்தானே உனக்கு வேணும், வாடா வா" என்று புடவையை உருவி வீசிவிட்டுத் துளியும் சலனமில்லாமல் கூப்பாடிட்டு வானத்தைப் பார்த்து இடித்தடத்தை நோக்கி இரு கைகளையும் ஏந்தி அழைக்கிறாள். அந்தப் பேய் மழையில் நின்று பெரும்பேயெனக் கதறுகிறாள்.



ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

"நான் இன்னும் எம்பொணத்ததான்டா சொமந்துகிட்டு இருக்கேன். என்மேல வந்து இறங்குடா பாக்கலாம்.. என்னத் தழுவிக்கோ, நான் அவன விட்டுற்றேன்... வாடா வா தைரியம் இருந்தா வா.. பொம்பள சோக்குல திரியறவந்தானே நீ.. அர்ஜுனா வாடா வா.. என்ன எடுத்துக்கோ... ஆனா... அவன விட்டுறனும்."

என்ன ஒரு மூர்க்கமான துடி. இது என்ன மருள்பாஷையா, ஆற்றாமையா, ஏக்கமா, காமமா, சாபமா, தீராத வஞ் சத்தின் பெருங்குரலா.. ஏதும் புரியாமல் மலைத்துப்போய் நின்றனர் யாவரும். இடும்பி தோழிதான், என்றாலும் இக்கணத்தில் நெருங்கவே ஏனோ துணிவில்லை. இந்த இடிச்சத்தத்திற்கு இப்படியான துடியேறிய மருளை இதுவரை எங்குமே அவர்கள் கண்டதேயில்லை.

இவளென்ன கொற்றவையின் எச்சமா, மனதைப் பிடுங்கி உடம்பெல்லாம் பூசி உடல்

முறித்து ஆடிக்கொண்டிருக்கிறாளே. இந்த இளம் பெண்ணுக்குள் ஒரு காலக்கிழவி புகுந்து ஏதேதோ பிதற்றுகிறாள். பூமியைப் பிளந்து உள்ளே புதைந்தவனைத் தேடுவதுபோல் ஒரு மூர்க்கமான தேடல். எதைத் தேடுகிறாள். ஏதோ சமன் செய்ய முடியாத ஒரு ரகசியத் துயர். மழையே அதிரும் மாவோலம்தானது. தன் மொழிகளாலேயே உடல்திறந்து அழைக்கிறாள். உடலொட்டிய ஆடைகளின் ஊடே அவளது வனப்பின் தெறிப்பு சுடர்ந்தது. மழை நனைந்த உடலிலிருந்து அழகின் மது ஒழுகிக்கொண்டிருந்தது.

"எனக்கு மட்டும்.. எனக்கு மட்டும் பகலெல்லாம் இருட்டி இரவாகுது... மழையெல்லாம் வறண்டு நெருப்பாகுதே ஏன்? நாதமா இருந்தவன பூதமா மாத்திட்டியே நியாயமா. சாவான பாவம் மேலே வாழ்வெனக்கு வந்ததடீ.. நோவான நோவெடுத்து வெந்து மனம் வாடுரண்டீ."

ஒரு சித்தப் புலம்பலோடு அழுதாள்.

"ஊழிச்சாபம் இடறேன் உனக்கு. என்ன மூளி ஆக்கிட்டதா நீ நினைக்கிற.. நான் மூளி இல்லடா காளி. இந்தக் கலகக்காரியோட கண்ணாமூச்சி ஆடாதே."

இரண்டு கைகளையும் உயர்த்திப் பின்னிக்கொண்டு பற்களை நறநறவென்று கடித்தவாறே அகன்ற விழிகளால் இடித்தடத்தைக் கண்களால் எரித்துக்கொண்டிருந்தாள்.

"நாங்க செம்மையா கலந்தது பொறுக்கலியா உனக்கு. அவன் எனக்குள்ள ஊன்றிய முத்தம் காமக்காடா வௌஞ்சு நிக்குதே.. எப்படி அறுப்பேன்.. எல்லாத்தையும் எப்படி அறுப்பேன். அழுகைய குடிக்கிறியா.. அது அவ்வளவு ருசிக்கிதா. வா வந்து குடி" என்று கூறியபடியே களமெங்கும் நிரம்பியிருந்த மழை நீரை அள்ளி அள்ளி வீசினாள்.

தொழுவத்து மாடுகள் மாறி மாறிக் கத்திக்கொண்டன. தெருக்கோடியிலிருந்து நாயொன்று நெடிய ஊளையிட்டது. வாயைப் பொத்தியவாறு பேச்சற்று நின்றுகொண்டிருந்தாள் சாக்கி. உடல் சிலிர்த்துத் தன்னை உதறிக்கொண்டாள் அருகிருந்த பெண்.

இதற்கு மேலும் வேடிக்கையில் பயனில்லை என்று வீட்டிற்கு ஓடிச்சென்று ஒரு எலுமிச்சைப் பழத்தை எடுத்துவந்தாள் சாக்கி. பயமும் பக்தியுமாக நீரில் நெளிந்து கொண்டிருந்த இடும்பிக்கு அருகில் சென்று "எல்லாத் தப்பையும் மன்னிச்சி மலையேறு ஆத்தா" என்று கையிலிருந்த எலுமிச்சையை இடும்பியின் கைகளில் திணித்தாள் சாக்கி.

இடும்பி அந்த முழு எலுமிச்சைப் பழத்தையும் அப்படியே வாயில் போட்டு நசநசவென்று மென்று விழுங்கினாள். துவண்டு விழுந்த இடும்பி தெளிந்து மெல்ல அயர்ச்சியோடு எழுந்து நின்று சுற்றி ஒரு மழலைப்பார்வையைப் பார்த்துவிட்டுத் தன் ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டாள்.

இப்போது சன்னதம் நீங்கிச் சாந்தம் ததும்பிக்கொண்டிருந்த இடும்பியை அழைத்துச் சென்றனர். இடும்பியோடு விவாதத்தை முடித்துக்கொண்டு மழையும் திரும்பிவிட்டது.

புழுதி எழாத மண்பாதை. இருமருங்கிலும் சிறிதும் பெரிதுமாக முளைத்திருந்தன குன்றுகள். அவை சதா நெடிய தவத்திலேயே இருந்தன ஊர்த்தவசிகள் மாதிரி. அவற்றைத் தலை சாய்த்து வணங்கியபடி ஒரு சாமந்திக்காடு. வான்கோவின் ஓவியத்தைப் போல. மஞ்சள் லாகிரி கூட்டும் இந்நிலமே மல்லனூரின் ஒற்றை அடையாளம். சிரித்தவாறே தாழ்பணியும் அந்தப் பூக்களை வருடியவாறே நடந்துகொண்டிருந்தாள் இடும்பி. குன்றுகளுக்கு நடுவிலிருந்து பிளந்துவரும் காற்றை அனுபவித்தவாறே கண்மூடிச் சிறிது நேரம் தன்னை ஒப்புக்கொடுத்துக் கொண்டாள்.

துயருக்குள் தள்ளி தூரநின்று ரசிப்பதும், பிறகு சில்லென்று தலைகோதி வாழ்க்கையைச்

சிக்கெடுப்பதுமே இந்தக் காலத்திற்கு வழக்கமாப் போச்சு. திடீரெனச் சாமந்திப் பூக்கள் சலசலக்க மறைவில் சாவகாசமாக மலம் கழித்துக்கொண்டிருந்த சிறுவன் திடுமென எழுந்து பரப்பிய கால்களோடு நிஜாரை ஏற்றிக்கொண்டு நின்றான். அவனைத் தவிர்க்கும் பாணியில் தலை குனிந்தவாறே கடந்து சென்றாள் இடும்பி. அக்கணமே பொன்னாச்சாரியின் வீட்டுக் கழிவறை குறித்த தளர்ந்த பிரச்சாரக்குரல் மண்டைக்குள் ரெக்கையடித்தது. ஒருவேளை வீட்டுக்குள் சிறு கழிப்பறை இருந்திருந்தால் நானும் கூட பெரிய பாதாளத்தில் விழுந்திருக்க மாட்டேனோ. என்ன செய்ய, இழப்புகளால்தானே அறத்தைக் கற்க வேண்டியிருக்கிறது.

*****

அடைத்திருந்த ஜன்னலைத் திறந்து கொக்கியிடுகிறாள் இடும்பி. காற்று சில்லென்று முகம் கழுவியது. ஜன்னலுக்கு வெளியே பார்வையை ஊடுருவுகிறாள்.

"மாமு இங்க வாங்களேன்."

ஸ்டூல் மீது நின்று ஸ்லேபில் சிறு சிறு மூட்டைகளை அடுக்கிக்கொண்டிருந்த வேழன் திரும்பிக் குதித்து வந்து ஜன்னலோரமாக நின்றிருந்த இடும்பியை அணைத்தவாறே "அப்புடி என்னடா இருக்கு வெளியே" என்று கேட்டவாறே கொஞ்சலான மெல்லிய அணைப்போடு வெளியே பார்க்கிறான். இடும்பி விரல் சுட்டிக் காட்டுகிறாள்.

சர்ப்பங்கள் இரண்டு கோதுமையும் வெள்ளையுமாய்ப் பின்னலிட்டுப் பூமியிலிருந்து இரண்டடி உயரத்திற்கு எழும்பிக் கூடிக்கொண்டிருந்தன.

"அப்ப்பா.. அடர்த்தியா ஜட பின்னின மாதிரி.. மாமு நான் இப்பத்தான் இப்புடி பாக்கறனே.."

சிலிர்த்த உடம்பும் வியத்த விழிகளுமாய் மலைக்கிறாள். திடீரென்று வீசிய பேய்க்காற்றும் மின்னல் வெட்டும் அதை உச்சமாக்கிக் காட்டின.

"அவுங்க, அவுங்க விஷயத்துல கரெக்டா இருக்காங்க, நம்மள மாதிரியா" என்றவாறே ஜன்னலைச் சாத்திவிட்டு இடும்பியை அசட்டையாகத் தூக்கி நடக்கிறான் வேழன்.

"வேணாம் மாமு.." ஏக்கச்செல்லத்தில் நெளிந்தாள் இடும்பி.

சுகமான மூச்சிறைப்பு. கவிழ்ந்து படுத்திருந்த இடும்பியின் கெண்டைக்கால்கள் மீது தலைசாய்த்து இளைப்பாறிக்கொண்டிருந்தான் வேழன். இருவருமே வியர்வையில் நமுத்துப்போயிருந்தனர். மின்வெட்டில் மின்விசிறியும் கூட இளைப்பாறிக் கொண்டிருந்தது. வேட்கை வெட்கமாக மாறியிருந்தது இடும்பிக்கு. திருமணமான மூன்றுமாதக் காலத்தில் இல்லாத மூர்க்கம் இன்று. முன்னறியாப் புதுப்புதுச் சேட்டைகள். உடலைத் தின்பண்டமாக நொறுக்கி முடித்திருந்த குழந்தைகள் மாதிரி களிப்பை அசைபோட்டபடி. அந்தச் சர்ப்பச்சேட்டை வேறு போதையைக் கூட்டிவிட்டிருந்தது. கலவியின் பூரணக்களிப்பில் பெண்மை திரள கவிழ்ந்து படுத்திருந்தாள் இடும்பி.

வேழனும் தன் காதலின் காணிக்கையை விடுபடலற்றுச் சமர்ப்பித்திருந்தான். அவளின் கெண்டைக்காலிலிருந்து புரண்டு பின்னுச்சத்தில் ஆதுரமாகத் தலைவைத்துப் படுத்துக்கொண்டான். எடையற்றதொரு ஆனந்தத்தில் மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டான். தாம்பத்தியத்தின் ஒற்றை இரவில் மட்டும் மனிதர்கள் வெகுவேகமாக வளர்ந்துவிடுகிறார்கள்.

திண்ணையில் பிடுங்கிப் பரப்பிவிட்டிருந்த கொத்துமஞ்சள் வாசமும், இருட்டில் நசுங்கி இறைந்திருந்த முல்லைப் பூவின் வாசமும் கலந்து ஜென்மத்தின் புதுவாசமாய்க் கலந்து பரவியது. காமத்தின் ஊமைக்குசும்பு அடங்கிய அமைதி. அப்படியே மேலேறிப் பிடரிச்சுருக்கத்தில் நிரம்பி வழிந்த வியர்வையைத் தனது நுனி நாக்கால் மெல்ல ருசித்தான் வேழன்.

"ச்சீ" என்றபடியே தன் செழுமை குலுங்கப் புரண்டு நிமிர்கிறாள். இருட்டை மெல்ல விரட்டிக் காட்டியது அவளது பூத்து மலர்ந்திருந்த முகம். நாட்டு ஓட்டுக் கூரையிலிருந்து மின்னலொன்று வெளிச்சமிட்டு மறைந்தது.

சட்டென்று எழுந்து ஆடைகளைத் திருத்திக்கொள்கிறாள் இடும்பி. மரணவீட்டுப் பட்டாசு மாதிரி வெடித்துப் பரவுகிறது இடியொன்று. சட்டென்று வேழனை இறுக்கிக்கொள்கிறாள்.

அவளின் முதுகைத் தட்டி ஆற்றுப்படுத்திவிட்டுப் பிடி விலக்கி எழுகிறான். தன்னுடைய பட்டன் செல்போனை எடுத்து சன்னமான டார்ச் ஒளியை ஆன் செய்து தேடத் துவங்குகிறான்.

"ஸ்டார்ச்சா தேடுறீங்க?"

"ஆமாண்டா."

"அந்தத் தகரப்பெட்டிக்குள்ள இருக்கு பாருங்க."

டார்ச்சை எடுத்து அவளின் பாதத்திலிருந்து உச்சிவரை வட்ட ஒளியிட்டு ரசிக்கிறான். போர்வையை மேலிழுத்தபடி எழில் மூடிக் கூசுகிறாள். "ச்சீ, கண்ணு கூசுது வேண்டா மாமு."

கேலிச்சிரிப்புடன் யூரியாப்பை ஒன்றை எடுத்து முக்கோண மடிப்பிட்டுத் தலையில் போர்த்தியபடி இரும்புத் தாழ்ப்பாளைத் திறந்து வெளியே செல்கிறான்.

"இப்ப எங்க மாமு?"

ரெட்டை விரல் காட்டி மலம் கழிக்கச் செல்வதைச் சைகையால் சொல்லிவிட்டுச் செல்கிறான். கதவைத் திறந்தவுடன் கொத்துமஞ்சள் வாசமும், பெருமழையின் ஓசையும், மின்னல் வெட்டும் கலந்து வீச்சமாக வாசலுக்குள் நுழைகிறது. பட்டென்று கதவைச் சாத்திவிட்டுச் செல்கிறான் வேழன். உச்சக்களிப்பில் உதடுகளைத் தடவிச் சிணுங்கிக்கொள்கிறாள் இடும்பி.

அடித்தொண்டையில் நாயொன்று ஊளையிடும் சத்தம். அதனைத் தொடர்ந்து ஊரையே உலுக்கி எழுப்பிய பேரிடி. தன் கூரைமேல் விழுந்தது போல் ஓடுகளின் அதிர்வு. காதுகளைப் பொத்தி உடலெங்கும் பெருநடுக்கத்தில் எழுகிறாள். கதவைத் திறக்கையில் பேயுதலோடு கனமழை வெளியை நிரப்பிக்கொண்டிருக்கிறது. மின்னலுக்கும் சாரலுக்கும் நடுவே கண்கள் வேழனைத் துழாவுகிறது. சற்றுத் தொலைவில் பனைமரம் ஒன்று பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

"மாமு.. மாமு.." தன் மொத்தக் குரலையும் அடிவயிற்றிலிருந்து கூவுகிறாள். பதிலில்லை. மழைக்கூச்சல் மட்டும் ஓலமாய் ஒலிக்கிறது. நீர் நிரம்பிய சிமெண்டு தானியக்களத்தில் நின்றபடி பெருங்குரலெடுத்து சுழன்று சுழன்று கூவுகிறாள். எரிந்துகொண்டிருக்கும் பனைமரத்தை நோக்கி விரைகிறாள். வயல் புழுதியில் கால்கள் புதைய இழுத்திழுத்து ஆவேசமாய் ஓடுகிறாள்.

வேழன் போர்த்தியிருந்த யூரியாப்பை மழைச்சீற்றத்தில் அடித்து வந்து அவள் முகத்தை மூடுகிறது. தட்டி விட்டபடி முன்னேறி எரிந்துகொண்டிருக்கும் பனை மரத்தைப் பார்க்கிறாள். அருகில் கரிக்கட்டையாய்.... மார்பை அடித்துக்கொண்டு "ஐயோ மாமு"வென.. நெடிய ஓலமிட்டபடி மயங்கிச் சாய்கிறாள். லாந்தர் விளக்குகளோடும், ஸ்டார்ச் வெளிச்சத்தோடும் ஊரே நெருங்கிச் சூழ்கிறது.

சாக்கியின் மடியிலிருந்து கண் விழிக்கிறாள் இடும்பி. மார்படித்தும், வாயடித்தும் விதவிதமான ஓலமும், அழுகையும் சூழ சுற்றும் முற்றும் பார்க்கிறாள். சின்னச் சின்ன வெடிப்போடு எரிந்து கருகிக்கொண்டிருந்தது. வெட்டி இறங்கிய மின்னலைக் கண் சிமிட்டாமல் எரிக்கும் பார்வையோடு பார்த்தபடி எழுந்து நிற்கிறாள். சோகம் சன்னதமாக அவளின் உடலெங்கும் பரவிக்கொண்டிருந்தது. மீண்டும் எங்கோ வெடித்து இறங்கிய இடித்தடத்தை நோக்கி

ஓடுகிறாள்.

“வாடா பேடிப் பயலே.. நான் இங்க இருக்கேன்.. என்னையும் அழைச்சிக்கோ. நான்தானே உனக்கு வேணும்..” என்று வானத்தைப் பார்த்தபடி சீற்றத்தோடு கதறிய இடும்பியைப் பார்த்து ஒப்பாரியிட்டது சூழ்ந்திருந்த பெண்கள் கூட்டம். நாயொன்று நெடிய ஊளையிட்டுவிட்டு இடும்பியின் இரவைக் கவ்வியபடி இருளில் ஓடி மறைந்தது.


****

ரங்கரு திடீரென சட்டரைச் சாத்துவான் என எதிர்பார்க்கவேயில்லை இடும்பி. காமம் ஒரு ஒளி நீங்கிய நெருப்பு. ரங்கருவின் மைனர்தனத்தை ஊர் பேசி அறிந்திருக்கிறாள். எனினும் தன்னிடம் இப்படி துணிவான் என்று அறிந்திருக்கவில்லை. இளம் விதவைதானே.. பசலையோடும், வேட்கையோடும் பலவீனப்பட்டிருப்பாள் என்ற பொதுப்புத்தியில் ரங்கரு விலக்கல்லவே.

வேழனின் மரணத்தைத் தன் காதலால் இன்னமும் இட்டு நிரப்பிக்கொண்டேயிருப்பதை அவன் எப்படி அறியக்கூடும். ஆனாலும் என்ன செய்ய, துயரம் தன் மரபைப் பெண்ணிடமிருந்துதானே துவங்க ஆசைப்படுகிறது. பெண் நித்யகன்னியாக இருப்பதும் நிரந்தரத்தாயாக மாறுவதும் அவளது உள்ளன்பின் ரகசியம்.

கதவையும், ஜன்னல்களையும் அடைத்திருந்தான். திட்டமிட்டு அவளைத் தனிமைக்கு உட்படுத்தியிருந்தான். அரவையான சூடான ராகிமாவைப் பையில் சுமந்தபடி நிற்கிறாள் இடும்பி. அந்த அடைப்பில் சூடான எள் புண்ணாக்கின் வாசம் மில்லெங்கும் பரவிக்கொண்டிருந்தது.

வெற்றிலைச் செல்லத்தைத் தடவி மடித்து லாவகமாகப் போட்டு மென்றபடியே நாற்காலியில் அமர்ந்து கையில் பையுடன் நின்றிருக்கும் இடும்பியை அழைக்கிறான்.



சலனமற்று ஆழ்ந்த மௌனத்தோடு அவனருகில் சென்று சட்டரைத் திறந்துவிடச் சொல்லி அதிகாரமிடுகிறாள்.

தன் இனத்தைக் கண்டு தானே அச்சப்படும் இனம் பெண்ணினம்தானே. ஆனாலும் கணவனின் எரிசிதையைக் கண்ணெதிரே கண்டவள், எதையும் பொசுக்கும் வல்லமை கொள்கிறாள். நெருங்கி ரங்கருவின் கண்களைக் கூர்ந்து பார்க்கிறாள். பாசாங்கான துணிவு. பதற்றம் கூடிய காமம் வல்லுறவுக்குத் தயாராகிக்கொண்டிருந்த புலன்கள். இதன் பொருட்டெல்லாம் உன்னை மாய்த்துவிடப் போவதில்லை. என்னையும் மாய்த்துக்கொள்ளப் போவதில்லை. உன்னைச் சூழ்ந்திருக்கும் வன்காம அலையைப் பொசுக்கிவிடப் போகிறேன். இதே அரவை மில்லில் பெண்களின் நிர்வாணத்தைத் தினுசு தினுசாகப் பார்த்தவன். முழுசாக அரைத்த மாவைப் பூசியும், அரவை மஞ்சளைப் பூசியும், செக்கெண்ணையை உடல் முழுக்கப் பூசியும் விதவிதமாக உறவுகொண்ட

பெண்களை நினைத்துச் சல்லாபிக்கிறான்.

இடும்பியின் உயரமும், செதுக்கலான தேகமும், செழிப்பை மூடிய வனப்பும், மயிலையொத்த நடையும்.. இவளை எந்தப் பூச்சில் பார்க்கலாம்.. தாம்பூல எச்சிலைத் துப்பிவிட்டு உடல் முறித்து எழுகிறான். ஆனாலும் தன்னுறுதியின் நிதானத்தோடும் பொறுப்பான எச்சரிக்கையோடும் விரல் நீட்டி மீண்டும் மீண்டும் தன்னை வெளியேற்றிவிடும்படி எச்சரித்துக்கொண்டேயிருக்கிறாள்.

நெல் மூட்டையின் மீது அமர்ந்து விரல் நீட்டிப் பேசிக்கொண்டிருக்கும் போதே சற்றும் எதிர்பாராமல் மிருகப்பாய்ச்சல் கொண்டு மூர்க்கமாக இடும்பியை அணைக்கிறான். ஒரே மூச்சில் அவனை உதைத்தும் திமிறியும் முன்னுக்குத் தள்ளிவிடுகிறாள். பூதத்தின் கழிவு மாதிரியான ஒரு துர்நாற்றம் வீசியது அவன் மேல். தரையில் படிந்திருந்த மாவில் அவனது கால்தடம். அது வேட்டை நாயின் கால்தடம் மாதிரியே இருந்தது. இது ஒன்றும் திடீர்த் தாகமல்ல. திட்டமிட்ட உலர்வு. சிங்கமே நீ பாய்ந்தது ஒரு பெண் மீதல்ல. அவள் உன் மீது அமர்ந்து வதம் புரியும் அம்பிகை என்பதை அறிவாயா நீ. மீண்டும் தன்னை உள்ளமர்த்தி ஆசுவாசம் கொண்டு தாயின் பரிவோடே அவனை அணுகுகிறாள். தப்பித்தலின் பதற்றமோ பாதுகாவல் குறித்த அச்சமோ அவளிடம் துளியுமில்லை. எதையோ புரட்டிப் போட முயற்சிக்கிறாள்.

“வேண்டாம்.. அன்பின் போதாமை கூட உன்னை இப்படி முடுக்கிவிட்டிருக்கலாம். தாயாக உன்னை அனுமதிக்கிறேன். வா வந்து மடி சாய். எல்லாம் கரைந்துவிடும். வல்லுறவே ஒரு ஆணின் இழிவான ஏற்பாடு. இக்கணம் மட்டும் உன் ரத்த அணுக்கள் சாக்கடைப் புழுக்களாக மாறி நெளிவதை உணர்ந்திருக்கிறாயா. காமம் வேட்டையல்ல விருந்தோம்பல். வேண்டாம் மகனே, வெறித்த உன் யாக்கையிலிருந்து வெளியே வா. இந்த ஒற்றைத் தினவுக்காக உன் குலமழித்துக் கொள்ளாதே.”

கண்களை இடுக்கி வினோதமாக அவளைப் பார்க்கிறான். இடும்பியின் இரட்டைப் பரிமாணம் அவனுக்குப் புரியவில்லை. அவனது தலைக்கேறிய காமம் எந்தத் தாலாட்டுக்கும் கண்ணயரவில்லை. இவளொரு மூடி முத்திரையிடப்பட்ட மெழுகுக்கதவு. ஆத்ம ஆகிருதி என்பதை அவன் உணரவேயில்லை. அவளது வடிவும், செழிப்பும் மட்டுமே இவனோடு பேசிக்கொண்டிருந்தது. அந்தக் கூச்சலில் அவனுக்கு ஏதும் உள்ளேறவில்லை. இந்த நாளை அவன் தவறவிடத் தயாராயில்லை. இடும்பியின் கனிவு ததும்பும் தாய்மையின் அணுகல் கூட அவனுக்குக் கிளர்ச்சியே கூட்டியது.

இனி பயனில்லை, சுற்றும் முற்றும் பார்க்கிறாள். பரந்த அரவை குடோன் முற்றாகவே அடைக்கப்பட்டிருந்தது. ரங்கருவின் துரத்தல் முற்றுகிறது. வேட்கையின் மூர்க்கம் அதிகரிக்க ஒரு மணி நேரத்திற்கும் மேலான போராட்டம். அயர்ச்சியில்.. தன்னையறியாமல் மூட்டைகளின் மீது அயர்ந்து சாய்கிறாள் இடும்பி.

மில்லில் பரவியிருந்த வெப்பம் மெல்லத் தணிகிறது. குளிர்காற்று உள்ளே பரவுகிறது. மின்னல் வெட்டிவெட்டி வெளிச்சமிட்டு மறைகிறது. மில்லின் மீது போர்த்தியிருந்த ஆஸ்பெட்டாஸ் ஷீட் மீது சடசடவென்று மழை பேய்க்கொட்டு மாதிரி இறங்கியது. வானம் பிளந்த பேரிடி. அரை நிர்வாணத்தில் அவள் மீது படரத்துவங்கியவன் அப்படியே சிலைபோல் உறைகிறான். அகன்ற விழிகளோடும், புதிய வீச்சோடும் முற்றிலும் புதுரூபம் கொண்டு எழுந்து நிற்கிறாள். மெல்லமெல்ல சன்னதத்தின் முழுமையில் கவிகிறாள். மேலேறிய விழிகளோடு விண்ணைப் பார்த்தபடி கூவுகிறாள்.

“வாடா வா.. என்னத்தானே தேடுற.. நான் இங்க இருக்கேன்.”

பத்து ஓநாய்கள் ஒன்றுகூடி ஓலமிடுகிற மாதிரி ஒரு முற்றலான ஓலம். மிரளமிரள அப்படியே பின்வாங்குகிறான்.

“கதவைத் தெறடா. நான் அவனைப் பாக்கணும்... நான் உனக்கு வேணுமா...” என்று கூறிக் காறித் தரையில் உமிழ்கிறாள்.

“வாடா வா, நானும் எச்சில்தான், அப்படியே தரையில படுத்து இத நக்கீட்டு அப்புறமா வந்து தொட்ரா பாக்கலாம். நான் சிக்கி முக்கிடா, என்ன உரசனா நெருப்பு வரும்... ஆனா நான் எரியமாட்டேன். நீ சின்ன ஈதாண்டா. இந்தத் தீமேல மொய்க்கப் பாக்கறியா முடியாதுடா.”

மிரளமிரள விழித்து அதிர்விலிருந்து மீள முடியாமல் தடுமாறினான். அவனிடமிருந்த மிருகவேர் மெல்ல கருகிக்கொண்டே வந்தது. அவனது பிசாசும் சோர்ந்துபோனது.

யாரிவள் கொற்றவையா, சுடலியா, இடமுலை அறுத்தெறிந்து எரிநகர் கண்டு எக்களித்த கண்ணகியா..

“உங்கள பனிக்குடத்துல பத்து மாசம் பாதுகாப்பா வச்சி வெளியவிட்டா அதுலேயே நீச்சலா..”

மருள் முற்றுகிறது. தரையில் படுத்துத் தாறுமாறாய்ப் புரள்கிறாள். தரையில் படிந்திருந்த மஞ்சள் தூள் உடலெங்கும் அப்பி மாகாளியைப் போல் ஓலமிடுகிறாள். மில்லெங்கும் ஓடிஓடி மூச்சிறைக்க வலம் வந்து தன் புடவையை உருவி வீசுகிறாள். ஒரு மூட்டை மீது சாய்ந்து மூச்சிறைக்க தன் கச்சையை அவிழ்த்து வீசுகிறாள். “வாடா வா, இதுதானே உனக்கு வேணும்” என்றழைக்கிறாள். இருமை நிலையில் தலையைப் பிய்த்துக்கொண்டு அவளின் பாதி நிர்வாணத்தில் மீண்டும் சபலம் முளைக்க மெதுவாகவும் அச்சம் மேலிடவும் அவள் மீது படரத் தொடங்குகிறான்.

அவளது செழித்து வெளுத்த மார்பில் குத்தப்பட்டிருக்கும் பச்சையைப் பார்க்கிறான். அது “டேய் நான் உன் அம்மாடா” என்று பார்த்தவுடன் பட்டென்று எழுந்து ஓடினான். தூரத்திலிருந்த அவளது ஆடைகளை எடுத்துக்கொண்டு கையில் ஒரு எலுமிச்சைப் பழத்தையும் எடுத்து ஓடி வந்து ஆடைகளை அவள் மீது போர்த்திவிட்டு எலுமிச்சையை அவளது கைகளில் திணித்துவிட்டு அவள் காலடியில் சாஷ்டாங்கமாய் விழுந்து அவள் பாதம் பிடித்து அழுது வணங்கி எழுகிறான்.

முழு எலுமிச்சைப் பழத்தையும் அப்படியே வாயில் போட்டு மென்றுவிட்டு மெல்ல மருள்நீங்கி சாந்த சொரூபியாகிறாள். சுற்றும் முற்றும் பார்க்கிறாள்.. ஆடைகளைத் திருத்திக்கொண்டு ரங்கருவை அசட்டைச் சிரிப்புடன் ஏறஇறங்கப் பார்த்துவிட்டு சட்டரை நோக்கி முன்னேறுகிறாள். அவசரமாகவும், பவ்யமாகவும் ஓடிச்சென்று சட்டரைத் திறந்துவிடுகிறான்.

****

பின்னொரு நாளில் சாக்கியின் பொரணிசபை ஒன்றுகூடியது. திண்ணையில் சூழ்ந்திருந்த பெண்களை நெருக்கமாக அழைத்துக் காதோடு குசுகுசுவென்று இச்செய்தியைக் கூறுகிறாள்.

“அந்த ஈனப்பய.. வாத்தி இருக்கானே.. அதான்.. அதே வேலயா திரியறானே.. இன்னைக்கும் அவங்கிட்ட எட்டாங்கிளாஸ் பொன்னு ஒன்னு மாட்டிக்கிச்சி.”

“அய்யோ அக்கா அப்பறம்..”

“கொழந்தையும் ரொம்பப் போராடியிருக்கா.. கடைசியில ரெண்டு கையெடுத்துக் கும்புட்டுட்டுக் கொழந்த பாம்பு படமாட்டும் கைய தூக்கிக் காட்டியிருக்கா.. அவ்வளவுதான்.. துண்டக் காணோம் துணியக் காணோம்னு தலதெறிக்க ஓடியிருக்கான்.”

“அப்புடி என்னக்கா ஆச்சி?”

“புள்ளையோட கையில இடும்பின்னு பச்ச குத்தியிருந்திருக்கு.”

●

**இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை**




கயப்பாக்கம் இரா.இரமேசு

# கள்ளப்பா

## 1. அன்ன நடையாளின் அறிமுகம்

அடர்ந்த தென்னந்தோப்பு. எங்கு முடிகிறது எனத் தெரியாத நீண்ட மலை. அதனருகில், ஒற்றையடிப்பாதை. வெகு தூரத்தில் வானத்தோடு முட்டிமோதும் மேகக்கூட்டம். ஆங்காங்கே தேங்கி நிற்கும் மழை நீர். ஓடிவரும் மழை நீரைத் தேக்கிவைக்கும் அழகிய ஏரி. வெள்ளைக் கோடுகள் கிழித்தாற்போல் நீண்ட ஏரிக்கரை. எங்கும் பசுமை.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல்வெளி. மாடு பூட்டி, கலப்பை கட்டி, சேடை ஓட்டும் மனிதத் தலைகள். சேற்று வயலில் மண்புழுவைக் கொத்தித் தின்னும் வெள்ளை நாரைகள். மதகு வழியே ஓடும் ஏரி நீர். துள்ளிக் குதிக்கும் கெத்திலி மீன்கள். ஆரவாரமின்றி அமைதி தளும்பும் இயற்கைச் சூழலோடு கண்ணுக்குக் காட்சியளித்தன, கரும்புச் சோலைத்தட்டால் வேய்ந்த குடிசைகள். விளைநிலத்தின் வரப்புகள் ஒவ்வொன்றும் பெருத்து இருக்கும். சோலைவனமான மலையடிவாரக் குடிசையில் ஆடு, மாடு, கோழிக் குஞ்சுகள் கூவிக் குலாவின.

இதைத்தான் தினமும் காலையும் மாலையும் கண்ணுக்குள் உள்வாங்கி, மனதுக்குள் தேக்கி வைத்து, காலடியால் தடம் பதித்து, நடந்து பழகினான் ரவி.

பழகிப்போனது ஒற்றையடிப் பாதை. மாலை நேரங்களில் புத்தகத்தோடு நடப்பது பிடிக்கும். ஏரிக்கரையின் மதகின் அருகில் உட்கார்ந்து படிக்க விருப்பம். ஒவ்வொரு நாளும் சூரியன் மறையும்முன் வீட்டிற்குச் செல்வது வழக்கம்.

ரவிக்கு நேரம் போவதே தெரியாது.



ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

அன்று, ரவிக்கு முன்னால் கோவணத்தோடு, துண்டைத் தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு ஒருவன், கழனி முழுவதும் நிரம்பிய தண்ணீரில், இளநாற்றை அதன் அடித்தண்டு உடையாமல் இரு கைகளால் சீராய்ப் பறிக்கும் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவரது எண்ணம் எங்கும் சிதையவில்லை. அவரது கவனம் எதை நோக்கியும் அலையவில்லை. ஒட்டுமொத்த உடலும் உள்ளமும், செயலும் மண்ணில் இருந்து இளநாற்றைப் பறிப்பதிலேயே கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்.

சீரான வேகத்தில் இரு கைகள் இயங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், புத்தகத்தை மூடினான். கண்களை அவர் மீது அப்படியே பதியவைத்தான். அவரின் செயல் ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் உருவாக்கியது. மெல்ல எழுந்தான். நாற்றங்கால் நோக்கி நடந்தான். அவரது கவனம் கரையில் நின்று இருக்கும் ரவியை யாரென்று பார்ப்பதில் இல்லை. நிலத்தில் வேரூன்றியிருக்கும் நாற்றைப் பறிப்பதிலேயே இருந்தது.

இரை தேடி முடித்த பறவைகள் வரிசையாய்க் கூடுகள் அடையப் பறந்தன. மெல்ல சூரியன் மேற்குத் திசையில் மறைந்தது. சில்லெனக் காற்று அவன் கன்னம் தொட்டு ஓடியது. கார்த்திகை மாதம். மழையும் தூரலும் சாரலும் மாறிமாறி மண்ணை நனைத்துக்கொண்டிருந்தன. எங்கும் பசுமை. வரப்புகளில் இருந்து கழனி காடுகள் வரை வீடுகளிலிருந்து ஏரிகள் வரை தண்ணீர் தேங்கியிருந்தது.

ரவி பார்த்து நடக்க வேண்டிய அவசியமில்லை. தட்டுத்தடுமாறி விழுந்துவிட்டாலும் காயப்படுத்தும் அளவுக்கு இந்தப் பூமி மோசமானதும் இல்லை. இப்படித்தான் ஒவ்வொரு நாளும் சூழலைக் கண்ணுக்குள் உள்வாங்கி நடந்து கடந்தான்.

புத்தகம் அவன் தோழன். இயற்கைக் காட்சி தோழி. இரண்டும் நல்ல நண்பர்கள். பார்த்து ரசித்து ஏரிக்கரையின் ஒற்றையடிப் பாதையில் நடக்க, அப்பொழுது, "கள்ளப்பா" என்று ஒரு பெண் யாரையோ அழைக்கும் குரல் கேட்டது. யாரைக் கூப்பிடுகிறாள், எங்கிருந்து கூப்பிடுகிறாள், எந்தத் திசையிலிருந்து குரல் வருகிறது என்று தெரிந்துகொள்ள சற்று திரும்பினான்.

திரும்பிப் பார்த்தபோது.. அந்தக் குரல் ஒரு அழகிய தேவதையின் குரல். நாற்றங்காலில் நாற்று பறித்துக்கொண்டிருந்த கோவணம் கட்டிய மனிதனின் பெயர்தான் கள்ளப்பா. அவரைத்தான் கூப்பிடுகிறாள் என்பதைப் புரிந்துகொண்டு அங்கேயே நின்றுவிட்டான். இன்னொரு முறை உரக்கக் கூவி அழைத்தாள். திரும்பிப் பார்த்தார். பேசவில்லை.

வேகமாக அவரது இரு கைகள் செயல்பட்டுக்கொண்டிருந்தன. ஒரு கையை மட்டும் தூக்கி அசைத்தார், "போ போ" என்பதுபோல். அதைப் புரிந்துகொண்டவள் "நான் போறேன், நீங்க சீக்கிரமா வாங்க. பொழுது போகுது. மீதிய நாளைக்குப் பார்த்துக்கலாம்," என்று பதில் சொல்லிவிட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் திரும்பி நடக்கும் அழகே அழகு. விவரிக்க வார்த்தை இல்லை. அவளின் முகம் சரியாகத் தெரியவில்லை. அவள் தொலைவில் நின்று அழைத்தாள். குரல் அருமையானது. அவள் வீட்டை நோக்கி நடந்தாள். அவளின் நடை அன்னத்தின் நடையை விட அழகானது.

அவள் கைகள் வரப்பு ஓரங்களில் விளைந்திருந்த நெற்கதிர்களை உரசிக்கொண்டு சென்றன. ஊடுபயிராக வேகமாய் வளர்ந்த காராமணியில் கை வைத்துக் கிள்ளிக்கொண்டு நடந்தாள். அவள் மகிழ்ச்சியாக இருந்தாள் என்பதை அவள் உடல்மொழி காட்டியது.

மனதுக்குள் ஆசை கூடியது. அவளின் இனிமையான குரலுடைய முகத்தை அருகிலிருந்து பார்க்க முடியவில்லையே என்று இருந்தது ரவிக்கு.

அவள் உரத்துச் சத்தமிட்டுச் சொல்லிய வார்த்தை, வயலில் வேலை செய்துகொண்டிருந்த அவருக்கு மட்டும் பொருந்தவில்லை. தனக்கும் பொருந்தியதாக நினைத்துக்கொண்டான். சூரியன் மேற்கே மறைய, தனது பயணத்தை முடித்து வந்த

வழியே நடக்க, இருந்தும் அவனுக்குள் ஆசை வளர்ந்தது.

வீடு வந்து சேர்ந்தான்.

அன்று தூக்கம் இல்லை. புரண்டு படுத்தான். வயல்வெளியில் கேட்ட "கள்ளப்பா" என்ற வார்த்தை காதுக்குள் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

அந்த நடை, துள்ளிக் குதித்து ஓடும் அவளின் உடல்மொழி, முகம் தெரியாத உருவம் எப்படி இருக்கும் என்ற ஆசை, ஏன் அதைப் பார்க்க வேண்டும்? ஏன் அவளோடு பேச வேண்டும்? அவள் யாரோ? நான் யாரோ? ஏன் மனது நம்மை இப்படி வாட்டி வதைக்கிறது? இரவு முழுவதும் எண்ண அலைகளுக்கும் அவனுக்கும் போராட்டம் தொடர்ந்தது. படுத்தவுடன் தூங்கிவிடும் ரவி, அன்று எழுந்து எழுந்து உட்கார்ந்து, படுத்துப் படுத்துப் பார்க்கிறான் தூக்கமில்லை.

அன்றைய இரவு நீண்ட இரவாகவே இருந்தது. ஜன்னலின் வழியே வெளியே பார்த்தான், இருட்டாகவே இருந்தது. விடியலுக்காக மனம் ஏங்கியது. கடிகாரத்தில் மணி இரவு ஒன்றைக் காட்டியது. படித்து முடித்த பழைய கதைப் புத்தகத்தை மூடிவைத்து, புதியதாய் "அம்முச்சி என்ற அழகு தேவதை" யைக் கையில் எடுத்து புரட்ட.. வண்ணவண்ணக் காட்சி அவன் எண்ணம் போலவே, எழுத்தில் வரைந்த ஓவியமாய் விரிந்துகொண்டே இருந்தது. மெல்ல அவள் திரும்புவதுபோல், கதையின் காவிய நாயகி எழுத்தாளனின் போக்கோடு பயணிக்க, அவன் மனம் தான் பார்த்த காட்சிகளோடு, அவளின் நினைவுகளோடு ஒப்பிட்டது. அவனையுமறியாமல் புத்தகம் ஒரு பக்கத்தில், அவன் ஒரு பக்கத்தில். எப்படி பொழுது விடிந்தது என்பது தெரியாமலே போனது. காலை சூரிய ஒளி சொல்லிக்கொள்ளாமல் வேகவேகமாக மேலெழுந்து வந்தது.

****

## 2. அவளின் முகம் பார்த்து ஓவியனானேன்

அவசர அவசரமாய் எழுந்ததும், காலை ஏழு மணி. இன்னும் முப்பது வினாடிக்குள் பேருந்தைப் பிடிக்க வேண்டும், இன்னும் குளிக்கவில்லை. அம்மா கத்திச் சத்தம் போட்டாள். துரிதமாகச் செய்து முடித்து, உடையைச் சீராக அணிந்து, புத்தகத்தை எடுத்துக்கொண்டு சாப்பிடாமல் வேகமாய் "அம்மா போயிட்டு வரேன்" என்று புறப்பட்டான் ரவி.

பேருந்து நிழற்குடையருகில் நின்றான். தான் ஒரு கல்லூரி மாணவன் என்பது அங்கு வந்து நிற்கும்போதுதான் தெரிந்துகொண்டான். கல்லூரிப் பேருந்து வந்து நின்றது. வழக்கத்திற்கு மாறாக அவன் நினைவுகள் வேறெங்கோ திரிந்துகொண்டிருப்பதை



அவனால் உணர முடிந்தது. உடலை மட்டும் பேருந்து கல்லூரிக்கு எடுத்துச் சென்றது.

"நானும் ஒரு சராசரி மாணவன்தான்." ஒரு கல்லூரி மாணவன் எப்படி இருப்பான், அவனுக்குள் என்னென்ன உணர்வுகள் தோன்றும், அவனுக்குள் என்ன ஆசைகள் தோன்றும், அவையெல்லாம் அவனுக்குள்ளும்

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

இருந்தது.

மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவன். காலம் கடந்துதான் இந்த ஆசை அவனுக்குள் உருவாகியிருக்கிறது. அவனோடு படிக்கும் சக தோழிகளுடன் சரியாகவே பழக்கம் உண்டு. அப்போதெல்லாம் கூட இது மாதிரியான ஆசைகள் தோன்றியதில்லை. “ஏரிக்கரையில், ஒரு வார்த்தையில், முகம் தெரியாத அந்த உடல்மொழியில், எப்படி நான் கவர்ந்திழுக்கப்பட்டேன்,” மனதுக்குள் புலம்பினான். இந்த மாற்றம் அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

ஒற்றை நோட்டுப் புத்தகத்தை ஆள்காட்டி விரலின் மையப்பகுதியில் வைத்துக்கொண்டு, சுற்றிக்கொண்டே கல்லூரிப் பேருந்திலிருந்து இறங்க, வாசப்படியில் சக நண்பர்கள் அவனை வரவேற்றார்கள். நேற்றைய ஆரவாரம் இன்று குறைவாகத்தான் இருந்தது.

“என்னடா ஒரு மாதிரியா இருக்க?” என்று கேட்க, பதில் சொல்லத் தெரியவில்லை. இப்பொழுது சொல்லவும் முடியாது. உறுதிப்படுத்தப்படாத எந்த ஒரு சொல்லையும் முன்கூட்டியே சொல்லிவிட்டால், அதில் தோல்வி அடைந்துவிட்டால் பெருத்த அவமானம். “ஒன்னுமில்லடா” என்று சொல்லிக்கொண்டே வகுப்பறைக்குள் நுழைந்தான்.

வழக்கம்போல் பேராசிரியர்களின் வார்த்தை ஜாலங்கள், அறிவுரைகள், நண்பர்களின் அரட்டைகள், கேலிக் கூத்துகள், சக தோழிகளின் உரையாடல்கள். கிண்டலோடும் கேலிப் பேச்சுகளோடும் முடிந்தது அன்றைய நாள். மாலை மூன்று மணிக்குப் பேருந்தில் ஏறினான். பேருந்து மெதுவாகச் சென்றது. மனம் வேகமாகப் பயணித்தது. வீடு போய்ச் சேர்ந்தவுடன், உடனே ஒற்றையடிப் பாதையில், மலை அடிவாரத்தில் உட்காரவேண்டும் என்று அவன் மனம் வேகவேகமாகத் துடித்துக்கொண்டிருந்தது.

அதிக எதிர்பார்ப்பில் மனம். நடையில் வேகம். சீராய்ச் சீவிய தலைமுடி. கவர்ந்திழுக்கும் ஆடை. இன்று அவனுக்குள் மாற்றம் தெரிய, புத்தகத்தைப் படித்துக்கொண்டே ஒற்றையடிப்பாதையில் நடக்க ஆரம்பித்தான். இயல்பாய் இயற்கையை ரசித்துப் பழகியவன், இன்று இயற்கையை உதாசீனப்படுத்தும் சுயநலவாதியாக மாறிவிட்டான்.

வானம், பறவை, வளர்ந்து நிற்கும் நெல் பயிர், பச்சைப்பசேலென்று செடி கொடிகள், மேற்கே மறையும் சூரியன், இவையனைத்தும் மறந்துபோனான். அவன் நினைவுகளில் ஏரிக்கரை, ஏரிக்கரையின் மதகு மட்டுமே கண்ணுக்கும் எண்ணத்திற்கும் தெரிந்தன. வேகவேகமாக நடந்து மதகின் அருகில் உட்கார்ந்தான்.

புத்தகம் கையில் இருக்கிறது. படிக்க மனம் இல்லை. அந்த நேரத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தான். அதிக நீர் நிறைந்த கழனி. முடிக்கப்படாத வேலை. கள்ளப்பா நாற்றை இரு கைகளாலும் ஒரே சீரான வேகத்தில் எந்தக் கவனச்சிதறலும் இல்லாமல் பறித்துக்கொண்டிருந்தார். நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. சூரியன் மெல்ல மறையத் தொடங்கியது. பறவைகள் கூடுகளை நோக்கிப் பறக்கத் தொடங்கின. வயல்வெளிப் பூச்சிகள் தனது சத்தத்தை அதிகரிக்கத் தொடங்கின. மனித நடமாட்டம் குறைந்தது. இருள் வெளிச்சத்தைக் கவ்வியது.

அவன் எதிர்பார்த்த அந்தக் குரல், மீண்டும் கேட்க ஏங்கித் தவித்த அந்தக் குரல், இன்று எப்படியாவது பார்த்துவிடலாம் என்ற அந்த உடல் மொழிக்குச் சொந்தக்காரி இன்று வரவில்லை. பெருத்த ஏமாற்றம். இப்பொழுது வெளியில் இருட்டு. உள்ளுக்குள் ஏமாற்றத்தின் இருட்டு அதிகம் சூழ்ந்துகொண்டது.

ஏதோ ஒரு வலி. அந்த வலியைத் தாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். நேற்று எதிர்பார்ப்போடு தூக்கத்தை இழந்தவன், இன்று ஏமாற்றத்திற்காக மற்றொருநாள் தூக்கத்தையும் இழக்கப்போகிறான். மனசு மாறுபட்ட கோணத்தில் பயணிக்கத்

தொடங்கியது.

இடத்தை விட்டு எழுந்து, வலியோடு நடக்க..

சனிக்கிழமை கல்லூரிக்குச் செல்லவில்லை. காலதாமதமாக எழுந்தான். என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை. அவனைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் மனமும் அவனுக்கில்லை. எல்லாமே அதனதன் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் நடப்பதுபோல் தோன்றியது.

வழக்கமாக மாலை நேரங்களில் புத்தகத்தோடு புறப்படுபவன், வழக்கத்துக்கு மாறாக மதியம் ஒற்றையடிப் பாதையில் புத்தகமில்லாமல் புறப்பட்டான். ஆங்காங்கே தென்படும் மனிதத் தலைகள், மனிதப் பேச்சுக்கள், ஆடுமாடு மேய்ப்போரின் கூச்சல். அது ஒரு மழைக்காலம். எங்கும் தேங்கி நிற்கும் மழைநீர் மனதுக்குள் குளிர்ச்சியைத் தந்தது. அவனுக்கு அந்தக் குளிர்ச்சி நேற்று அடைந்த ஏமாற்றத்தினால் சுடுவதுபோல் இருந்தது. முதல்முறையாய் அவனது பாதை மாற்றியது.

மலையடியோரம், ஒத்தையடிப்பாதை. அவள் வீட்டின் அருகில் நடந்தான். பெரியதாய் வசதிகள் இல்லை. வயக்காடும், ஆட்டுப்புழுக்கை நாற்றமும், மாட்டுச் சாணத்தின் சகதியும், கோழிக் குஞ்சுகளின் கீச்சுக் குரலும், சிதைந்த குப்பையும், கழுவாத பாத்திரங்களும், அழுக்குப் படிந்த ஆடையும் அந்த இடத்தின் அடையாளங்கள்.

ஒவ்வொரு வீடும் இப்படித்தான் இருந்தது. இந்த வாழ்வியல் முறை அவர்களுக்குப் பழக்கப்பட்டது. மண்ணை நம்பி வாழ்பவர்கள். மண்ணிலேயே காலத்தைக் கழிப்பவர்கள். பொழுதுபோக்கு இவர்களுக்குக் கிடையாது. உழைப்பு. உழைத்துக்கொண்டே இருப்பதுதான் அவர்களது வாழ்வியல் முறை என்பதை அவர்கள் வாழ்க்கையிலிருந்து புரிந்துகொண்டான்.

அவளைக் கண்கள் தேடின. மெதுவாக நடந்தான். அப்போதுதான் “நான் போயிட்டு வரேன்” என்று ஒரு குரல், அதே குரல். இரண்டு நாட்களுக்கு முன்னால் வயக்காட்டில் கேட்ட “கள்ளப்பா பொழுது போகுது, சீக்கிரமா வீட்டுக்கு வா” என்ற குரலோடு ஒத்த குரல்.

உருவம் எங்கே? தெரியவில்லை. எங்க இருக்கிறாள்? அவளின் உருவத்தைக் கண்டுபிடிப்பதற்காகத் தேவையில்லாமல் அந்த வீட்டின் அருகில் நின்றான். குரல்தான் கேட்டது. உருவம் தென்படவில்லை. “சரிமா, சீக்கிரம் போயிட்டு வா, கள்ளப்பாவுக்குச் சாப்பாடு கொண்டு போகனும். சீக்கிரம் வந்துரு” என்று சொன்னவளின் குரலும், எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை.

தேவையில்லாமல் அங்கே நிற்பது தவறு எனத் தோன்றியதால், கொஞ்சம் மெதுவாக நடக்க ஆரம்பித்தான். இப்போது குறிக்கோள் இல்லாமல் ஒரு பயணம். இலக்கு இல்லாமல் ஒரு பயணம். நோக்கமில்லாமல் ஒரு பயணம். வெற்றி இல்லாமல் ஒரு பயணம். அதுவும் இந்த மதிய நேரத்தில் எங்கே முடிப்பது என்று தெரியாமல் ரவி பயணித்துக்கொண்டிருந்தான்.

பயணத்தின் திசையில் மாற்றம். காலம் மாறியது. இடம் மட்டுமே ஒன்று. கொஞ்சம் வெயில். வழக்கமாக உட்காரும் அந்த ஏரிக்கரையில் மதகின் அருகில் உட்கார்ந்தான். நீர் நிறைந்த நாற்றங்காலில் நாற்றுகள் எல்லாம் பறிக்கப்பட்டு வேலையும் முடிந்துவிட்டது.

ஒடிந்து விழுந்த இள நாற்றுகள் மட்டுமே தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தன. ஆதரவற்ற நாற்றங்கால் அவன் கண்ணுக்குத் தென்பட்டது. அதை ஒட்டிய வயல்வெளியில் தண்ணீர் விழும் சத்தம் இனிமையாகத்தான் இருந்தது. ரசிப்பதற்கு மனதில்லை. அவன் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வழக்கமான காட்சிதான். மனம் வெறுமையில் தவித்தது. சொல்வதற்கு ஒன்றுமில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான்.

அதே குரல் இப்பொழுது சற்று சத்தமாக ஒலித்தது.

“கள்ளப்பா எங்க இருக்க?”

“கள்ளப்பா..”

அங்குமிங்கும் சத்தமாகக் கத்தினாள். இங்கும் அங்குமாக அலைந்து பார்த்தாள். எங்கும் இல்லை. அந்த வரப்புகளில் அன்று நடந்த நடை இன்று அவளிடம் இல்லை. அவளின் உடல்மொழியில் பதட்டம் இருந்தது. ஏதோ ஒன்றை இழந்துவிட்டுத் துடிப்பதை அவளின் நடையும் அவளுடைய பரபரப்பும் காட்டின.

வரப்புகளில் மலர்ந்து சாய்ந்த நெற்கதிர்களைக் கிள்ளிக்கொண்டு நடந்த அந்த நடையில், தன் பாவாடையை இடது கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு வேகமாக நடந்தாள்.

ஏரிக்கரையில் மதகின் அருகில் அமர்ந்திருந்த அவனைப் பார்த்து “இந்தப் பக்கம் எங்க கள்ளப்பா வந்தாரா?” என்று கேட்டாள். சற்று நிமிர்ந்து பார்த்தான். அவனிடத்தில் பேச்சில்லை. அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற மனநிலையில் ரவி இல்லை. ஒட்டுமொத்த நினைவுகளும் அவனுக்குள் அப்படியே நின்றுபோனதாக, ஒரு அமைதி.

கருத்த முகம். அறியாமையின் அமைவிடம். நல்ல உயரம். சீவி முடிக்காத தலை மயிரை அள்ளி எடுத்துக் கொண்டையிட்ட அழகு. பாவாடைக்குக் கச்சிதமான மேலாடை. சின்னதாய் இரு புருவத்துக்கிடையே சிகப்பு நிறத்தில் ஒரு பொட்டு. அவளை ரவி பதட்டத்தோடுதான் பார்த்தான். மீண்டும் அதே கேள்வியை அவனிடம் கேட்டாள், “இங்கே எங்க கள்ளப்பா வந்தாரா?” என்று.

“கழனியிலே நாத்து பறிச்சிட்டு இருந்தாரு, அவர பார்த்தீங்களா?” என்றாள்.

“இல்லையே, யாருமே இங்கு வரலையே”ன்னு ரவி சொல்ல..

“இங்கதான் வேலை செய்திட்டு இருந்தாரு. எங்கேயும் இல்லை” என்றாள். சொல்லிவிட்டு அவள் வேறு திசையில் நடக்க ஆரம்பித்தாள். இப்போது அவனுக்கு அங்கு உட்காரப் பிடிக்கவில்லை. அங்கிருந்து எழுந்தான். புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, அவனும் வேறொரு வரப்பில் நடக்க ஆரம்பித்தான்.

வேறு எங்கேயாவது அவர் இருக்கிறாரா என்று பார்க்க சற்று தூரம் நடந்து சென்றான் ரவி. திடீரென ஒரு அழுகுரல் சத்தம். “கள்ளப்பா” பதறினாள். துடித்தாள். பாவாடையை ஒரு கையால் எடுத்து இடுப்பில் சொருகினாள். வேகவேகமா மதகின் கீழே இறங்கினாள்.

ரவி ஓடிப் பார்த்தான். கால்வாயிலிருந்து அழுதுகொண்டே கள்ளப்பாவைக் கரைக்கு இழுத்துவந்து உட்கார வைத்தாள். அவரால் உட்கார முடியவில்லை. கைகால்கள் எல்லாம் விரைத்திருந்தன. ரவியும் அவசர அவசரமாகக் கீழே இறங்க, அவள் தன்னுடைய இரு முட்டிக்கு மத்தியில் அவருடைய தலையைச் சாய்த்து வைத்தாள்.

ரவி அவரின் ஒரு கையைப் பிடித்துத் தேய்க்க ஆரம்பித்தான். அவ்வளவுதான். “அழாதீங்க” என்றான்.

“கொஞ்சம் இருங்க, அவரை நீங்க தலையில பிடிங்க, நான் கால பிடிச்சுக்கிறேன்”ன்னு சொல்லிவிட்டு, அவளின் முகம் பார்த்து “கொஞ்ச தூரம் மேலே தூக்கிக்கிட்டுப் போயிடலாம்” என்று சொன்னான். இருவரும் அவரைத் தூக்கிக்கொண்டு கவனமாகக் கரைக்கு மேலே சென்றனர்.

அதற்குள் வீட்டிலிருந்த எல்லம்மாவின் அம்மாவும் ஓடி வந்துவிட்டாள்.

“என்ன ஆச்சி, சொன்னா கேட்கமாட்டார் இந்த மனுஷன். குடிக்காதே குடிக்காதேன்னு சொன்னா கேக்குறதில்ல. கொஞ்சம் அசந்தா போதும், வேலைக்கு வரேன்னு சொல்லிட்டு எங்கேயாவது குடிச்சிட்டு

விழுந்து கிடக்கிறது."

அவள் புலம்ப ஆரம்பித்தாள்.

"ஒன்னுமில்ல பயப்படாதீங்க" ஆறுதல் கூறினான் ரவி.

கை கால்களை நன்றாகத் தேய்த்துவிட்டு முகம், உடல் எல்லாவற்றையும் துடைத்துவிட்டு, ரவி மடியின் மீது அவர் தலையைச் சாய வைத்து, அவன் வைத்திருந்த புத்தகத்தால் விசிறிவிட்டான். இருவரும் அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு என்ன சொல்வதென்று புரியாமல் கண் கலங்கினார்கள்.

"கொஞ்சம் தண்ணி கொண்டு வாங்க, தாகமாக இருக்கும். தண்ணி குடிச்சாருன்னா கண்விழிப்பாரு" என ரவி சொல்ல, அவள் வேகவேகமாக மதகுக்குக் கீழே தண்ணீர் எடுத்துவர இறங்கினாள். இரு கை குவித்துத் தண்ணீர் அள்ளிக்கொண்டு மேலே வந்தாள். கையின் விரல்களின் ஓட்டை வழியே தண்ணீர் வழிந்தோடியது. மிச்சத் தண்ணீரைக் கள்ளப்பாவின் வாயில் திணித்தாள். மெல்ல அவர் வாய் அசைத்தார். கன்னத்தில் தட்டினான். கண்விழித்தார். இப்பொழுது அவர்களுக்கு நிம்மதி வந்தது.

"உடனே எழுந்து நடக்க முடியாதுங்க. நீங்க போங்க, நான் தோள்ல தூக்கிட்டு வரேன்," என்றான் ரவி.

"கனமா இருப்பாருப்பா, உன்னால ஒண்டியா முடியாது, நானும் ஒத்தாச பண்றே"ன்னு வயசான பெண்மணி சொல்ல, இருவரும் ஒரு பக்கமாகப் புரட்டி, எழுப்பி நிற்க வைத்தனர். கள்ளப்பாவை லாவகமாகத் தோளில் சுமந்துகொண்டு மெல்ல நடந்தான். அவர்களிருவரும் பின்பக்கமாகப் பிடித்துக்கொண்டு பின்தொடர்ந்து வந்தார்கள்.

குடிசைக்கு வந்து கயிற்றுக்கட்டிலில் படுக்க வைத்தான்.

"நீ இல்லன்னா அங்கிருந்து இவர கொண்டு வந்திருக்க முடியாதுப்பா" என்றாள்.

"இதுல என்னங்க இருக்கு. இது சின்ன ஒத்தாச."

"இதகூட யாருப்பா செய்வாங்க" என்றவள், "எல்லம்மா, தம்பிக்கும் தண்ணி கொண்டுவந்து கொடு" என்றாள்.

"எல்லம்மாள்" ன்னு அவ அம்மா கூப்பிட்டதும், மெல்ல ரவி திரும்பிப் பார்க்க, அவள் அவசர அவசரமாய் உள்ளே நுழைந்தாள்.

ரவியின் பார்வையில் பெயரைத் தெரிந்துகொண்ட மகிழ்ச்சியே இருந்தது.

உள்ளிருந்து வெளியே, ஒரு குவளையில் தண்ணீரோடு அவன் முகம் பார்த்து நீட்டினாள்.

"இந்தாங்க."

அவளிடத்திலும் எந்த எதிர்பார்ப்பும் இல்லை.

அவள் முகம் பார்த்து, அவளின் அழகைக் கண்ணுக்குள் வாங்கி மனதுக்குள் செலுத்தும் நேரம் இது இல்லை என உணர்ந்து, அந்தப் பொட்டு, அவளின் புருவம், அந்தக் கொண்டை.. அவள் இருக்கும் இந்த நிலையில் அவள் ஒட்டுமொத்த அழகையும் ரசிப்பதற்கு ரவியின் மனது இடம் தரவில்லை. தலையைக் கீழே குனிந்து வாங்கிக்கொண்டு, அண்ணாந்து குடித்துவிட்டு, பாத்திரத்தைக் கீழே வைத்தான்.

"கவனமா பார்த்துக்குங்க, பிறகு வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் இருந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

எல்லம்மாவின் அம்மா "இதே மாதிரிதான் அடிக்கடி காணாமல் போய்விடுவார், பேச மாட்டார், நம்ம என்ன சொன்னாலும் கேட்க மாட்டார். தினமும் குடிக்கிறாரு, மனசுல உள்ளது என்னென்னு சொல்லிட்டா கூட காயத்துக்கு மருந்து போடலாம். என்ன காயமுன்னு தெரியலையே, எங்களால மருந்து கொடுக்க முடியல," என்றாள்.

புலம்பித் தள்ளிய அந்த அம்மாவின்

வார்த்தையிலிருந்து அவருக்குள் ஏதோ ஒரு மறக்க முடியாத சோகம் உள்ளுக்குள் வாட்டிக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் புரிந்துகொண்டான் ரவி.

“போயிட்டு வரேங்க”ன்னு, சற்று திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் ஒரு களை. அந்தக் களையான முகத்தில் மெல்லிய சிரிப்பு. இப்போது அவனது மனதுக்குள் கவலை மறந்து, பாரம் குறைந்தது, அழுத்தம் நீங்கியது போல் இருந்தது. கையில் புத்தகத்தை எடுத்து, வலது கையின் ஆட்காட்டி விரலை வைத்துச் சுருட்டிக்கொண்டு ஒத்தையடிப் பாதையில் கம்பீரமாய் நடந்தான் ரவி.

வீடு போய்ச் சேரவும், பொழுது சாயும் புகைச்சல் மூட்டத்தின் நடுவே சமைத்துக்கொண்டிருந்தாள் அம்மா.

ரவியின் மனதுக்குள் பட்டாம்பூச்சி பறப்பது போலவே இருந்தது. ஒன்றும் புரியவில்லை. வீட்டிலிருந்து தெருவுக்கும் தெருவிலிருந்து உள்ளேயும் உள்ளிருந்து தோட்டத்துக்கும் சென்றான். தோட்டத்திலிருந்து எங்கு செல்வதெனத் தெரியாமல் நின்றான். எங்கு சென்றாலும் மனது அவனுக்குக் கட்டுப்பட மறுத்தது.

முதல் நாள் அவளின் முகம் பார்க்க முடியவில்லையே என்று தூக்கம் இழந்தவன், இரண்டாம் நாள் அவளைப் பார்க்க முடியவில்லையே என்று அத்தனையும் இழந்தான். இன்று ஒட்டுமொத்த முகத்தையும் பார்த்த அழகில், இழப்பதற்கு என்ன இருக்கிறது? என்று அவன் மனது கேள்வியால் துளைத்தெடுத்தது. கண்விழித்தே இரவைக் கழித்தான்.

படுக்கும் இடத்தின் பக்கத்தில், நோட்டுப் புத்தகத்தோடு பேனாவையும் வைத்துக்கொண்டான். அவனுடைய கற்பனைக் குதிரை சிறகடித்து வேகமாக ஓடத்தொடங்கியது. எதையெதையோ எழுதினான். மனம் போன போக்கில் கிறுக்கினான். அவள் புருவத்தையும், இரு புருவத்துக்கு மத்தியில் உள்ள சின்னச் சிகப்பு பொட்டையும், அவள் இடது கையால் சீரற்ற ஆடையைச் சீர்படுத்த, வாரியெடுத்து இடுப்புக்குள் சொருகுவதையும் கவிதையாக்கி, அள்ளி முடித்த கூந்தலை அழகான ஓவியம் ஆக்கினான். எல்லாவற்றையும் ஒரு அழகான நோட்டுப் புத்தகத்தில் பாதுகாத்து வைத்தான்.

****

### 3. கள்ளப்பா’ன்னா ?

மறுநாள் வேலை நிமித்தமாகப் பக்கத்திலுள்ள ஊருக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. அதற்காகத் தயார்படுத்திக்கொண்டு, பேருந்து ஏறும் இடத்திற்கு வந்து நின்றான் ரவி. ஒரே ஒரு பேருந்துதான். குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும்தான் வரும். அவனும் காத்திருக்க,



பேருந்து வந்தது. ஏறுவதற்கு முன்னால், பத்து பதினைந்து பேர் வரிசையாக பெண்களும் ஆண்களும் கைநிறைய மூட்டை முடிச்சுகளோடு இறங்கினார்கள்.

ரவியும் அவர்கள் இறங்கும் வரை காத்திருந்து, கடைசியாக வண்டியில் ஏறுவதற்கு முன்னால், ஒரு பெரியவர் கேட்டார்.

“தம்பி இங்கே கள்ளப்பா வீடு எங்க இருக்கு?” என்றார். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதைத் தெரிந்துகொண்டுதான் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று உணர்ந்துகொண்டு,

“இந்தப் பக்கமா போங்க. கழனிகாடு தெரியும். ஒத்தையடிப் பாதை வரும். ஒத்தையடிப் பாதையிலே போங்க, ஏரிக்கரை வரும். ஏரிக்கரைக்கு முன்னாடிதான்

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

கள்ளப்பா வீடு" என்றான்.

"சரிப்பா தம்பி" என்று சொல்லிவிட்டு, பெரியவரைப் பின்தொடர்ந்து அத்தனை பேரும் பேசிக்கொண்டே நடந்தார்கள். வண்டி ஏறினான். புறப்பட்டது.

மனதில் கேள்வி அவனுக்குள் எழுந்துகொண்டே இருந்தது.

"அவரை ஏன் எல்லாருமே கள்ளப்பான்னு கூப்பிடுறாங்க? கள்ளப்பான்னா என்ன? இதுவரையும் இதுமாதிரி பேரைக் கூப்பிட்டுக் கேட்டதில்லையே.." என்று ரவி மனதுக்குள்ளே கேட்டுக்கொண்டான். யார்கிட்டயாவது இது பத்திக் கேட்டுத் தெரிஞ்சுக்கணுமுன்னு மனசு சொல்லியது. பேருந்து வேகமாக முன்னோக்கி நகர்ந்தது. அவன் மனம் அவளைப் பற்றிய சிந்தனையிலும், கள்ளப்பாவின் உடல் நலத்தைப் பற்றியும், அவருக்கு ஏன் இப்படிப்பட்ட பெயர் வந்தது என்பதைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவலாக இருந்தது.

ஒற்றையடிப் பாதையில் வந்தவர்கள் கள்ளப்பாவின் வீட்டில் நுழைந்தார்கள். ஓரளவுக்கு எழுந்து உட்காரும் அளவிற்கு உடல் நிலையில் முன்னேற்றம் இருந்தது. உறவுகளை எல்லாம் பார்த்தவுடன், அவர் உற்சாகம் அடைந்தார். கையெடுத்துக் கூப்பிட்டு சைகையால் உட்காருங்கள் என்று சொன்னார்.

வந்தவர்கள் எல்லோரும் அவருடைய உடல்நிலை பற்றி விசாரிக்கத் தொடங்கினர். மூட்டை முடிச்சுகளோடு வந்த பெரியவர்கள் பையில் இருந்த பொருட்களை வெளியே எடுத்துத் தட்டில் வைத்தார்கள். கூட்டத்தில் இருந்த பெரியவர் தட்டில் உள்ள எல்லாப் பழங்களையும் வெற்றிலைப்பாக்குடன் கள்ளப்பாவிடம் கொடுத்தார்.

"பொண்ணு கேக்க வந்திருக்கோம். உங்களுக்கு சம்மதம்னா எங்களுக்கும் சம்மதம். நீங்க தேதிய சொன்னீங்கன்னா சட்டுபுட்டுன்னு முடிச்சிடலாம்," என்றார்.

முத்தம்மாள் தண்ணீர் கொடுத்தாள். பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு நலம் விசாரித்தவர்கள், கொஞ்ச நேரம் கழித்து "எல்லம்மாவ வரச்சொல்லுங்கள்" என்றார்கள்.

எல்லம்மாவுக்கு இது புதியது. எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் அவர்கள் முன்னால் நிற்கச் சொல்லும்போது அவளால் நிச்சயம் ஒன்றும் செய்ய முடியாதுதான். வந்திருந்த அனைவரும் உள்ளிருந்து வெளியே வந்த எல்லம்மாவைப் பார்த்தனர்.

"மூக்கும் முழியுமா லட்சணமா இருக்கா, கலையா எங்க ஊரு மாரியம்மன் சிலை மாதிரி அழகா இருக்கா," என்று ஒருத்தி சொன்னவுடன், அவள் முகத்தில் சின்னதாய் வெட்கம், மெல்லிய நூலிழை போன்ற ஒரு சிரிப்புடன் அவள் உள்ளே சென்றாள்.

எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவள் எதுவும் பேச முடியாது. முத்தம்மாள் மட்டுமே பதில் சொன்னாள். "அவரால பேச முடியாது. நான் எடுக்கிற முடிவுதான், நீங்க எந்தத் தேதியில வச்சாலும், அந்தத் தேதியில நாம முடிச்சிடலாம்," என்று உறுதிமொழி கொடுத்தாள் முத்தம்மாள்.

"அப்ப நாங்க கௌம்புறம்" என்று எல்லோரும் சம்பிரதாயத்திற்குத் தண்ணீரோடு, உடனடியாகத் தயார் செய்து வைத்திருந்த பாலைக் குடித்துவிட்டுப் புறப்பட்டார்கள். புறப்படும்போது எல்லோர் முகத்திலும் ஒரு மகிழ்ச்சி.

ரவி வேலை முடிந்தது. திரும்பிவிட்டான். பேருந்திலிருந்து கீழே இறங்கியதும், அவன் பார்த்த அதே கூட்டம் ஊருக்குப் புறப்படத் தயாரானது. வந்தவர்கள் முகத்தில் மகிழ்ச்சி. அவன் முகத்திலும் ஒரு ஆனந்தம் இருந்தது. அப்போதுதான் அவன் புரிந்துகொண்டான், அவர் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கிறது என்பதை. அவனுக்குள் இருந்த பாரம் ஒட்டுமொத்தமாய் நீங்கியது.

புதியதாய்க் கவலை தொற்றிக்கொண்டது. அவளைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்க

வேண்டும். அவளுக்கு அருகில், அவளுக்கு எதிரில், ஒருவரை ஒருவர் குறிப்பிட்ட இடைவெளியில், பார்வையில் மட்டுமே மிதமான சூட்டோடு இருக்க வேண்டும் என்று அவன் மனது சொல்லியது.

ரவி வீட்டை நோக்கி நடந்தான். மாலை நான்கு மணி. வழக்கமான நடை பயண நேரம். கை கால் கழுவி, தலை வாரி, நெற்றியில் சிறியதாகச் சந்தனத்தால் பொட்டு வைத்து, சரியான ஆடை உடுத்தி, மற்ற நாட்களை விட மனம், உடை, நடை, எண்ணம், சிந்தனை அத்தனையும் வேறுபடுத்திக்கொண்டு. அதே புத்தகம். ஒற்றையடிப்பாதை. ஏரிக்கரை மதகு. அங்கு போய் அமர்ந்துகொண்டான். இப்போது அவள் வருவாளா என்று ஏக்கத்தோடு பார்த்தான்.

காரணமே இல்லாமல் எப்படி அவள் இங்கு வருவாள் என்ற கேள்வியும் அவனுக்குள் இருந்தது. அவளின் கள்ளப்பா உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருக்கும்போது, நடவுக்காக நாற்றங்கால் தயாராக இருக்கும்போது, மாலை நேரத்தில் அவளுக்கு இங்கு என்ன வேலை என்று நினைத்துக்கொண்டான்.

அத்தனையும் பொய்யானது. ஏதோ ஒரு காரணத்தைத் தானாகவே உருவாக்கிக்கொண்டு, சின்ன வரப்பில் கருத்த முக அழகி, அன்ன நடையில் நடந்து வந்தாள். அவன் பார்த்தும் பார்க்காமல் இருந்தான். அவனுக்கு நேர் எதிரில், கரகரத்த குரலில், என்னைப் பார் என்று சொல்வது போல் இருமினாள். மெல்ல தலை தூக்கிப் பார்த்தான். அதே நேரத்தில் அவளும் அவனை நேர்படப் பார்த்தாள்.

“கள்ளப்பா எப்படி இருக்காரு” என்று கேட்க, “நல்லா இருக்கார்” என்றாள்.

“அவரு ஏன் பேசமாட்டிங்கிறாரு” ன்னு ரவி கேட்க,

“எனக்கு எதும் தெரியாது. எங்க அம்மாவுக்குத்தான் தெரியும்”ன்னு சட்டெனப் பதில் சொல்ல,

“எனக்கு ஒரே ஒரு சந்தேகம், அவர ஏன் கள்ளப்பான்னு கூப்பிடறாங்க” என்றான்.

“நான்தான் சொன்னேன்ல, எனக்கு எதுவும் தெரியாது. எங்க அம்மாதான் கூப்பிடச் சொன்னாங்க. அதனால, அவரைச் சின்ன வயசுல இருந்து கள்ளப்பான்னுதான் கூப்பிடுவேன். என்னன்னு எங்க அப்பாவுக்கும், எங்க அம்மாவுக்கும்தான் தெரியும்,” என்றாள்.

“நேத்து உங்க வீட்டுக்கு நிறைய சொந்தக்காரங்க வந்தாங்க. என்னை வழி கேட்டாங்க. நாந்தான் வழிகாட்டினேன்” என்று முகமலர்ச்சியோடு சொன்னான்.

“ஆமாம், வந்தாங்க.”

“என்ன சொன்னாங்க?”

“எனக்கு எதுவும் தெரியாது. எங்க அம்மாவுக்குத்தான் தெரியும்,” என்று மீண்டும் மீண்டும் அதே வார்த்தையை, அவள் அனைத்துக் கேள்விகளுக்கும் ஒரே பதிலைச் சொன்னாள்.

சட்டென்று கீழே இறங்கினான். சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. அவளும் அதே இடத்தில் அங்கேயே நின்று பதில் சொல்லிக்கொண்டிருந்தாள். மெல்ல அவளை நோக்கி நடந்தான். அவள் எதிர்பார்த்திருக்கமாட்டாள் இப்படியெல்லாம் நடக்குமென்று.

ரவி பாக்கெட்டில் ஒளித்துவைத்திருந்த ஒரு சாமந்திப்பூவைக் கையில் எடுத்து “இந்தா, இத தலையில வைச்சுக்கோ, உனக்கு அழகா இருக்கும்,” என்றான். அவள் எதுவும் சொல்லவில்லை. வாங்கிக்கொண்டாள்.

“மஞ்சள் சாமந்திப் பூ, கருத்த உன் முடிக்கு ரொம்ப அழகா இருக்கும்,” என்றான்.

அவளின் கலையான முகம் வெட்கத்தால் மலர்ந்தது.

மௌனம் முகத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உடலிலும் பரவத்தொடங்கியது.

அவள் செயலிழந்தாள்.

ரவி சிந்தனையை இழந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

மௌனம் நீடித்தது. பேச்சில்லை.

சட்டென்று கையில் வைத்திருந்த மஞ்சள் சாமந்திப் பூவைத் தலையில் வைத்துக்கொண்டு, வேகமாக நடந்தாள்.

ரவியின் மனதுக்குள் ஆயிரம் தும்பிகள் ஒருசேரப் பறந்தன.

மெல்ல சூரியன் மேற்கே மறைந்தது.

இருள் வெளிச்சத்தை மறைத்தது.

மனதுக்குள் பலநூறு சூரியன் வெளிச்சம் பாய்ச்சுவதுபோல் இருந்தது. பொழுது சாயும் நேரத்தில், ஒற்றையடிப்பாதையில் இடதுகையின் ஆள்காட்டி விரலின் நுனியில் புத்தகத்தை வைத்துச் சுழட்டிக்கொண்டே நடந்தான் ரவி.

****

## 4. காலமும், எல்லம்மாவும்.

கல்லூரி வாழ்க்கையின் கடைசி வருடம். இதற்குப் பிறகும் மேற்படிப்புக்காக நம்மை அனுமதிக்க மாட்டார்கள். நல்ல வேலையைத் தேட வேண்டும் என்ற எண்ணத்தில் வேலை தேட முயற்சித்தான் ரவி.

“டேய் நேத்து எங்கேயோ வெளிய போய் இருந்தியே என்ன ஆச்சு?” என்றாள் அம்மா.

“பார்க்கலாம்னு சொன்னாங்க.”

“எப்பன்னு கேட்டியா?”

“நீ முடிப்பா, முடிச்சிட்டு உடனே வந்து பாருன்னு சொன்னாங்க,” என அம்மாவுக்குப் பதில் சொல்லிவிட்டு, கல்லூரிக்குப் புறப்பட்டான்.

காலம் வேகமாக ஓடியது.

ரவியின் கடைசிப் பருவத்தேர்வு முடிந்தது.

பருவத்தேர்வு முடிந்த அடுத்த நிமிடமே, தீவிரமாக வேலை தேட ஆரம்பித்தான்.

வீணாகக் காலத்தைக் கழிக்க விரும்பவில்லை. அதே நேரத்தில் இங்கே இல்லாமல் வேறு எங்கோ ஓர் இடத்தில் இருந்துகொண்டு அவளை மறந்திருக்கவும் அவனால் முடியாது. ஒரே குழப்பத்தில் ரவியின் மனது.

குளிராய் மார்கழி, விழாவில் தை, அதிக உடல் உழைப்பில் மாசி, விளைந்ததைக் காசாக்கிய பங்குனி, இப்படி மாதங்கள் கழிந்தன.

ஒருநாள் வழக்கத்துக்கு மாறாக அவள்




ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

வீட்டுக்கருகில் சென்ற ரவியை, ”வாப்பா தம்பி, உட்காரு. நீங்க மட்டும் அந்த நேரத்தில் இல்லன்னா, அவர காப்பாத்திருக்க முடியாது. யார் செய்த புண்ணியமோ,” என்று அவளின் அன்பை வார்த்தையாகக் கொட்டித்தீர்த்தாள் முத்தம்மாள்.

இதுதான் சரியான தருணம் என அவனுக்குள் இருக்கும் சந்தேகத்தைக் கேள்வியாகக் கேட்டுவிடலாம் என நினைத்து, கேட்பதற்கும் முன்னால், அமைதியாக இருந்தான்.

“எங்க கள்ளப்பா?” என்றான்.

“இப்பதான்பா நடக்க ஆரம்பிச்சிருக்காரு. கழனி பக்கமாப் போய் இருக்காரு,” என்று சொன்னவளிடம், சிரித்த முகத்தோடு “அவரை ஏன் கள்ளப்பான்னு கூப்பிடறீங்க?”ன்னு ரவி கேட்டவுடன், முத்தம்மாள் அமைதியானாள். முகம் மாறியது. கண்கள் குளமானது. பேச்சு தடுமாறியது. இடுப்பில் சொருகி இருந்த முந்தானையை எடுத்துக் கண்ணீரைத் துடைத்து ரவியோடு பேச ஆரம்பித்தாள்.

“நான் அவரோட ஒன்னுவிட்ட தாய் மாமன் பொண்ணு. எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவார். எங்க அப்பாமேல அவருக்கு ரொம்ப உசுரு. எங்க அப்பாவுக்கும் கள்ளப்பாவுக்குத்தான் என்னைக் கொடுக்கணும்னு ஆசை. ஆனா எங்க அம்மா முடிவ மாத்திட்டாங்க. அவங்க சொந்தத் தம்பிக்கு என்னைக் கட்டி வச்சாங்க. தினக்கூலி. குடிகாரன். எல்லம்மா வைத்துல ஒன்பது மாசம் இருக்கும்போது, நிறைய குடி குடிச்சு, தொண்டவத்தி இறந்துகிடந்தான். ஒரே பொண்ணோட வாழ்க்கை இப்படி போச்சேன்னு மனசு ஒடிஞ்சுப் போயிட்டாங்க. அடுத்த அஞ்சு வருஷத்துல, அவங்க ரெண்டுபேருமே போய்ச் சேர்ந்துட்டாங்க. அக்கம்பக்கம் ஆதரவில்லாம, சொந்தபந்தம் உறவு இல்லாம, ஒத்தையா என் மகளுடன் நான் இருந்த நேரத்தில, எங்களைப் பாதுகாத்து, வாழ்க்க கொடுத்தது இந்த மனுஷன்தான். என்னையும் என் மகளையும் அவர் சொந்த வீட்டுக்குக் கூட்டிவந்து, வாழ்க்க கொடுத்தாரு. வந்த இடத்தில வரவங்க போறவங்க எல்லாம் இது யாரு, யாருன்னு கேட்பாங்க. அவரால பதில் சொல்ல முடியாது.”

முத்தம்மாள் சொல்லச் சொல்ல...

ரவி அமைதியாக உட்கார்ந்திருக்க,

“ஒரு கட்டத்த மீறி என் மகளுக்கு நான்தான் சொல்லிக்கொடுத்தேன்.” கண்ணீரோடு பேசிக்கொண்டிருக்கும்போது எல்லம்மாள் வந்ததைப் பார்த்த முத்தம்மாள் புடவையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அமைதியானாள்.

எல்லம்மாள் படபடப்பாக இருந்தாள். என்னைப் பார்த்தவுடன் அவளுக்குள் படபடப்பு குறைந்தது. பொறுமையாக அம்மாவிடம் சொன்னாள்.

“அம்மா கள்ளப்பா அதே இடத்தில உட்கார்ந்து இருக்கிறார். ஆனா குடிக்கல. அவரால் நடக்க முடியல.”

“வாங்க போயிட்டுவரலாம்” என்று ரவியும் கிளம்பினான்.

“வேண்டாம் தம்பி, நீங்க போங்க, அவரை நாங்க அழைச்சிட்டு வரோம்” என்று சொல்லிவிட்டு, அவளும், அவள் அம்மாவும் கள்ளப்பா இருக்கும் இடத்தை நோக்கி நடந்தார்கள்.

பொழுது சாய்ந்தது. ரவி பழைய மனிதனாக இல்லை. புதிய மனிதனாக அவதாரம் எடுத்தான். அவனுக்குள் அச்சமும் பயமும் குழப்பமும் எதுவுமில்லை. ஒவ்வொன்றையும் சரியாகப் புரிந்து அழகாய் ஒவ்வொரு நிலையிலும் அடுத்த படி எடுத்து வைக்கின்ற தெளிவான சிந்தனை அவனுக்குள் இருந்தது. அவர்கள் ரவியை நம்புகிறார்கள். ரவி அங்கு பழகுவதற்கு சரியான சூழ்நிலை இருக்கிறது. இனி நாம் எல்லையை மீறக்கூடாது என முடிவெடுத்து நம்பிக்கையோடு அங்கிருந்து புறப்பட்டு அவன் வீடு வந்து சேர்ந்தான்.

காலம் ஓடியது.

ரவியின் கைக்கு ஒரு கடிதம் கிடைத்தது.

படித்து முடித்து வெற்றியடைந்த பிறகு, வெட்டியாக இருப்பதைவிட, கிடைத்த வேலையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு மூட்டை கட்டிக்கொண்டு

சென்னை பக்கம் சென்றான். அவளையும் மனதிற்குள் சுமந்துகொண்டு.

அங்கு இருக்கின்ற சூழலுக்குத் தகுந்தாற்போல் எல்லாவற்றையும் அனுசரித்து வாழப் பழகிக்கொண்டான். வேலை செய்யும் இடத்தில் தங்க இடமும், சாப்பாடும் கிடைக்க, எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு. நாட்கள் போனதே தெரியவில்லை. தொடர்ச்சியான வேலையில் கடிதப் போக்குவரத்து மட்டுமே அவனுக்கும் வீட்டிற்கும் இருந்தது. சம்பாதிக்கும் பணத்தை மணியார்டர் செய்துவிடுவான். நல்ல நாட்களில் இங்கு வருவதற்கு விருப்பம் இல்லாமல் போனது. ஏன் இந்த மனமாற்றம்? தெரியவில்லை. ஆனால் அவனுக்குள் நம்பிக்கை இருந்தது. அவள் காத்துக்கொண்டிருப்பாள் என்று.

ஒருநாள்.

அவனுக்குள் இருந்த ஏக்கம், தவிப்பு, அவளைப் பற்றிய சிந்தனை, அவள் முகம் பார்க்க வேண்டும் என்ற ஆசை, அதிகமானதால், திடீரெனப் புறப்பட்டான். இங்கிருந்து வேலை பார்த்த ஆறு வருடங்களாக அவனுக்கும் அவன் கிராமத்திற்கும் இருந்த இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. ஆறு வருடங்களில் என்னென்ன மாற்றங்கள் நடந்தன என்பதெல்லாம் ரவிக்குத் தெரியாது. எதிர்பார்ப்போடு வீடு வந்து சேர்ந்தான். அன்று இரவு தூக்கம் இல்லை. ஏனென்றால் மறுநாள் அந்த ஒற்றையடிப்பாதை, மலையடிவாரம், ஏரிக்கரை, வயல்வெளி இவற்றையெல்லாம் பார்த்து ரசிக்க வேண்டும் என்றும் அதோடு அவளையும் பார்க்க வேண்டும் என்றும் மனசு துடித்தது.

கொஞ்சம் முன்னதாகவே வீட்டிலிருந்து ஒற்றையடிப் பாதையில் ஏரிக்கரையை நோக்கி நடந்தான். எல்லாமே மாறி இருந்தது. பசுமையான மலை வசந்தகாலத்திற்குப் பிறகு இலை உதிர்ந்து மொட்டையாய்க் காட்சியளித்தது. அறுவடைக்குத் தயாரான நிலையில் நிலங்கள். ஒரு சில இடங்களில் மூன்றாம் போகம் பயிர் வேலை மும்முரமாக நடைபெற்றது. ஆள் நடமாட்டம் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக மனித நடமாட்டம். பார்த்து ரசித்துக்கொண்டே வந்தான். மலை அடிவாரத்தில், எல்லம்மாளின் வீட்டில் ஆரவாரமும் சத்தமும் எதுவுமில்லை. மாடுகள் இல்லை. ஆடு மாடுகளின் சாணத்தின் நாற்றமும் இல்லை. பொருட்கள் சிதறிக் கேட்பாரற்றுக் கிடந்தன. கள்ளப்பா இல்லை. கள்ளப்பாவின் கட்டில் இல்லை. கள்ளப்பா இருக்கிறார் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அவர் பயிர் செய்த கழனிகாடெல்லாம் கரம்பாக கிடந்தன. முத்தம்மாள் மட்டும் இடுப்பில் கூடையைச் சுமந்துகொண்டு ரவிக்கு முன்னால் நடந்து வந்தாள்.

“என்னம்மா எப்படி இருக்கீங்க?” என்று ரவி கேட்க, “ஏதோ இருக்கேன் பா” என்று சலிப்பாகச் சொல்லிவிட்டு, கடக்க முயன்றாள்.

“கள்ளப்பா எப்படி இருக்காரு” என்று கேட்டவுடன், சட்டென நின்று ரவி பக்கம் திரும்பியவள், “அவர் இறந்து ஆறு மாசம் ஆகுதுப்பா” என்று சோகமாகச் சொன்னாள்.

அவளுக்குள் இருந்த பாரங்களையெல்லாம் வார்த்தைகளாகக் கொட்டினாள். “இந்த ஆறு வருடத்துல எவ்வளவோ நடந்திடுச்சு. எல்லம்மா வாழ்க்கப்பட்டுப் போன இடத்துல நிலச்சு வாழல. கள்ளப்பா அதே கவலையில கண்ண மூடுனது, இப்படி சொல்லிக்கிட்டே போகலாம்” என்று பேசிக்கொண்டே போனாள்.

“எல்லம்மாவும் பாவம், என்ன மாதிரியே அவளுக்கும் நிம்மதி இல்ல. வாக்கப்பட்டவன் குடிகாரன். மனசுல பாரம் அதிகமா இருக்கு. நீ எப்படிப்பா இருக்க?” என்று ரவியைக் கேட்டுவிட்டு “சரிப்பா சீக்கிரமாக வீடு போய்ச் சேரு” என்று சொல்லிக் கூடையை இடுப்பில் சுமந்துகொண்டு வீட்டை நோக்கி

நடக்க ஆரம்பித்தாள்.

நிலைகுலைந்து போனான். அவனால் நடக்க முடியவில்லை. மனதுக்குள் பாரம் அதிகரித்தது. கையில் உள்ள புத்தகத்தை ஆள்காட்டி விரலில் வைத்துக்கொண்டு சுற்றுகின்ற ஆற்றலும் குறைந்துபோனது. நம்பிக்கை வீணானது. வேதனையை வருத்தத்தை யாரிடம் சொல்வது? ஏன் இப்படி நடந்தது? என்று அவனே கேள்வி கேட்டுக்கொண்டான்.

“அவள் இல்லாத வாழ்க்கை. அவள் முகம் பார்க்காத வாழ்க்கை. அவளோடு பேசாத வாழ்க்கை. நான் வாழும் வாழ்க்கையும் இலக்கு இல்லாதது” என்று அவனுக்குள்ளேயே பேச ஆரம்பித்தான். நாட்கள் நகர்ந்தன.

அவனது ஏக்கம், அவனது தவிப்பு, அவனது ஆசை, அவனது பாசம், அவனுடைய எதிர்பார்ப்பு எல்லாமே என்றாவது ஒருநாள் நடக்கும் என்று நம்பிக்கையில் இந்த ஒற்றையடிப் பாதையில் தினமும் நடந்தான்.

அந்த நாள்.

இன்று அப்படித்தான் வழக்கத்துக்கு மாறாய்ச் சூரியன் மறைவதற்கு முன்னால் சரியாக மூன்று மணிக்கு ஏரிக்கரை மதகின் அருகில் ரவி உட்கார்ந்திருக்க, பல வருடங்களுக்கு முன்னால் பார்த்த காட்சிகள் மலரும் நினைவுகளாக இன்றும் அவன் மனக்கண்முன் படமாய் ஓடிக்கொண்டிருந்தன. நாற்றங்கால் முழுவதும் தண்ணீர் நிரம்பி இருந்த காலத்தில் கவனச்சிதறல் இல்லாமல் தனது இரு கைகளால் நாற்றை லாவகமாக அறுபடாமல் வேகமாக எடுத்துக்கொண்டிருந்த கள்ளப்பாவின் உருவம் மனதுக்குள் நிழல் போல வந்து நின்றது.

அந்த இனிமையான நினைவு அலைகளுக்குள் ரவி மூழ்கி இருந்த நேரத்தில், குழந்தை சிரித்துக்கொண்டு ஓடி வரும் சத்தம் காதுக்குக் கேட்டது. ரவி திரும்பிப் பார்த்தான்.

“ஏய் நில்லுடி. ஓடாதே. நில்லு. விழுந்திடப் போறே” என்ற குரல் பின்னாலே கேட்டது.

அதே குரல்.

குழந்தையையும், எல்லம்மாளையும் பார்த்த அடுத்த நிமிடத்தில் ரவியின் மனம் வேறு ஒரு நினைவுக்குள் சிக்கி தவித்தது. அவனால் எதுவும் பேச முடியவில்லை.

அவள் ஓடி வந்தாள், குழந்தையின் கைகளைப் பிடித்துக்கொண்டு வாரி தூக்கித் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள்.

“ஏன் ஓடுற? ஓடக்கூடாது. விழுந்துட்டா அடிபடும்,” என்று குழந்தையோடு கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

“யாரோட குழந்தை?” என்றான் ரவி.

“என்னோட குழந்தைதான்” என்றாள் எல்லம்மாள்.

“பேரு..”

“பொற்சுவை.”

“அழகான பெயர்.”

“எப்ப வந்த?”

“நேத்துதான்.”

சுருக்கமாய் எல்லாவற்றிற்கும் சுவையாய்ப் பதில் தந்தவள், தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்த வழியே அவள் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள்.

அவளைப் பின்தொடர வேண்டும் போல் ரவியின் மனது சொல்லியது. கொஞ்சம் இடைவெளி விட்டு, உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு இறங்கி அவளைப் பின் தொடர, குழந்தையை விளையாடச் சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

சற்று நேரத்திலெல்லாம் எல்லம்மாவின் வீட்டுக்கு ரவி செல்ல, ரவியைப் பார்த்த எல்லம்மாளின் அம்மா முத்தம்மாள், “வாப்பா உட்காருங்க” என்று சொன்னாள்.

அவள் மனதுக்குள் இருந்த பாரம் அத்தனையையும் வார்த்தைகளாக அவனுக்கு முன்னால் கொட்டிக்கொண்டே இருந்தாள்.

“காலம் வேகமாகப் போகுது. கால ஓட்டத்தில சிக்கித் தவிச்சு, தப்பிப் பிழச்சு இங்க வந்து நிற்கிறோம். இதுக்கு அப்புறம் என்ன நடக்கப்போகுதுன்னு எனக்குத் தெரியல. நான் நிறைய கஷ்டங்களை, வலி, வேதனைய அனுபவிச்சுட்டேன். நிம்மதி இல்லை. ஏதோ வாழ்ந்து ஆகணுமுன்னு இந்த இடத்தை நோக்கி வந்திருக்கம்,” எனச் சொல்லிவிட்டு “ஏதாவது சாப்பிடறியாப்பா?” என்று கேட்டாள்.

“வேண்டாம்மா” என்றான் ரவி.

அப்போது குழந்தை ரவி அருகில் நின்று மிரட்சியோடு அவனைப் பார்த்தது. சற்றுநேரத்தில் பின் நகர்ந்து சென்றது. சின்னதாய் உதட்டோரம் சிரிப்பை வெளிப்படுத்தியது.

“வா” என்று இரு கையை நீட்டி அழைத்தான் ரவி.

“போமா” என்று அவள் பாட்டி முத்தம்மாள் சொன்னாள்.

உள்ளிருந்து எல்லம்மாள் வெளியே வந்து நின்று “போ.. போ.. போ..” என்றாள் தன் குழந்தையிடம்.

குழந்தை மிரட்சியுடன், தயக்கத்தோடு முன்னாடி நகராமலும், பின்னாடி நகராமலும் அதே இடத்தில் நின்றது. நின்ற குழந்தை தனது மழலைச் சொல்லால் “பாட்டி.. இது யாரு..” எனக் கேட்டது.

பாட்டி சொன்னாள், “இது உன்னோட கள்ளப்பா.”

“போ, கள்ளப்பாகிட்ட போ” எனச் சொன்னாள் பாட்டி. மீண்டும் மீண்டும்.

“கள்ளப்பாகிட்ட போ” என்று சொன்னவுடன் முத்தம்மாவின் கண்களில் கண்ணீர்த் துளிகள் கொட்டின.

உட்கார்ந்திருந்த ரவி எழுந்தான். குழந்தை அருகில் சென்றான். அள்ளி எடுத்து வாரி அணைத்துக் கன்னத்தில் ஒரு முத்தமிட்டான்.

எல்லம்மாள் கண்களில் கண்ணீர்த் துளிகள் வழிந்துகொண்டிருந்தன. கண்ணீர்த் துளிகளை ஒற்றை விரல் கொண்டு துடைத்தெறிந்து, சின்னதாய்ச் சிரித்தாள்.

இப்பொழுது ரவி கேட்டான், “கள்ளப்பான்னா என்ன?”ன்னு.

முத்தம்மாள் சொன்னாள், “அன்பும் ஆதரவும் கிடைக்காதவங்களுக்கு, நல்லவங்க துணையா இருப்பாங்க என்கிற நம்பிக்கையில, நாங்க வைக்கிற பேரு கள்ளப்பா.”

கொஞ்சம் அமைதி.

“இந்தக் குழந்தைக்கு நீங்க கள்ளப்பாவா, என் மகளுக்கு நல்ல துணையாய் இருங்க,” என்று கண்ணீரோடு முத்தம்மாள் பேசினாள்.

“கள்ளப்பாங்கிறது நான் கேட்ட பேர். என் மகள் கூப்பிட்ட பேரு. என் பேத்தி கூப்பிடப் போற பேரு. அனாதையா இந்த உலகத்துல, யாருடைய ஆதரவும் இல்லாம இருக்கிற பொம்பள பசங்களுக்கும், பொம்பளைங்களுக்கும் குலதெய்வமா, குலசாமியா, எல்லதெய்வமா நின்னு, எங்க மக்கள காக்கற பேரு,” என்றாள் முத்தம்மாள்.

“எனக்கு சாமியா, என் மகளுக்குத் துணையா, என் பேத்திக்கு நல்ல கள்ளப்பாவா இருங்க,” என்று இரு கைகூப்பிக் கும்பிட்டாள்.

மெல்ல நடந்து எல்லம்மாள் ரவியின் அருகில் நின்றாள். அவள் தலையை ரவியின் நெஞ்சோடு சாய்த்துப் பாசமாய்க் குழந்தையின் முதுகில் கை வைத்து வருடினாள். இன்னொரு கை ரவியின் முதுகின் மறுபுறம் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டது. இந்த ஆனந்தத்தைப் பார்த்த முத்தம்மாள் பேசாமல் மௌனமாய் அமைதியாய் இருந்தாள்.

எல்லம்மாள் தனது மகளின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டிக்கொடுத்து, “நீ இனிமே கள்ளப்பான்னு கூப்பிடு. சொல்லு, கள்ளப்பான்னு சொல்லு,” ன்னு சின்னதாய்ச் சிரித்தாள்.

சின்ன சிரிப்பில் செல்லமாய்ச் சொன்னாள் பொற்சுவை “கள்ளப்பா”ன்னு.

மூன்றாம் பரிசு
பெற்ற சிறுகதை

ப. ஏகரசி


பதிவுஎண்:521/2018

படைப்பு
குழுமத்தின் வெளியீடு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு
சிறுகதைப் பரிசுப்போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற
படைப்பாளி ப. ஏகரசி
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17-03-2025
நாள்

கவிஞர். அ. வெண்ணிலா
நடுவர்

# முகங்கள்...

1) பிரபஞ்சத்தின் மொத்த இறுக்கமும் ஒன்று கூடி அழுத்திட தாங்க முடியாத மேகம் கண்ணீர் சிந்தத் தொடங்கியது. தெரியாத யார் அழுதாலும் பரிதாபப்படும் உலகம் ஏனோ தெரிந்தவர்கள் அழும்போது உள்ளூர ஆறுதல் கொள்ளும் பாங்கின் நீட்சியோ என்னவோ இந்த மேக அழுகையைக் கொண்டாடித் தீர்க்கிறது. மேகத்துளிகள் தங்கள்மேல் விழுந்துவிடக் கூடாது என ஓடிக் கலைந்துகொண்டிருந்த கூட்டத்தில் அவன் மட்டும் தொடர்ந்து ஏதோ செய்துகொண்டிருந்தான்.

அந்த இரைச்சலுக்கு நடுவே ஆழ்ந்து நோக்க வேண்டிய அவசியமின்றித் தனித்துத் தெரிந்த அவன் மழைக்கு நடுவே அமர்ந்து எதையோ வரைந்துகொண்டிருப்பதாகத் தெரிந்தது. தூரல் இப்போது அடைமழையாக உருமாறியது... இவன் இன்னமும் குடைக்குக் கீழ்த் தொடர்ந்துகொண்டிருந்தான். அப்படி என்னதான் வரைகிறானோ. எவ்வளவு நேரம்தான் அழ முடியும், அதுவும் அழும் மனநிலை இல்லாதபோது.

ஒருவழியாக அழுது ஓய்ந்த மேகக் கூட்டங்கள் வெளுத்துப்போன முகங்களோடு எங்கெங்கோ நகர்ந்து போக, எங்கெங்கோ இருந்த பறவைகள் இப்போது வானில் வட்டமிடத் தொடங்கின. அவன் குடையை மடக்கி அருகில் வைத்துவிட்டிருந்தான். வரைந்த ஓவியம் அவன் கைகளில்தான் இருந்தது. அப்படி என்னதான் வரைந்திருப்பான்.. மெதுவாக நகர்ந்து எட்டிப் பார்த்தால் தெரிந்துவிடப்போகிறது. ஓய்ந்துபோன மழை ஏனோ குளிரை மட்டும் மறந்து விட்டுவிட்டுப் போய்விட்டது.

குளிருக்கு நடுவே எதைப் பற்றிய சிந்தனையும் இல்லாது ஓவியத்தில் தொடர்ந்து லயித்துக் கிடந்தவனின் அருகே செல்லச் செல்ல அவன் வரைந்த ஓவியம் தெரியத் தொடங்கியது. ஏதோ ஒரு முகம் போன்றல்லவா தெரிகிறது. அருகே சென்று அவனுக்குப் பின்னால் நிற்கும்போது இன்னும் தெளிவாகத் தெரிந்தது. ஆம் அது ஒரு முகம்...

ஆரஞ்சு நிறத்தில் என்னென்னமோ சேதி செல்லும் அந்த முகம்... கோபம், ஆங்காரம், ஆச்சரியம், அமைதி அதே நேரத்தில் அளவுகடந்த ஆற்றல், வெம்மை என அனைத்தும் கலந்த ஒரு முகம். பார்த்த மாத்திரத்தில் ஈர்த்த அதில் ஏதோ

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்



ஒரு ஆபத்தின் குறியீடு வழிந்தோடியது. எல்லாவற்றையும் தாண்டி அதில் ஒரு மகிழ்ச்சியும் இழையோடி என்னுள்ளும் பரவியதை உணர முடிந்தது. வண்ணமயமான மிகவும் பரிட்சயமான முகம். ஆனால் இதுவரை பார்த்திராத முகம். என்னோடு சேர்ந்து அதே முகத்தில் லயித்திருந்த அவன் எதேச்சையாகத் திரும்பி என்னைப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் நிற்கும் எனக்கு என்ன செய்வது, எப்படி அவனது பார்வைக்கு வினைபுரிவது என்று புரியாமல் ஒரு செயற்கையான புன்னகையை அவனுக்கு அனுப்பினேன். எந்த எதிர்வினையும் இன்றிச் சில வினாடிகள் அமைதியாக என்னைப் பார்த்துக்கொண்டிருந்தவன் மேலே வட்டமிட்டுக்கொண்டிருக்கும் பறவைகளில் குவிந்தான். மிகவும் திமிர் பிடித்தவன் போல... ஒருவேளை எனது புன்னகை, அன்பும் அக்கறையும் அற்ற செயற்கைப் புன்னகை என்பது அவனுக்குத் தெரிந்திருக்குமோ? இருக்கலாம்... அவன் வரைந்த முகம் மட்டுமல்ல, இவனும் கூட எனக்குத் தெரிந்தவனைப் போல்தான் இருக்கிறான். தெரியாதவன் போலும் தோன்றுகிறது. அதோ அவன் மீண்டும் எதையோ வரையத் தொடங்குகிறான்.

அதுவும் ஒரு முகம்... வண்ணங்களால் நிரம்பி வழியும் மனித முகம். சூட்சுமங்களைத் தனக்குள் ஒளித்துவைத்திருக்கும் பண்பியல் ஓவியமாக[1] (Abstract painting) இல்லாவிட்டாலும் ஏதோ ஒன்று அதில் நிறைந்திருந்தது என்ற எண்ணத்தின் நீட்சியைக் குளிர் தடை செய்தது. மனம் ஏதோ ஒன்றைப் பற்றிக் கொண்டது போல் உணர்ந்தேன். ஆம்... உண்மைதான்... அது அவனது ஓவியத்தின் மீதான பற்றுதல். இவ்வளவு நேரம் அந்த ஓவியத்தோடு மனமும் சிந்தையும் இணைந்து கிடந்தபோது இந்தக் குளிர் தெரியவில்லை. சிந்தை ஓரிடத்தில் குவிந்திருந்ததால் குளிர் தெரியவில்லை என்று கடந்து போக முடியவில்லை. சில நொடிகளுக்கு முன் அந்த வண்ணங்களில் லயித்துக் கிடந்தபோது இருந்த உணர்வை ஆராய்ந்தால் அந்த வெம்மையை உணர முடியும். ஆம் வெம்மை... அந்த வண்ணங்கள்தான் என்னை வெம்மையாக வைத்திருந்ததா? இல்லை அந்த முகமா? இந்த எண்ணம் தோன்றியதும் அங்கிருந்து நகர மனம் மறுத்தது. கால்கள் தடுமாறுகின்றன. ஓரிரண்டு அடிகள் எடுத்து வைத்தவன் திரும்பி அவனைப் பார்த்தேன்.

பார்த்த மாத்திரத்தில் கவனம் பெறாத இயல்பான கூட்டத்தில் ஒருவன். நகர்ந்து போய்விடலாம் என்ற எண்ணத்துக்கு மத்தியில் அனிச்சையாக எனது உதடுகள் அவனைக் கூப்பிட்டன...


"தம்பி... தம்பி..."

"..."

ஆனால் அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. எதையும் அறியாதவன் போல் தொடர்ந்து வரைந்துகொண்டிருந்தான். எனக்குள் நானே சொல்லிக்கொண்டேன்,

"ஆணவம்..." எனக்குள் அவனைத் திட்டியபடி வேகமாக அங்கிருந்து நகர முற்படும்போது ஒரு சத்தம்...

"க்ஹா... க்ஹா..." என்று அடித் தொண்டையில் யாரோ கத்துவது போல் தோன்றியது. திரும்பிப் பார்த்தேன். அது அவன்தான். நான் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மீண்டும் ஒரு தடவை அதே போல் சத்தம் செய்தான். கைகளை அசைத்து என்னை அவனை நோக்கிக் கூப்பிட்டான். ஏன் இப்படி அழைக்கிறான். ஒருவேளை இவனால் பேச முடியாதோ? நான் கூப்பிடும்போதும் அவன் எந்த எதிர்வினையும் புரியவில்லையே. காதும் கேட்காதோ? என்ற சிந்தனைகளுக்கு நடுவே நான் அவனருகே சென்றேன்.



அவன் கைகளில் வைத்திருந்த ஒரு காகிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டு மேலே பறந்துகொண்டிருந்த பறவைகளின் மீது பார்வையைத் திருப்பினான். எங்கோ தூரத்தில் பறந்துகொண்டிருந்த பறவைகளைப் பார்த்து இனிய ராகத்துக்குத் தாளம் இடுவதைப் போல் தலையைச் சரியான இடைவெளியில் மேலும் கீழுமாக அசைத்துப் புன்னகைக்கத் தொடங்கினான். அதற்குப் பின் அவன் என்னைக் கவனிக்கவேயில்லை. நான் சில நொடிகள் நின்று அவனை ஆச்சரியம் பொங்கப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு அங்கிருந்து நகர்ந்தேன்.

அவன் தந்த காகிதத்தில் வேறு ஒரு முகம் வேறு ஒரு வண்ணம். இந்த முகம் நீலத்தால் நிறைந்திருந்தது. கீழே சில புல்லாங்குழல் குறிப்புகள். அவன் நிச்சயம் காது கேளாதவன் இல்லை. இல்லாவிட்டால் சங்கீதக் குறிப்புகளை அவனால் எப்படி பயன்படுத்த முடியும் என்ற எண்ணத்தை அடுத்த நொடி வேறு ஒரு எண்ணம் மங்கச் செய்தது. ஓவியத்தில் எதற்காகச் சங்கீதக் குறியீடு? இதற்கு முன் அவன் வரைந்துகொண்டிருந்த ஆரஞ்சு முகத்திற்குக் கீழும் சில சங்கீதக் குறிப்புகள் இருந்தது இப்போது ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால் அது என்ன இசைக் குறிப்பு என்பதை முழுமையாகக் கவனிக்கவில்லை. அவற்றை முழுமையாக ஞாபகப்படுத்த முயன்றேன் முடியவில்லை. ஓவியம் எனக்கு விருப்பமானது, ஆனால் இசை பரிச்சயமானது. அதை எப்படி கவனிக்காமல் விட்டேன் என்ற எண்ணத்தோடு இப்போது தூரமாகிவிட்ட அவனை ஒருமுறை திரும்பிப் பார்த்தேன். மீண்டும் புதிதாக எதையோ வரையத் துவங்கியிருந்தான்.

2) ஏழு வயதில் சங்கீதத்தோடு கை கோர்க்கத் தொடங்கினேன். ஆனால் இத்தனை வருடங்களில் இவ்வளவு ஆர்வமாக எந்தச் சங்கீதக் குறிப்பையும் வாசித்ததோ இல்லை தேடியதோ கிடையாது. அந்தக் குறிப்பை விசைப்பலகையில் வாசித்துப் பார்த்தேன். அது நிச்சயமாக ஒரு இதம். மீண்டும் வாசித்தேன்... மனம் அமைதியாக அந்த இசைக்குள் என்னை இழுத்துப் போனது. மீண்டும் மீண்டும் எனத் தொடர்ந்து வாசிக்க வாசிக்க மென்மையான அந்த இசை என்னைச் சூழ்ந்துகொண்டது. அவன் தந்த ஓவியத்தில் இருந்த முகத்தைப் பார்த்தபடி வாசித்துக்கொண்டேயிருந்தேன். கண்களில் அந்த ஓவியமும் மனதில் அதிலிருந்த இசைக் குறிப்பும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து என்னைத் தன்னோடு பயணப்படுத்தின. இருக்கும் இடம் மறந்து, நிலை மறந்து, உயிர் மறந்த அந்த நொடி... என்னோடு நானே பேசிக்கொண்ட தருணம். திடுக்கிட்டு விழித்தேன். உடல்

நடுங்கிக்கொண்டிருந்தது. கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர். அதற்கு மேல் பொறுக்க முடியாமல் வாய்விட்டுக் கதறி அழுதேன். ஒரு நீண்ட போராட்டத்துக்குப் பின் மீண்டும் இயல்புக்கு வர சில மணி நேரங்கள் பிடித்தன.

எந்தச் சிந்தையும் இல்லாமல் நாள் கணக்காக நடமாடினேன். ஆம் உண்மையைச் சொல்லப்போனால் அந்தத் தாக்கத்திலிருந்து என்னால் வெளியே வரவே முடியவில்லை. நான் கிளம்புவதற்கு முன் என்னைக் கூப்பிட்டு அன்று அவன் கொடுத்தது எனக்கான முகம். ஆனால் எனது முகத்திற்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. என்னவாக இருக்கும்... நினைக்க நினைக்க ஆச்சரியம் தாங்க முடியவில்லை. பார்ப்பதை வரைபவர்கள் இருக்கிறார்கள். பார்ப்பதைக் குறிப்பாக மறைபொருளில் நிறுத்தும் ஓவியர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவன் எனக்கான எதையோ முகமாக உருவகித்து வண்ணத்தின் மூலம் அதைக் காட்சிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் இசையால் உயிரூட்டி இருக்கிறான். உணர்ச்சிப் பெருக்கால் மீண்டும் நிலை தடுமாறினேன். வேறு எதைப்பற்றியும் சிந்திக்க முடியவில்லை. எப்போதாவது ஏற்படும் ஜீவ்... என்ற உணர்வும் அதற்கு பின் உடலெங்கும் மயிர் குத்திட்டு நிற்பதையும் கடந்து வந்துள்ளேன். ஆனால் இப்போது உடல் மின் கடத்தியாக மாறியதைப் போல் ஏதோ ஒன்று மூளைக்கு பாய்ந்துகொண்டே இருந்தது.



பல நாட்களுக்குப் பின் அந்த ஓவியத்தைக் கையிலெடுத்தபோது ஓவியத்துக்குக் கீழே இருந்த சங்கீதக் குறிப்பை ஒட்டிப் புல்லாங்குழல் வரையப்பட்டிருந்ததைக் கவனித்தேன்.

புல்லாங்குழலைக் கையிலெடுத்தேன். அதை வாசிக்க வாசிக்க அந்த நீல வண்ண முகமும் குழலும் பிணைந்து ஒரு தருணத்தில் மீண்டும் என்னைப் பழையபடி ஆட்கொள்ளத் தொடங்கியது. ஆம் அந்த ஓவியத்தில் இருக்கும் முகம் எனக்கானதுதான் என்பது இப்போது எனக்குத் தெரியும். ஆனால்... ஆனால் வெளித் தோற்றத்துக்கு முற்றிலும் என்னிலிருந்து மாறுபட்டுக் கிடந்தது. ஆக இதுவும் ஒரு பண்பியல் ஓவியமே! எனக்கான ஏதோ ஒரு பண்பு இந்த முகத்தில் இருக்கிறது. அதிலும் அந்த இசை... ஆஹா... இப்போதுதான் புரிகிறது. அவன் வரைந்த முதல் ஓவியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் வரை எனக்குக் குளிர் தெரியாமல் இருந்ததற்கான காரணம்!!! அது ஆரஞ்சு நிற முகம். வெம்மையின் நிறம். எங்கேயோ கடந்து வந்த வண்ணங்களின் சாரம் என்னுள் ஓடத் தொடங்கியது. வண்ணங்கள்... வண்ணங்கள்...

**3)** Kandinsky[2] ஓவியத்தையும் அவர் கையாண்ட வண்ணத்தையும் புரட்டத் தொடங்கினேன். அதில் ஒரு வார்த்தை என்னைப் புரட்டிப் போட்டது. 'When Kandinsky was seeing shades of blue, he was hearing flutes' என்பதைப் பார்த்த மாத்திரத்தில் மீண்டும் அவன் என்னிடம் தந்த ஓவியம் என்னுள் விரிந்து வளர்ந்தது, கூடவே இசையும். வண்ணங்களைப் பார்க்கும்போது இவனுக்குச் சங்கீதம் கேட்கிறதோ? இந்த எண்ணமே என்னைக்

குதூகலப்படுத்தியது. வண்ண இசைப் பயணத்தில் இணைந்துகொண்டேன். அவன் தந்த முகத்தோடு மீண்டும் பயணிக்கத் தொடங்கினேன். இந்த முறை நிதானமாக, விழிப்போடு பயணித்தேன். பல முடிச்சுகள் நிறைந்த பயணத்தில் வண்ணங்களுக்கும் இசைக்குமான தொடர்பைத் தேடத் தொடங்கினேன், கூடவே அந்த பையனையும்...

ஓவியக் கண்காட்சிகள் நடத்தப்படும் இடங்களிலெல்லாம் குடியிருக்கத் தொடங்கினேன். ஆனால் அவனைப் பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு கண்காட்சியும் நிறங்களாலும் வடிவங்களாலும் நிறைந்திருந்தாலும் நான் தேடிய வண்ண முகங்களின் ஓவியம் தென்படவேயில்லை. அங்கிருந்த ஒவ்வொரு ஓவியரிடமும் பேசத் தொடங்கினேன். சிலர் வண்ணங்களை ஓசைகளோடு இணைப்பதைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருந்தனர். உதாரணமாக காண்டின்ஸ்கி மஞ்சள் நிறத்தைப் பார்த்தபோது, உயர்ந்த எக்காளக் குறிப்புகளைக் கேட்டதைப் போன்ற பலவற்றைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் வண்ணங்களின் கலவையால் நேர்த்தியான இசைக் குறிப்புகளைத் தனித்தனி இசைக் கருவிகளுக்கு என ஓவியத்தோடு இசைக் கச்சேரியை நடத்திக்கொண்டிருக்கும் அந்த வாய் பேச முடியாத காது கேளாத நபரைப் போல் யாரையும் ஏன் எந்த ஓவியத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. அன்று முதன்முதலில் மழையில் அமர்ந்து அவன் வரைந்த ஓவியத்தை நினைவு கூர்ந்தேன். ஆரஞ்சு நிறத்தில் வரைந்திருந்த முகம் அது. அந்த முகமும் அதன் வண்ணமும் நன்றாக நினைவில் பதிந்திருந்தன. ஆனால் அதற்குக் கீழே அவன் குறிப்பிட்டிருந்த அந்த இசைக் குறிப்பு தெளிவில்லாமல் நிழலாடியது. ஞாபகம் இருந்த குறிப்புகளை என்னளவில் முழுமைப்படுத்தி இசைத்துப் பார்க்க முடிவெடுத்தேன்.

எவ்வளவு முயன்றும் முழுமையான குறிப்பு ஞாபகத்துக்கு வரவில்லை. நன்றாக ஞாபகத்தில் இருந்த முகத்திலிருந்து குறிப்புகளை நானே உருவாக்கினால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. அந்த முகம் தன்னகத்தே கொண்டிருந்த அத்தனை உணர்வுகளையும் இசைக் குறிப்புகளாக மாற்ற முயற்சித்தேன்.

வண்ணங்களுக்கு இசைக் குறிப்பை உருவாக்கும் முயற்சி... சொல்வதைப் போல் அத்தனை எளிதானது இல்லை...

இசை அளவீட்டின் ஏழு ஸ்வரங்களை நியூட்டனின் முப்பட்டக ஒளிகளோடு[3] (7 spectrum colours) பிணைத்து, எல்லாவற்றிற்கும் வண்ணங்களை முடிவு செய்தேன். பல நாள் முயற்சிக்கு பின் நானே உருவாக்கிய அந்த இசைக் குறிப்பை அவன் தந்த முகத்தின் வண்ணங்களுக்கேற்ப இசைக்கத் தொடங்கினேன். ஆனால் இரண்டும் வெவ்வேறு பாதைகளில் பயணித்து ஆன்ம சித்ரவதையையே பரிசளித்தது.வண்ணங்களின் தேர்வில் ஏதேனும் தவறு இருக்குமோ என்ற தேடலில் வெள்ளை ஒளிதான் ஆதாரம் என்ற நியூட்டனின் பார்வையை எனது பார்வையாக்கிக் கொண்டிருந்தது புலப்பட்டது.

அன்று அவன் எனக்கு வரைந்து தந்த முகத்தினைச் சுற்றி காகிதம் முழுவதும் வெண்மையாக இல்லை. அதுவரை நியூட்டனை அப்படியே ஏற்றுக்கொண்ட எனக்கு வேறு ஒருவரின் துணை தேவைப்பட்டது. கோதே[4] (Goethe)... ஆம் அவரின் வண்ணங்கள் பற்றிய கோட்பாட்டின் ஆழத்தை நிராகரிக்காமல் சற்று மாற்றி ஏற்றுக்கொள்ள முயற்சித்தேன். 'Colour in itself is a degree of darkness' என்ற அவரது கூற்றை நான் இப்படி புரிந்துகொண்டேன், இருளின் அளவு வேறுபாடே வண்ணம். ஆம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது இருளே. அந்த இருளின் அளவில் ஏற்படும் வேறுபாடுதான் வண்ணங்கள் என்ற கோணம் வேறு ஒரு பரிணாமத்தைத் திறந்தது. ஆக இருள் என்பது எப்போதும் எங்கும் நீக்கமற

நிறைந்திருக்கும் முழுமை... ஒளி என்பது இருளின் அளவைக் குறைக்கும் வெளி மூலம் என்ற கோணத்தில் ஓவியங்களுக்கான வண்ணங்களை நோக்கத் தொடங்கினேன். இக்கோட்பாட்டின்படி இசைக்கான வண்ணங்களை மாற்றி மாற்றி முயன்று பார்த்தேன். வண்ண முகங்களுக்கான இசை இனிமையாகவே இருந்தது. ஆனாலும் அன்று அவன் தந்த முகத்தின் இசைக் கலவை போல் இல்லை.

4) ஒரு இசைப் பலகையில் ஒவ்வொரு பலகைக்கும் ஒவ்வொரு வண்ணம் என்று வரையப்பட்டிருந்த அந்த ஓவியம் என்னை மேற்கொண்டு நகரவிடாமல் செய்தது. அதாவது ஓசைக்குத் தகுந்த வண்ணம்... அதை வரைந்தது யார் என்று பார்க்கையில் கீழே அன்று என்னிடம் அவன் தந்த முக ஓவியத்தின் கீழே இருந்த அதே புல்லாங்குழல் சின்னம். அதற்கு மேல் எந்தச் சிந்தைப் பிறழ்ச்சிக்கும் இடமின்றிக் கண்காட்சிக் குழு தந்த விலாசத்தை அடைந்தேன்.

"யார் வேண்டும்" என்ற பெண்ணின் குரல் என்னைப் பதட்டப்படுத்தியது.

என்ன பதில் சொல்வது? நான் எதற்காக இங்கு வந்தேன். அவனைப் பற்றி எப்படி விசாரிப்பது. எனக்கு அவன் பெயர் கூட தெரியாதே. பெயர் தெரிந்தாலும் ஏன் அவன் என்ற கேள்விக்குப் பதில் இல்லை. அனிச்சையாகப் பேசத் தொடங்கினேன்...

"ஒரு ஓவியர்... அவரால் வாய் பேச முடியாது... முகங்களை வண்ணங்களால் வரைவார்..." என்று நான் முடிப்பதற்குள் அந்த பெண் இடைமறித்தார்.

"ஓ... வேப்பங்குழலா? நீங்க அவர பார்க்க முடியாது... அவன் செத்து மாசமாச்சு" என்ற அவரின் குரல் அதற்கு மேல் எனக்குக் கேட்கவில்லை.

வேப்பங்குழல்... இந்த உலகத்த, இசையை, வண்ணங்களை, ஏன் என்னையே எனக்கு அறிமுகப்படுத்தியவன் இப்போது உயிரோடு இல்லை. மனம் கனத்தது.

ஒரு நீண்ட மௌனத்துக்குப் பின் "அவர் வரைந்த ஓவியங்களைப் பார்க்க முடியுமா?" என்று தட்டுத்தடுமாறி வார்த்தையை அனுப்பினேன்.

"அவன் எங்கங்க ஓவியம் வரைந்தான், கலர் கலரா முகங்கள மட்டும்தானே வரைந்தான்."

ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது... அவர்களைப் பொருத்தவரை வேப்பங்குழல் தேவையற்ற முகங்களை வரையும் மனிதன். இல்லை இல்லை முகங்களை மட்டுமே வரையும் தேவையற்ற மனிதன்...

எனது பிடிவாதம் அவளைக் கரைத்தது. ஒரு சந்தேகப் பார்வையோடு என்னை உள்ளே அனுமதித்தார்.

"வேப்பங்குழலோட அப்பா அம்மா யாருனு எனக்குத் தெரியாது. அவன எங்க அப்பாதான் தூக்கி வளர்த்தாரு. பிறவியிலேயே அவனுக்குக் கேது கேட்காது... வாய் பேச முடியாது..."

"பின் எப்படி அவனுக்குச் சங்கீதம் தெரியும்?" என்ற ஆச்சரியத்தை வெளிப்படுத்தினேன்.

"அவனுக்கு இசை பற்றியும் தெரியுமா? அது எனக்குத் தெரியாது. அவனுக்கு வேற ஒரு திறமை இருந்ததுனு எங்க அப்பா சொல்லுவாரு. ஆனா மத்தவங்க அத குறைபாடுனு சொன்னாங்க. எனக்கு அது என்னனு சரியா தெரியல. ஆனா நான் நேரில பார்த்த சில நிகழ்வுகள் ஆச்சரியமானது. மூட்டை அரிசியில் ஒரு கோதுமையைக் கலந்து பரப்பிவிட்டா அத கண்டுபிடிக்க நமக்கு எவ்வளவு நேரம் ஆகும், ஏன் சில நாட்கள் கூட ஆகலாம். ஆனா வேப்பங்குழல் சில நொடிகள்ல அத சரியா கண்டுபிடித்துவிடுவான். எங்க அப்பாக்கிட்ட கேட்டதுக்கு, அவன பொருத்தவரை இந்த உலகமே வண்ணம்தான் என்றும் அந்த வண்ணத்தை வைத்துத்தான் இதையும்

பிரித்து எடுக்கிறான் என்பார். அதாவது நாமதான் அதை அரிசியும் கோதுமையுமா பார்ப்போம். ஆனா அவனுக்கு அது சிவப்பும் பச்சையுமா தெரியும். சிவப்புக் குவியல்கள் நடுவே கிடக்கும் ஒற்றைப் பச்சையைக் கண்டுபிடிப்பது சுலபம்தானே..." என்றபடி என்னை அவர் வெறித்தபோதுதான் synasthesia[5] வைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன்.

"அவனுக்கு எல்லாமே வண்ணம்தான். நீங்க பார்த்த வண்ண கீபோர்ட் அத வரைஞ்சதும் அவன்தான். அவன் வரைஞ் சதுலயே முகமில்லாத ஒரே ஓவியம் அதுதான்" என்றபடி அவன் வரைந்த முகக்குவியல்களின் மூட்டையை என் எதிரே கொட்டினார்.

ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு விதம்... அத்தனையிலும் ஏதோ ஒரு குணம். எல்லா முகங்களுக்குக் கீழும் புல்லாங்குழலும் இசைக் குறிப்புகளும் இருந்தன.

அவசர அவசரமாக அங்கிருந்து ஓடி என் வண்டியில் இருந்த கீபோர்ட் கருவியை எடுத்துக்கொண்டு வந்தவன் ஒவ்வொரு முகமாக எடுத்துப் பரப்பி வைத்துவிட்டு எதை வாசிக்கலாம் என்று கண்களை மேயவிட்டேன். அந்தப் பெண் என்னை ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

என் கண்கள் அந்த முகத்தின் மீது விழுந்தது. அது... ஆம் அது... நான் முதன்முதலில் அவனைப் பார்த்தபோது அவன் வரைந்துகொண்டிருந்த அந்த ஆரஞ்சு நிற முகம். பல மாதங்களாக எனக்குள் ஓடவிட்டு மீண்டும் மீண்டும் இசைக் குறிப்பை உருவாக்கித் தோற்றுப்போன அதே முகம்... உடல் சிலிர்த்தது. அவசர அவசரமாக அதை எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். தொடங்கிய சில வினாடிகளில் என்னுள் விரிந்தது அந்தக் காட்சி. மங்கிய பகல் வெளிச்சத்தில் ஆங்காங்கே இருட்டுக் கட்ட மின்னலோடு கூடிய அடை மழையில் கண்ணெதிரே விரியும் எல்லைகளற்ற கடல். மீண்டும் உடல் சிலிர்த்தது. துள்ளிக் குதித்தேன். ஆஹா... அவன் வரைந்தது கடலை. அன்று கடற்கரையில்தானே அவனை முதன்முதலில் சந்தித்தேன். கடலைப் பார்த்தபடிதானே அவன் அமர்ந்திருந்தான். ஆக அவன் வரைந்த அந்த முகம் கடலின் அப்போதைய சூழலையும் குணாதிசயத்தையும் பிரதிபலிக்கும் வண்ண முகம்.

அடுத்துப் பறவைகளைப் பார்த்துத் தாளமிட்டபடி எதையோ வரையத் தொடங்கியது நினைவிற்கு வந்தது. இப்போது எல்லாம் தெளிவாகப் புரியத் தொடங்கியது. அவன் வரைவது மனித முகங்களை மட்டுமல்ல... குணங்களை. குணங்களை மட்டுமல்ல, இந்த இயற்கையையும், பிரபஞ்சத்தையும், பறப்பவைகளையும், நடப்பவைகளையும், பார்வைகளையும் என அனைத்தையும் வண்ணத்தோடும் இசையோடும் பதிவு செய்துகொண்டிருக்கிறான். பண்பியல் பதிவு. ஒரு கேமரா எப்படி இருப்பதை அப்படியே பதிவு செய்யுமோ அதைவிட தத்ரூபமாக இந்த உலகத்தின் அக இயல்புகளை, உணர்வுகளை, ஆன்மாவை வண்ணத்தாலும் இசையாலும் பதிவு செய்திருக்கிறான். வாய் பேச முடியாத காது கேட்காத ஒருவனின் பார்வையில் விரியும் உலகத்தின் ஆன்மா இந்த முகங்கள்...

இப்போது அவன் எனக்கு வரைந்து தந்த முகத்தின் குறிப்பை இசைத்துப் பார்த்தேன். ஆம் அந்த ஓவியத்தில் இருக்கும் முகம் என்னுடையதுதான். வெளித்தோற்றத்தில் எல்லோருக்கும் தெரியும் என் முகமல்ல. என் சிந்தனைகள், எண்ணங்கள், விருப்புகள், வெறுப்புகள் என முழுக்க முழுக்க என் அகமே அந்த முகம்.

இது நாள் வரை எவ்வளவு குறுகிய மனப்பான்மையோடு இந்த உலகத்தை அணுகியிருக்கிறோம். மனிதர்கள்தான் முகங்கள், அதிலும் குறிப்பாக முகங்களே முகங்கள் என்ற என் எண்ணத்தை உடைத்து

நொறுக்கிய தருணம் என்னையறியாமல் கண்கள் கண்ணீர்ச் சிந்தத் தொடங்கின. வாய்விட்டுக் கதறி அழுதேன். எனது அழுகைகள் என்னுள் இசையாகவும் முகமாகவும் உருவெடுத்துக் கரைந்துபோயின...

எதுவும் பேசாமல் அங்கிருந்து நகர்ந்தேன்... அந்த வீட்டுக் கதவைத் திறந்து வெளியேறியபோது, உயிர்ப்புள்ள வண்ண ஓவியங்கள் என்னைச் சுவீகரித்துத் தன்னுள் இணைத்துக்கொண்டு கச்சேரியைத் தொடங்கின...

குறிப்பு:

1) தற்காலத்தில் பண்பியல் ஓவியம் (Abstract art) என்பது, உலகப் பொருட்களை வரையாமல், நிறங்களையும், வடிவங்களையும் பயன்படுத்தி வரையப்படும் ஓவியமாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது. ஆனால், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இயல்பான உருவங்களை எளிமையான வடிவில், அவற்றின் உலக இயல்பு குறைக்கப்பட்ட நிலையில் வரைவதையே குறித்தது. இந்த ஓவியங்கள் உலகப் பொருட்களை நேரடியாக அல்லாமல் மறைமுகமாக வெளிக்காட்டின. அக்காலத்தைச் சேர்ந்த கியூபிசம் மற்றும் இது போன்ற பிற கலை இயக்கங்கள் சார்ந்த ஓவியங்கள் இந்த அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இவ்வாறான நுட்பம், உலகப் பொருட்களின், வெளித் தோற்றத்துக்குப் புலப்படாத, உள்ளார்ந்த பண்புகளை ஓவியத்தில் கொண்டு வருவதற்கு உதவியது.

2) Kandinsky வசீலி கண்டீன்ஸ்கி (Wassily Kandinsky): ரசியாவைச் சேர்ந்த ஓவியர். இருபதாம் நூற்றாண்டின் பிரபலமான ஓவியர்களுள் ஒருவர். முதன்முதலாக நவீன பண்புரு (abstract) ஓவியங்களை வரைந்தவராகக் கருதப்படுபவர். இவர் வண்ணங்களை இசைக் கருவியின் சத்தங்களாக உருவகித்துக்கொண்டார்.


3) ஐசக் நியூட்டன் முதல் வண்ண சக்கரத்தைக் கண்டுபிடித்தார். இது சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், இண்டிகோ மற்றும் வயலட் வண்ணங்களைக் கொண்டிருந்தது. வெள்ளை ஒளியை (சூரிய ஒளி) ஒரு முப்பட்டகத்தின் வழி செலுத்தும்போது அது ஏழு வண்ணங்களாகப் பிரிந்தது. அவற்றை ஒரு தட்டில் வரைந்து சுழற்றும்போது மீண்டும் வெண்மை நிறத்தில் தோன்றியது. வண்ணச் சக்கரத்தின் அசல் நோக்கம், ஒளியை அதன் நிலையான வண்ணங்களாகப் பிரித்து, வெள்ளை ஒளியில் மீண்டும் இணைவது எப்படி என்பதைக் காட்டுவதாகும். அசல் வண்ண சக்கரம் ஒளியியல் மற்றும் ஒளி நிகழ்வுகள் பற்றிய கண்டுபிடிப்புகளைப் பற்றியது, இப்போது அது வண்ணச் சேர்க்கைக்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

4) கோதே (Johann Wolfgang von Goethe) ஒரு ஜெர்மானிய எழுத்தாளர். நிறங்களின் கோட்பாடு (Theory of Colours) என்னும் அறிவியல் நூலொன்றையும் இவர் எழுதினார். கோதேவின் புத்தகம் பல்வேறு சூழ்நிலைகளில் நிறம் எவ்வாறு உணரப்படுகிறது என்பதற்கான பட்டியலை வழங்குகிறது, மேலும் ஐசக் நியூட்டனின்அவதானிப்புகள் சிறப்பு நிகழ்வுகளாகக் கருதுகின்றன. நியூட்டனைப் போலல்லாமல், கோதேவின் அக்கறை வண்ணத்தின் பகுப்பாய்வு சிகிச்சையில் இல்லை, நிகழ்வுகள் எவ்வாறு உணரப்படுகின்றன என்பதற்கான குணங்களைப் பற்றியது.

5) சினெஸ்தீசியா (synasthesia): ஒரு புலனுணர்வு நிகழ்வு ஆகும், இதில் ஒரு உணர்வு அல்லது அறிவாற்றல் பாதையின் தூண்டுதல் இரண்டாவது உணர்வு அல்லது அறிவாற்றல் பாதையில் தன்னிச்சையான அனுபவங்களுக்குத் தேவை. உதாரணமாக, சினெஸ்தீசியா உள்ளவர்கள் இசையைக் கேட்கும்போது நிறங்களை அனுபவிக்கலாம், சில வாசனைகளை மணக்கும்போது வடிவங்களைப் பார்க்கலாம் அல்லது வார்த்தைகளைப் பார்க்கும்போது சுவைகளை உணரலாம்.

கவிஜி

# விடுதலை.. விடுதலை.. விடுதலை!




திரைப்படம்

**A Man Escaped**

விடுதலை...

அது தரும் உணர்வைச் சொல்ல எதிர்க்காற்றிடம் கதை கேட்கும் ஒரு திசையாக இருக்க வேண்டும். அது கொண்ட மொழியின் மறு பார்வை... என்னை அடைத்து வைக்க யாருக்கும் உரிமை இல்லை என்று பேசுகிறது. ஒரு மனிதனைப் பிடித்துச் சித்திரவதை செய்ய இன்னொரு மனிதனுக்கு என்ன உரிமை இருக்கிறது எனக் கேட்கிறது. கேள்விகளால் துளைக்க தோட்டாக்கள் இல்லாதபோது கிடைக்கின்ற ஒவ்வொரு சிறு துரும்பும் தோட்டாக்களே எனத் திரையில் விரியும் இந்த மொத்தப் படமும் சுவர்க்கடிகாரத்தின் டிக் டிக் டிக் போல இதயச் சுற்றலின் திக் திக் திக்தான்.


மனிதன் எப்போதும் எங்கிருந்தும் தப்பிக்கவே முயற்சிக்கிறான். ஆனாலும் அதன் நீட்சி சிறைச்சாலையில் பயங்கரமாக படு வேகமாக வெளிப்படுவது எல்லாருக்கும் நடப்பதில்லை. எல்லைகள் தாண்ட நினைக்கும் எண்ணங்களுக்கே நடக்கிறது.

"எ மேன் எஸ்கேப்டு" கருப்பு வெள்ளையில் நம் எண்ணங்களை வண்ணவண்ணமாய்க் கலங்கடித்த சினிமா.

சிறைக்குள் அடைபட்ட ஒரு போராளி.... தன்னை மட்டுமே நம்பிச் சிறை தாண்டித் தப்பிக்க நினைப்பதே படத்தின் முழுக்கதை.

ஒவ்வொரு காட்சியிலும் ரூபத்திலும் அரூபமாய் தன் புத்திசாலித்தனத்தில் செயல்படும் கதையின் நாயகன் தத்ரூபத்தில் தவம் செய்துகொண்டே வரம் சேர்க்கும் நுட்பமானவன். மனமும் அது கூட்டும் ஆற்றலும்... சிந்தனையும் அது கொண்ட நூதனமும் அபாரம். நாயகனின் மனம் பேசுவதுதான் படம் முழுக்க காட்சிகளாக விரிகின்றன. ஒரு தனி மனிதனின் போராட்டத்தை அவனைத் தவிர வேறு யார் நமக்குச் சொல்ல முடியும்.

முதல் காட்சியிலேயே சிறைப்பிடிக்கப்பட்ட நாயகனை வண்டியில் கொண்டு செல்கிறார்கள். நிசப்த நொடியின் ஆழம் தாங்கொணாத் திரையில் இருந்து அவன் எகிறிக் குதித்து வெளியே தப்பிக்கிறான். ஆனால் அடுத்த கணம் அவன் மீண்டும் பிடிக்கப்பட்டு வண்டிக்குள் கொண்டு வந்து... இம்முறை கை விலங்கிட்டு அமர வைக்கப்படுகிறான். அதன் பிறகு



சிறைக்கே உண்டான வன்முறை அவனை ஆட்கொள்கிறது.

பிறகு சிறையில் அடைப்படுவது கதையின் தொடர்ச்சியாக இருந்தாலும்.. தொடர்பற்றுத் தன்னை அறுத்துக்கொண்டு சிறையில் இருந்து தப்பித்துக் காணாமல் போவதே அவன் நோக்கம். சிறை தண்டனையை அனுபவிக்க அவன் ஒப்புக்கொள்வதே இல்லை. ஆனால் சிறைச்சாலையோ பெரிய பெரிய மதில்களால் சூழ்ந்திருக்கிறது. அதுவும் இரண்டு அடுத்தடுத்த மதில்கள் மானுடத்தை மட்டம் தட்டி மலை போல நிற்கின்றன. இன்னொரு தகவல் என்னவெனில்... இந்தச் சிறைக்கு வந்த 100 பேரில் 75 பேர் இதுவரை உயிருடன் திரும்பியதே இல்லை. ஆக மரணம் சூழ்ந்த பிடியில்... இருக்கும் ஒரே ஒரு தளர்த்தல் தப்பித்துச் செல்வதே.

எப்படியும் சாகப்போகும் சூழலில் தப்பிக்கும் முயற்சியில் செத்தாலும் ஒரு திருப்தி என்ற முடிவுக்குப் பிறகு அவனுள் நடக்கும் திட்டமும் அதன் தீவிரமும் நம்மை மூச்சு விட மறக்கடிக்கும்.

வேண்டும் என்பவனுக்கே இந்த உலகம் கைகளை விரிக்கும். தேவை உள்ளவனுக்கே இந்தக் காற்று சுவாசத்தை அளிக்கும். வாழ வேண்டும் என்ற ஆசை உள்ளவனுக்கே உயிர் தாங்கும் உடல் வாய்க்கும்.

முடிவெடுப்பதில் தேங்கிவிட்டால் மானுட ஓட்டம் மந்தமாகிவிடும். விடுபட வேண்டுமானால் வீறு நடை கொள்ளும் நதியாக வேண்டும். பாறை இருக்கும். பள்ளத்தாக்கு இருக்கும். படுகுழிகள்கூட இருக்கும். பார்த்துக்கொண்டே இருந்தால் பயணம் எப்படி சாத்தியம். அதுவும் தனித்த தனித்துவமான பயணங்களில் ஆபத்துதான் நண்பன். அவன் யோசிக்கிறான். சுற்றிலும் அவனைச் சூழ்ந்திருக்கும் தண்டனை அவனை இம்சிக்கிறது. சாப்பாடோடு வரும் கரண்டியை எடுத்து வைத்துக் கொள்கிறான். சிறு துரும்பும் அல்ல. சிறு எறும்பும் உதவும்.. மனமுள்ள வேகத்துக்கு. அவன் ஆழ்மனம் நம்புகிறது.

கிடைக்கின்ற கரண்டி முதல்... கட்டிலில் பதிந்துள்ள கம்பிகள் வரை... படுக்கையில் உள்ள நார்கள் முதல்... தனக்குக் கிடைத்த துணிகள் வரை அனைத்தையும் கிழித்து லாவகமாக மடித்துத் திரித்துக் கயிறாக மாற்றிக்கொள்கிறான். எந்த வழியிலாவது வெளியேறிவிட வேண்டும் என்ற வேண்டுதலை அவன் தினம் தினம் செய்துகொண்டே இருக்கிறான். எந்த நேரத்திலும் மாட்டிக்கொள்ளலாம். ஆனாலும் அந்த நேரம் வரை போராடும் அவனுள்ளத்தில் எப்போதும் முப்போதும் அதிர்ந்துகொண்டே இருப்பது விடுதலை விடுதலை... விடுதலை என்பதே.

எது கிடைத்தாலும் அது கொண்டு வாழ்வைச் செதுக்கும் மானுடப் பரிணாமத்தை அவன் இன்னொரு முறை தன் தனித்த உலகத்தில் செய்து பார்க்கிறான். இறங்கி வேலை செய்கிறவனுக்கு இறைவன் உதவுகிறானோ இல்லையோ.. இயற்கை உதவும். அவன் அறையில் இருக்கும் ஜன்னல் ஒரே மரத்தால் செய்யப்பட்டவை அல்ல என்றும் துண்டு மரத்தால் இணைக்கப்பட்டவை என்றும் தெரிந்துகொள்கிறான். கையில் இருக்கும் கரண்டியைக் கொண்டு கிடைத்த மரத்துண்டின் இடைவெளியில் கோடு கிழித்துக்கொண்டே இருக்கிறான். கோடு ரோடாவது போல ஒரு கட்டத்தில் மரத்துண்டு கிழிந்துகொண்டு வெளிக்காற்றை அவன் முகத்தில் வீசுகிறது.


முயற்சி கொண்டவனுக்குத்தான் மூச்சுக்காற்றும் என்று புரிகிறபோது இன்னும் வேகமெடுக்கிறது அவன் திட்டமும் தீவிரமும்.

வெளியே இருப்பவர்கள் சிறைவாசிகளை ஒன்று... வேடிக்கை பார்ப்பார்கள் அல்லது வெறுப்பார்கள். அந்த ஜன்னல் வழியே தெரியும் பொதுமக்களில் ஒருவரிடம் பேசத் தொடங்குகிறான். உதவி கேட்கிறான். அவர் தன்னால் முடிந்த உதவியைச் செய்கிறார். வேடிக்கைக்கும் வெறுப்புக்கும் இடையே மானுடத் துளிர் அங்கே முளைக்கிறது.

ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டுமே வெளியே சென்று தன்னைச் சுத்தம் செய்துகொள்ள அனுமதி. அப்படி போகும்போது மட்டுமே சக கைதிகளைப் பார்க்கவோ கண்களால் பேசவோ காவலாளி அசந்த நேரம் பார்த்து வாய் வார்த்தைகள் சில பரிமாறிக்கொள்ளவோ முடியும். அப்படி கிடைத்த வாய்ப்பிலெல்லாம் தப்பித்துச் செல்வது பற்றி மூத்த நம்பகமான சில சிறைவாசிகளிடம் ஆலோசிக்கிறான். கிடைத்த பதில்கள் எல்லாமே முடியாது. நடக்காது. மாட்டிக்குவதான். ஆனாலும் அவன் விடாப்பிடி அவனை வழி நடத்திக்கொண்டிருக்கிறது. சக கைதிகளின் ஏளனப் பார்வையும் ஆறுதலும்.. நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் எல்லாமும் தவிர்த்து தன் நோக்கம் மட்டுமே வட்டமாய்ச் சுழலும் கழுகின் பார்வையைப் போலக் கூர்ந்து ஆழ்ந்து தன்னையே குவியும் தன்னை அவன் இன்னமும் கெட்டியாக நம்புகிறான்.

எப்போதும் சிறைச்சாலையைச் சுற்றி சைக்கிளில் ரோந்து வந்துகொண்டே இருக்கும் காவலர். அத்தனை பெரிய மதில் சுவர்கள். ஒரு மதிலில் ஏறி இறங்கித் தரையைத் தொட்டு மீண்டும் அடுத்த மதிலில் ஏறி இறங்குவது சாத்தியம் இல்லை. ஒரு மதிலில் இருந்து இன்னொரு மதிலுக்கு.... தயாரித்து வைத்திருக்கும் கயிறு கொண்டே செல்ல முடியும். அதை அந்தப் பக்கம் கவ்விக்கொள்ள நங்கூரம் ஒன்று வேண்டும். ஒருவழியாக எல்லாம் கிடைத்து தப்பிக்கும் நாளுக்குக் காத்திருக்கிறான். சிறைச்சாலையை ஒட்டிச் செல்லும் ரயிலின் சத்தம்தான் உதவப்போகிறது. அந்தச் சத்த நேரத்தில்தான் தன் காலடிகள் மதில் மேல் பட்டும் படாமல் நகர வேண்டும் என்று எல்லாம் திட்டமிட்டு ஒருவழியாக தயார் நிலையில் இருக்கும் நேரம்.. கிட்டத்தட்ட காவலர்களின் சந்தேகம் கதைநாயகன் மீது விழும் சமயம்... இனியும் தாமதித்தால் மாட்டிக்கொள்வோம் என்று மனதுக்குள் மணி அடிக்க... அன்றே தப்பித்துவிடலாம் என்று முடிவெடுக்கிறான்.

ஆனால் அன்று இன்னொரு கைதியை இடப்பற்றாக்குறையால் நாயகன் அறையில்



அடைத்துவிடுகிறார்கள். தலை மேல் தானே விழுந்தது போல உணர்ந்து செய்வதறியாது தவிக்கிறான் நாயகன்.

என்ன செய்வது.. சொல்லிவிடலாமா.... வேண்டாமா. இன்று விட்டால் நாளை நடக்கும் அறைச் சோதனையில் தயாரித்துவைத்திருக்கும் தப்பிக்கும் யோசனையை உதவும் பொருட்கள் காட்டிக் கொடுத்துவிடும். என்ன செய்வது. இவனோ சிறுவன். எப்படி புரிய வைப்பது. ஒருவேளை இவன் மாட்டிக் கொடுத்துவிட்டால்... எப்பக்கமும் சுழலாத மூளை அவன் பக்கமே சூல் கொண்டிருந்தது.

வேறு வழியில்லை. எந்த வழியும்

இல்லாதபோது இருக்கும் வழிதான் ஒரே வழி. இரவுக்குள் சிறை மிதக்கத் தொடங்குகிறது. கதையைத் திறந்துவிடுகிறான் நாயகன்.

அந்த 16 வயது போர்க்கைதிக்கும் பயம்தான். ஆனாலும்.. கூட சேர்ந்து தப்பிக்கச் சம்மதிக்கிறேன் என்கிறான். அவன் கண்களில் வாழ்வதற்கான இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்துவிடுமா என்று வழியும் ஏக்கத்தை நாயகனால் உணர முடிகிறது.

நாயகனுக்கு உள்ளுக்குள் நடுக்கம் இருந்தாலும் தியானம் செய்வது போல அவனின் எதிர்கால வாழ்வை நினைத்து நினைத்து மனதைத் திடப்படுத்துகிறான். இந்த



உலகில் அவன் மட்டுமே இருப்பது போல அவனைச் சுற்றி ஒரு வட்டம் உணர்கிறான். ஒருவேளை மாட்டிக்கொண்டால் மரணம் நிச்சயம். ஆதலால் தப்பித்தே ஆக வேண்டும்.

நேரம் ஓடிக்கொண்டே இருக்கிறது.

படபடப்போடும் பயத்தோடும் அங்கிருந்து நகரத் தொடங்குகிறார்கள். தனது வேட்கையை மட்டுமே நம்பும் நம்பிக்கை அவனை வழி நடத்துகிறது.

சத்தம் இல்லை... ஆனால் யுத்தம்.

இசை அவ்வளவாக இல்லை. வெறும் நகர்வுகள் மட்டுமே. சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே மூச்சு படும் பாடு... இதய சோதனை. நகர நகர... அவன் கோலத்தில் எந்தப் புள்ளி உதிரும் எந்தக் கோடு அழியும் என்ற பதற்றம் நம்மைப் பாடாய்ப் படுத்துகிறது. கண்கள் சிமிட்டினால்கூட காட்சி களைந்துவிடுமோ என்ற பதற்றம் நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. பத்து நிமிடத்துக்கு ஒருமுறை சிறைச்சாலையை ஒட்டி இருக்கிற தண்டவாளத்தில் ரயில் வந்து போகும்.. அப்போது வரும் சத்தத்தில் அவர்கள் வேகமாக ஆனால் பூனை போல நடக்க வேண்டும். ரயில் போய்விட்டால் அடுத்த ரயில் வரும் வரை... சுவரோரம் ஒடுங்கி நிற்க வேண்டும். சைக்கிளில் ரோந்து வரும் காவல்காரன் கண்ணில் மாட்டாமல் பதுங்க வேண்டும். தோளில் கனத்த கயிறு வேறு. நடுக்கத்தைத் தடுக்கவே முடிவதில்லை. மனித சட்டங்களைத் தாண்டும் உள்ளுணர்வுக்குக் கொம்புடைந்து கொண்டே இருப்பது இப்படித்தானோ.

நள்ளிரவு 1 மணிக்கு ஆரம்பித்த போராட்டம்.. இப்போது அதிகாலை மணி 4. வெளிச்சம் வந்துவிட்டால் கதை முடிந்தது.

என்ன செய்வதெனத் தெரியாமல் கடைசி கட்டடத்தைத் தாண்டவா.. வேண்டாமா.. மாட்டிக்கொள்வோமா என்ற திக் திக் நொடிகளில் அமர்ந்திருக்கிறார்கள். இருட்டுக் கண்களின் சிறு ஒளியும் பயங்கரம். அவர்கள் வெற்றிடம் வெறிக்கும் காட்சியில் எச்சில் விழுங்கும் நம் கண்கள். இதோ ரயில் வருகிறது.

இன்னும் பத்து நிமிடங்களில் படம் முடியப் போகிறது.

விடுதலையை சில நேரத்தில் தானே எடுத்துக்கொள்ளவும் வைக்கிறது இந்த மானுடத்தின் வெளிகள். அதற்குச் சில வேலிகளைத் தாண்டும் நெஞ்சுரம் வேண்டியிருக்கிறது. வாழ்வோ சாவோ... தீர்மானிக்கும் மதில்களில்.... பூனைக்கு எப்போதும் பதுங்கு நடை.

"எ மேன் எஸ்கேப்டு" அப்படி ஒரு விடுதலை வேட்கை.

மொழி : பிரெஞ்சு, ஜெர்மன்

இயக்கம் : Robert Bresson

ஆண்டு : 1956

மு.முருகேஷ்

# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை



புதுக்கோட்டையிலிருந்து வந்தவாசிக்குக் குடிபெயர்ந்து சரியாய்க் கால்நூற்றாண்டுக் காலங்கள் கடந்துவிட்டன. இப்போது நினைத்தாலும் அன்றைய நாட்களின் சென்னை நோக்கிய பேருந்துப் பயணங்கள் மனதில் பசுமைப் பூசிய வண்ணம் படிந்து கிடக்கின்றன. அந்த 120 கி.மீ., பயண தூரமென்பது பல நூறு கி.மீ., பயண தூரத்திற்கு ஒப்பானது.

வந்தவாசியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமானால் இப்போதிருப்பதைப் போல அதிகளவில் பேருந்து வசதிகள் அப்போதெல்லாம் கிடையாது. அதேபோல், விரைவுப் பேருந்துகளும் இல்லை. வந்தையிலிருந்து சென்னைக்குள் வர குறைந்தது நான்கு அல்லது நான்கரை மணி நேரமாவது ஆகிவிடும்.


அம்மையப்பட்டிலிருந்து இரு சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு, வந்தவாசிக்கு வருவோம். அங்கே பார்க்கிங்கில் வண்டியைப் போட்டுவிட்டு, நானும் வெண்ணிலாவும் சென்னைக்குப் பேருந்து ஏறுவோம். வந்தையிலிருந்து 40 கி.மீ., தூரத்திலிருக்கும் உத்திரமேரூருக்குப் பேருந்து வரவே, ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகும். அங்கே சிற்றுண்டிக்காகப் 'பத்து நிமிடம்' (இது நடத்துநர் சொல்லும் கால அளவு; உண்மையில் 20 நிமிடங்களுக்கு மேல் நிற்கும்) பேருந்து நிற்கும். பின்னர் அங்கிருந்து கிளம்பி, செங்கல்பட்டு பேருந்து நிலையம் வருவதற்குள் இரண்டு மணி நேரங்களைக் கடந்திருக்கும். செங்கல்பட்டு பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு, தாம்பரம் வருவதற்குள் ஒன்றரை மணி நேரம் ஓடியிருக்கும். 'எப்படா போய் சேர்றது?' என்று அதற்குள்ளாகவே அலுப்பு வந்துவிடும்.


சென்னையில் இலக்கியக் கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்று சேர, எப்படியும் நான்கு அல்லது ஐந்து மணி நேரமாகும். அதிலும் கூட்டம் தேவநேயப் பாவாணர் அரங்கம் (எல்.எல்.ஏ. நூலகக் கட்டிடம்), ஃபிலிம் சேம்பர், ஆனந்த் அரங்கம், காமராசர் அரங்கம் என்றால் அண்ணா சாலையில் பேருந்து போகும்போது இறங்கிச் சென்றுவிடுவோம். வேறெங்காவது என்றால்தான் அதற்கொரு ஆட்டோ பிடிக்க வேண்டும். அதுவும் வந்தவாசியிலிருந்து சென்னை வந்ததைவிட இரு மடங்கு செலவாகும்.

சென்னையில் நடைபெறும் இலக்கியக் கூட்டம் முடிய இரவு 8, 9 மணி ஆகிவிடும். இரவு எத்தனை மணியாலும் சரி; அவசர










அவசரமாக வந்தவாசிக்குக் கிளம்பிவிடுவோம். அங்கிருந்து கிளம்பி வீட்டிற்கு வந்துசேர, நள்ளிரவும் கடந்துவிடும். இரவு ஒரு மணி அல்லது இரண்டு மணிக்குப் படுத்து, மூன்று மணி நேரம் ஒரு குட்டித் தூக்கத்தைப் போட்டுவிட்டு, திரும்பவும் காலை 5 மணிக்கு எழுந்து, வேறொரு இலக்கிய நிகழ்வுக்காக மீண்டும் சென்னைக்குப் பயணமாவோம்.

“தெனமும் வந்தவாசிக்குப் போயிட்டு வந்துக்கிட்டு ஏன் இப்படி அலையுறீங்க? நைட் தங்கிட்டு, நிகழ்ச்சியை முடிச்சிட்டுப் போனாலென்ன...” என்று அன்போடு கேட்கும் நண்பர்களுக்கு நாங்கள் சொல்லும் பதில் (மொக்கையான) இதுதான்;

“இங்கே படுத்தா தூக்கம் வராது. ஊருக்குப் போயி, ரெண்டு மணி நேரம் படுத்து எழுந்தா அலுப்பு போயிடும்.”

வந்தை டூ சென்னைக்கான பயணங்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இப்படியாகத்தான் தொடர்ந்தன. இந்தப் பயணங்களின் மூலமாகக் கிடைத்த இலக்கிய அறிமுகமும் நட்புகளும்தான் இன்றைக்கும் எங்கள் கைகளைப் பின்னியபடி தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

சென்னையில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்களிலெல்லாம் அந்த இளைஞனைச் சந்திப்பேன். கருத்த மேனி; அடர்வண்ண ஆடையில் வாஞ்சையும் அன்பும் ததும்பும் புன்னகை முகம். பார்த்ததுமே தோழமை கொள்ளத் தூண்டும் கனிவு.

நான் புதுக்கோட்டை; அவர் தஞ்சாவூர் என்பதாகத்தான் எங்களது முதல் அறிமுகம் ஆனது. பத்திரிகையில் பணியாற்றிக்கொண்டே திரைப்படப் பாடல் எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்.

பெற்றோர் வைத்த பிரேம்குமார் எனும் பெயருடைய அந்த இளைஞன்தான், மகாகவி பாரதியின் கவிதைகள் மீது கொண்ட காதலினால் புனைபெயரைத் தாங்கி, இன்றைய தமிழ்த் திரையுலகின் புகழ்மிக்க பாடலாசிரியராகக் கோலோச்சிக்கொண்டிருக்கும் அன்புத்தோழன் கவிஞர், பாடலாசிரியர் யுகபாரதி.

நெற்களஞ்சியங்கள் நிறைந்த தஞ்சையில் 1976ஆம் ஆண்டு டிசம்பர் 2 அன்று த.கா. பரமசிவம்–வசந்தகுமாரி தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர் யுகபாரதி. தந்தை பொதுவுடைமை இயக்கத்தில் பற்றுடையவர். கட்சியில் முழு நேரப் பணியாளராகவும் செயலாற்றிக்கொண்டிருந்தார்.

அப்பாவைத் தேடி வீட்டிற்கு வரும் தோழர்களுடன் அப்பா உரையாடுவதைக் கவனித்துக்கொண்டிருப்பார் யுகபாரதி. எதையும் எளிமையாகவும் அரவணைப்போடும் சொல்லும் இயல்புடையவர் அப்பா.

வீட்டில் இருந்த ஏராளமான நூல்கள் யுகபாரதியின் வாசிப்புக்குத் தீனி போட்டன. பள்ளிப்பாடங்கள் பற்றி எதுவும் பேசாமல், வீட்டிலுள்ள நூல்களைப் பற்றியும், அந்த நூலைப் படி, இந்த நூலைப் படி என்றும் சொல்வதே அப்பாவின் வழக்கம். எப்போதும் நூல்களைப் படித்துக்கொண்டிருந்த யுகபாரதிக்குக் கவிதையின் மீதான நாட்டம் உண்டானது.

13ஆவது வயதில் தனது முதல் கவிதையை ஈழப்போராட்டம் குறித்து எழுதினார். அந்தக் கவிதை ‘தமிழர் கண்ணோட்டம்’ இதழில் வெளியானது. கவிதையைப் படித்துவிட்டுப் பாராட்டிய அப்பாவின் நண்பரான செல்வகணேசன், ‘மரபைக் கற்றுக்கொண்டால் இன்னும் நீ நன்றாகக் கவிதை எழுதலாம்’ என்று யுகபாரதிக்கு மரபுக் கவிதையெழுதக் கற்றுக்கொடுத்தார். நான்கு ஆண்டுகள் காலை, மாலை என இரு வேளையும் அவரது வீட்டிற்குச் சென்றதோடு, அவரது வீட்டிலுள்ள நூல்களையெல்லாம் ஆர்வத்தோடு படித்தார் யுகபாரதி.


தஞ்சையிலுள்ள மேக்ஸ்வெல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வியைப் பயின்றுவிட்டு, அறந்தாங்கியிலுள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல் பட்டயப் படிப்பை முடித்தார்.

அப்போது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 அன்று அறந்தாங்கியில் தமுஎச சார்பில் கலை இரவு நடைபெறும். ஆண்டுதோறும் கலை இரவில் கவிதை படிப்பது, நிகழ்வுகளைத் தொகுத்து வழங்குவது என்று ஏதாவது ஒரு பங்களிப்பைத் தொடர்ந்து ஆற்றி வந்தேன். அறந்தாங்கியில் படித்துக்கொண்டிருந்த யுகபாரதியும் கலை இரவு நிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்திருக்கிறார். ஒருமுறை புதுக்கோட்டைக்கு வரும்போது என்னைப் பார்க்க திருக்கோகர்ணத்திலுள்ள என் வீட்டிற்கு வந்திருக்கிறார். அப்போது நான் வெளியூர் சென்றிருக்கின்றேன். நீண்ட வருடங்களுக்குப் பிறகு சென்னை சந்திப்பில் யுகபாரதியே என்னிடம் இதைப் பகிர்ந்துகொண்டார்.

யுகபாரதி கல்லூரியில் படிக்கும்போது எழுதிய கவிதைகள் பல்வேறு இதழ்களில் பிரசுரமாகின. அதனைத் தொகுத்து ஒரு ஆல்பமாக்கினார்.

அந்த ஆல்பத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, பத்திரிகையில் வேலை செய்யும் ஆர்வத்தோடு சென்னைக்குக் கிளம்பினார். பல தேடல்களுக்குப் பிறகு கவிஞர் வித்யாசாகர் ஆசிரியராகப் பணியாற்றிய ‘ராஜரிஷி’ வார இதழில் உதவியாசிரியராகப் பணியில் சேர்ந்தார். வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான் ஆசிரியராக இருந்து தொடங்கப்பட்ட ‘ராஜரிஷி’ இதழ், சில ஆண்டுகளில் நின்றுபோனது. அதனை டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் முக்கியப் பொறுப்பில் இருந்த எனது மாமா வெங்கடாசலம் வாங்கி, வெளியீட்டாளராக இருந்து, ‘ராஜரிஷி’யை





மீண்டும் வெளிக்கொண்டு வந்தார்.

ஒருமுறை புதுக்கோட்டை திருக்கோகர்ணத்திலுள்ள தனது வீட்டிற்கு வருகை தந்த மாமா வெங்கடாசலம், நான் கவிதைகள் எழுதுவேன் என்பதையறிந்து, எனக்கு 'ராஜரிஷி' இதழினைக் கொடுத்து, கவிதைகள் எழுதுமாறு கூறினார். நானும் அதில் பல கவிதைகளை எழுதினேன்.

பிறகு 1996இல் யுகபாரதியின் முதல் கவிதை நூல் 'மனப்பத்தாயம்' வெளியானது. சிறிய நூல் என்றாலும் அதிலிருந்த பல எதார்த்தக் கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதிலும் குறிப்பாக, 'வணக்கம் காம்ரேட்' எனும் கவிதை பெரிய விவாதங்களை உண்டாக்கியது.

'வீட்டுக்குள் நுழையும்போதே
அப்பாவிடம் சொல்வார்கள்
வணக்கம் காம்ரேட்...
வசந்தி, வந்தவங்களுக்குக் காபி கொடு
அரக்க பறக்க அம்மா
அடுத்த வீட்டுக் கதவு தட்டுவாள்
வர்ற ஆறாம் தேதி
செயற்குழு
மறக்காம வந்திடுங்க
ஐந்தாம் தேதியே
அம்மாவின் நகைகள்
அடகுக்கடையில்
பத்தாம் தேதியும்
அப்பா உறுதியோடிருந்தார்
புரட்சி வரும்
இதே போன்றொரு கனவோடு
ஐம்பது ஆண்டுகளாய்ப் பக்கத்து வீட்டுக்
கிறிஸ்தவத் தாத்தாவும்
சொல்லிக்கொண்டே இருந்தார்
இயேசு வருகிறார் இயேசு வருகிறார்

இதோ இதோ

வணக்கம் காம்ரேட்.’

ஆனாலும் எனக்கு அந்த நூலில் மிகவும் பிடித்த இன்றளவும் நினைவில் நிற்கும் கவிதையொன்று;

‘அறிந்த கழிப்பறைகள்

அத்தனையிலும்

உடைந்தே கிடக்கும்

நீரள்ளும் குவளைகள்.’

பொதுக்கழிப்பறைகளைப் பயன்படுத்தும் எவரின் மனதையும் நெருடச் செய்யும் கவிதையாக இக்கவிதை இருக்கிறது. முதல் நூலிலேயே பலரின் கவனத்தையும் பெற்றவரானார் யுகபாரதி. அந்த நூலுக்குத் தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசும் கிடைத்தது.

‘ராஜரிஷி’ இதழ் நின்றுபோனதும், ‘கணையாழி’ மாத இதழில் பொறுப்பாசிரியராகப் பணியில் சேர்ந்தார். அக்காலக்கட்டத்தில் இலக்கிய வாசிப்பில் தீவிரமாக ஈடுபட்டார். இலக்கியம் குறித்த தேடல்கள் புதிய புரிதலை நோக்கி யுகபாரதியை அழைத்துப்போயின.

‘மனப்பத்தாயம்’ நூலைப் படித்த அசோசியேட் இயக்குநர் செழியன், இயக்குநர் களஞ்சியத்திடம் யுகபாரதியை அழைத்துப் போனார். சரத்குமார் நடிப்பில் களஞ்சியம் இயக்கிய ‘கேசவன்’ எனும் படத்தில் தேவா இசையமைப்பில் பாடல் எழுதும் வாய்ப்பு யுகபாரதிக்கு கிட்டியது. ஏனோ அந்தப் படம் பாதியிலேயே நின்றுபோனது.

பிறகு, 2001ஆம் ஆண்டில் இயக்குநர் என்.லிங்குசாமியின் அறிமுகம் கிடைக்கவே, அவரது முதல் படமான ‘ஆனந்தம்’ படத்தில் பாடல் எழுதும் வாய்ப்பு உருவானது. எஸ்.ஏ.ராஜ்குமார் இசையில் ‘பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன் ஒற்றை நாணயம்’ எனும் பாடலை எழுதினார் யுகபாரதி. படமும் வெற்றி; யுகபாரதியின் பாடலும் சூப்பர் ஹிட். ஆனாலும் தொடர்ந்து எட்டு மாதங்களுக்கு வேறு வாய்ப்புகள் ஏதுமின்றி இருந்தார். லிங்குசாமியின் இரண்டாவது படமான ‘ரன்’ படத்தில் மீண்டும் பாடல் எழுதும் வாய்ப்பு யுகபாரதிக்கு வாய்த்தது. வித்யாசாகர் இசையில் ‘காதல் பிசாசே...’ எனும் பாடலை எழுதினார். அந்தப் பாடல் இளைய இதயங்களை மொத்தமாக வசீகரித்தது. பட்டிதொட்டியெங்கும் முணுமுணுக்க வைத்தது.

எளிமையின் அழகும் கவித்துவமும் நிறைந்த தனது பாடல்களைத் தொடர்ந்து எழுதி, தமிழின் முன்னணிப் பாடலாசிரியர் எனும் உயரத்தை நோக்கி முன்னேறிச் சென்றார் யுகபாரதி. ஆனாலும் அவ்வப்போது தனது கவிதை நூல்களையும் கட்டுரை நூல்களையும் தந்துகொண்டேயிருந்தார்.

மனப்பத்தாயம், பஞ்சாரம், தெப்பக்கட்டை, நொண்டிக்காவடி, தெருவாசகம், அந்நியர்கள் உள்ளே வரலாம், மராமத்து, முனியாண்டி விலாஸ், பாதாளக் கொலுசு, உன்னையல்லால், மஹாபிடாரி ஆகிய கவிதை நூல்களையும், நல்லார் ஒருவர், பின்பாட்டு, இடம் பொருள் இசை, தத்தகாரம், நேற்றைய காற்று, நிழல் பொம்மை, ஒரு பாட்டு கொஞ்சம் பின்னணி, ஊஞ்சல் தேநீர், பக்கத்து மேசை, பழைய வாக்கியம், அகத்திரை உள்ளிட்ட கட்டுரை



நூல்களையும், நடைவண்டி நாள்கள் எனும் தன்வரலாறு நூலினையும் எழுதியுள்ளார். திரைப்பாடல்கள் பாட்டு புஸ்தகம் 1 மற்றும் 2 என இரு தொகுதிகளாகவும் வெளிவந்துள்ளன.

'நிரந்தர ரட்ச்சகி' எனும் யுகபாரதியின் கவிதையொன்றில் ஒவ்வொரு வரியும் நம்மைக் கிறங்கடிக்கும். அதிலிருந்து சில வரிகள்... இதோ;

'கடவாயில் என்னை மெல்லும்
காயகல்பம்;
இதழ்கள் எழுதும்
தொடர்கதை; சுருங்கச் சொன்னால்
தொகுக்காத மர்ம நாவல்
வடலூரும் காணா ஜோதி
வகுப்பறையில் வழியும் தூக்கம்
அடங்காத பருவக் காய்ச்சல்
ஆடாத இளமைத் தொட்டில்
வாயிலில் நடக்கும் கோலம்
வாலிபப் பறையின் ஓசை
தேயிலை பருகும் பானம்
தெம்மாங்கு பாட்டின் தாளம்
பாயிலே படுக்கும் தோகை
பத்தினி சமைத்த சோறு
சாயலில் மங்கள வைபவம்
சந்திரனின் சயன விடுதி.'

திரைப்படப் பாடல்களிலும் கவிதைகளிலும் யுகபாரதி எழுதியிருக்கும் காதல் வரிகள், காதலையொத்த அழகும் இனிமையும் ததும்பி வழியும் வைர வரிகளாக ஒளிர்கின்றன. 'வீடு' எனும் கவிதையில் இப்படி எழுதுகிறார்.

'ஓரங்கிழிந்த பாய்
காரை பெயர்ந்த சுவர்
ஒட்டடை படிந்த ஜன்னல்
ஓசை எழுப்பும் மின்விசிறி
கலைந்த தலையணை
கழுவாத பாத்திரம்
என்றாலும் என் வீடு இனிது.
ஏனெனில்,
எதிர் வீடு உனது..!'

எதிர் வீடு காதலியின் வீடாக அமைகிற பாக்கியம் இங்கு எத்தனை காதலர்களுக்கு வாய்த்திருக்கிறது..? இன்னொரு ரசமான கவிதை 'வளையல்.'

'உடைந்தால் கலங்குவாயென்று
இரப்பர் வளையல்கள் வாங்கினேன்.
நீயோ
அளவு சரியில்லையென்று
இளைக்கத் தொடங்கிவிட்டாயே!'

ஆகா... இதுவல்லவோ... காதல்!

2026ஆம் ஆண்டில் தனது திரையுலகப் பாடல் பவனியின் வெள்ளி விழா ஆண்டினைத் தொடவிருக்கிற யுகபாரதி, இதுவரை 2000 பாடல்களை எழுதியிருக்கிறார். புகழ்பெற்ற பாடல்கள் எனப் பட்டியலிட்டால் அது நீளும். கனா கண்டேனடி தோழி... (பார்த்திபன் கனவு), மன்மத ராசா... (திருடா திருடி), தாவணி போட்ட தீபாவளி... (சண்டக் கோழி), கொஞ்ச நேரம் கொஞ்சும் நேரம்... (சந்திரமுகி), ஆகாசத்த நான் பாக்குறேன்... (குக்கூ), கூட மேல கூடை வச்சு கூடலூரு போறவளே... (ரம்மி), கண்ணம்மா கண்ணம்மா அழகு பூஞ்சிலை... (றெக்க), எள்ளு வய பூக்கலையே... (அசுரன்), மண்ணிலே ஈரமுண்டு... (ஜெய்பீம்) என மனதோடு பேசும் பல மெல்லிய பாடல் வரிகளால் காற்றிலும் கவிதைகளை விதைத்த பெருமை யுகபாரதிக்கு உரியது.

தனது பாடல்களுக்காக மூன்று முறை தமிழக அரசின் விருது, ஐந்து முறை ஆனந்த விகடன் விருது, ஃபிலிம்பேர் விருது,

சிற்பி இலக்கிய விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருது எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இடையில் 'படித்துறை' எனும் இதழினைச் சில காலம் ஆசிரியராக இருந்து வெளியிட்டார். 'நேர்நிரை' எனும் பதிப்பகத்தைத் தொடங்கி, இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் யுகபாரதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் 'காகித றெக்கை' எனும் நூலாக வெளியானது. அந்த நூலிலுள்ள போஸ்டர் ஒட்டுபவன், மீன்காரி, துணை நடிகை, பூக்காரி உள்ளிட்ட பல கவிதைகள் ஒரு சிறுகதைக்கான கூறுகளைக் உட்கொண்டுள்ளன. அதிலிருந்து ஒரு கதைக்க(வி)தை; தலைப்பு: கரகாட்டக்காரி.

'ஆடுகிறாள் அம்பலத்தில்
ஆதிசிவன் சிரிப்போடு
காலக் கயிறுகள்
கழற்றுகிற பம்பரம் போல்
தலைக்கு மேலிருக்கும்
பித்தளைப் பூங்கரகம்
இடுப்பு பாவாடையோ
பிழைப்பு ராட்டினம்
மேடையில்லாச் சேரிகளின்
மேல் நின்று ஆடுகிறாள்
கோவிலில்லாச் சாமிகளின்
கொடை நாளைக் கௌரவிக்க
வாணி ஒழுக ஒழுக
வந்து நிற்கும் பெருசுகளின்
கோணல் பார்வைக்குக்
கொடுக்கிறாள் சவுக்கடியை
நையாண்டி மேளங்கள்
நட்டென்று ஒலி எழுப்ப
சலங்கை சிரிக்கிறது
சாவு வீட்டு முற்றத்தில்
வேர்வை வருவதற்குள்
விடைபெறும் பரதத்தை
வேர்வை வழிய வழிய
விரட்டுகிறாள் கோபத்துடன்
இஞ்சி இடையழகு
இங்குண்டு பாரெனக்
கொஞ்சி அழைக்கிறாள்
குடிகாரக் கூட்டத்தை
ஏங்கி அழுவதில்லை
இவளுடைய சிருங்காரம்
நாங்கள் ஒசத்தியென்று
நடிப்பதில்லை ஒரு நாளும்
வெட்டவெளி மீது
வெறியோடு ஆடுகிறாள்
பட்ட துயர் தீர
பசியோடும் ஆடுகிறாள்
அவிழுமா கொக்கியென
ஆடவர் பார்த்திருக்க
கிடைக்குமா பத்து ரூபாய்
கேட்கிறது இவள் ரவிக்கை.'

கவிஞர், கட்டுரையாளர், பத்திரிகையாளர், பாடலாசிரியர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகச் சிந்தனைகளுடன் எழுதியும் இயங்கியும் வரும் யுகபாரதி, தமிழ்க் கவிதையிலும், திரையிசைப் பாடல்களிலும் தொட்டிருக்கும் உயரமானது இன்னும் இன்னுமாக உயர்ந்துகொண்டே செல்கிறது. யுகபாரதியின் எழுத்தாற்றலும் அவரது சிந்தனைகளின் வீச்சும் சிகரங்களைக் கடந்தும் தொடரும் என்பதே மிகுந்த நம்பிக்கையூட்டும் செய்தியாகிறது.

– இன்னும் வரும்

தொடர்-6

மானசீகன்

நம் புலப் பெயல் நீர்



# காலத்தால் மூத்த சுயமரியாதைக்காரர்

நம்மில் பலரும் எளியவர்களுக்கும் சுயமரியாதை இருக்கும் என்று யோசிப்பதே இல்லை.

"அவன் தராதரம் என்னன்னு தெரியாம சாதாரணமா பேசுற.." என்கிற வார்த்தையை நாம் பொதுவெளியில் பல நூறு முறைகளாவது கேட்டிருப்போம். உண்மையில் உயிரினும் மேலானது சுயமரியாதை. கொள்கைக்காக, நாட்டுக்காக, காதலுக்காக, நோவுக்காக, வறுமைக்காக உயிர் விட்டவர்களை விட தன் சுயமரியாதை பறி போனதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் செத்துப் போனவர்களே எண்ணிக்கையில் அதிகம்.

பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்குச் 'சமூகம் தன்னை எப்படிப் பார்க்கிறது' என்பதே முக்கியம். எல்லாப் பெண்களும் அப்படித்தான். ஆனால் நம் சமூகம் எல்லாக் காலத்திலும் குலப் பெண்டிர் × பொதுப் பெண்டிர் என்கிற இருமைகளை விடாமல் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறது. பெண்களுக்கு மரியாதை தந்து குனிந்த தலை நிமிராமல் நடக்கும் ஆண்மகன்கள் கூட காட்சி ஊடகங்களில் நடிக்கும் நடிகைகளிடம் பொது இடங்களில் மோசமாக நடந்துகொள்வதையும், தனிப்பட்ட உரையாடல்களில் அவர்களைப் பற்றி மட்டமாகப் பேசுவதையும் சர்வ சாதாரணமாகப் பார்க்க முடியும்.

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் 'ஆலங்குடி வங்கனார்' என்கிற புலவர் இந்த மனநிலையைக் கேள்விக்கு உட்படுத்துகிறார். அந்தப் பாடலில் வெளிப்படுவது ஒரு பரத்தையின் சுயமரியாதை.

சங்க காலத்தில் பரத்தையர் என்று தனிப்பிரிவினர் வாழ்ந்தனர். வசதி படைத்த ஆண்களுடனான அவர்களின் பால் உறவு அன்றைய சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. திருவள்ளுவர் மட்டும்தான் விதிவிலக்காக கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுகிற ஆணையும் கூட 'பரத்தன்' என்று அடையாளப்படுத்துகிறார். பௌத்தச் சிந்தனைகளை உள்வாங்கிய சீத்தலைச் சாத்தனாரிடம்தான் பரத்தமைக்கான எதிர்க்குரலைக் காண்கிறோம். ஆனால் சங்க காலத்தில் தொடங்கி சிலப்பதிகாரம் எழுதப்பட்ட இரண்டாம் நூற்றாண்டு வரை அது இயல்பான ஒன்றாகவே சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கண்ணகியைக்

'கையறு நெஞ்சத்தினளாக' தனிமையில் தவிக்கவிட்டு மாதவியிடம் சென்று காதல் மொழி பேசிய கோவலனைத் தந்தை மாசாத்துவானோ, மாமனார் மாநாய்கனோ ஒரு வார்த்தை கூட கண்டித்துப் பேசியதாகச் சிலம்பில் செய்திகள் இல்லை.

சமூகம் அங்கீகரித்தாலும் மனைவிகளால் அதை ஏற்க முடியாதல்லவா? அவர்கள் பரத்தைகள் குறித்து ஏசுகிற பல பாடல்கள் சங்க இலக்கியங்களில் உண்டு.

பிற்காலத்தில் தோன்றிய நந்திக் கலம்பகத்தில் ஒரு தலைவி தலைவனின் வேட்டியையே உருவிவிடுகிறாள்.

"நீ என் தங்கையின் வீட்டுக்குப் போயிருந்தபோது பாடினாயா?"

பரத்தையைத் 'தங்கை' என்று விளித்து உரையாடலைத் தொடங்குகிறாள். தொடக்கமே பெரிய நக்கல்.

"நீ பாடியது இங்கே வீடு வரை கேட்டது. உன் குரலைக் கேட்டு 'காட்டில் அழுகிற பேய்' என்று அன்னை கூறினாள். பிறர் 'நரி' என்றனர். தோழி 'நாய்' என்றாள். நான் மட்டும்தான் மிகச் சரியாக 'நீ' என்று கூறினேன்."

தலைவனின் காலை வாரி தலைகீழாகத் தள்ளி நிலத்தில் மூக்குடையப் போட்டு மிதிக்கும் உக்கிரமான நக்கல் இது.

இந்த மாதிரி ஏராளமான உதாரணங்களை எட்டுத்தொகையில் இருந்து எடுத்துக் கூற முடியும். ஆனால் பரத்தையின் எதிர்ப்பு பதிவானதே இல்லை. 'இவன் செய்த தவறுக்குக் கூட அவள் இருப்பே காரணம்' என்று கூறுகிற 'victim blaming' மனநிலையையே பல பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சாத்தனார் கூட மணிமேகலையில் 'பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியும் கண்ணகி போன்ற கற்புக்கரசிதான்' என்று நிரூபிக்க முயல்கிறாரே தவிர அவள் அவளாகவே இருந்து தன் தரப்பு நியாயங்களைப் பேச அனுமதிக்கவில்லை. ஒருவகையில் அவர் செய்தது 'மேல் நிலையாக்கல்' மனநிலை. அதனால்தான் வார்த்தைக்கு வார்த்தை 'மணிமேகலையைக் கண்ணகி மகள்' என்று மாதவி அடையாளப்படுத்துகிறாள்.

ஆனால் இந்தப் பாடல் இதற்கு நேர் எதிரானது. தலைவன் தலைவியை விட்டுப் பரத்தை வீட்டில் நீண்ட காலம் தங்குகிறான். பின் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையால் மீண்டும் தன் வீட்டுக்குப் போகிறான். அவனை ஏற்றுக்கொண்ட தலைவி பரத்தையை மோசமாகப் பேசுகிறாள். இந்த விஷயம் பரத்தைக்குத் தெரிய வருகிறது. அப்போது பரத்தை சுயமரியாதையோடு தலைவியின் காதில் விழும்படி பதில் கூறுவதே இப்பாடலின் சூழல்.

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே"
என்கிறது பாடல்.

இந்தப் பாடலில் பல நுட்பங்கள் உண்டு. கண்ணகி 'வழக்குரை காதையில்' பேசுவதை 'தேர்ந்த வக்கீலின் உரை' என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இந்தப் பாடலும் அப்படிப்பட்ட மறுப்புரைதான்.

தலைவி மட்டுமல்ல ஊரே நினைக்கிற விஷயம் இதுதான். 'பரத்தை தலைவனை ஏமாற்றித் தன் வசப்படுத்திவிட்டாள்.' ஆனால் 'நான் அவனைத் தேடிப் போகவில்லை. அவன்தான் என்னைத் தேடி வந்தான்' என்பதை அவள் உள்ளுறை உவமையின் வழியாக வெளிப்படுத்துகிறாள்.

"பொய்கையில் இருக்கிற மீன் அமைதியாக அதே இடத்தில்தான் இருந்தது. வயலருகே நின்ற மாமரத்தின் முற்றிய பழம்தான் தானாய் உதிர்ந்து அதன் வாயருகே சென்றது."



இந்த உவமைக்குள் ஏராளமான உளவியல் உண்மைகள் ஒளிந்திருக்கின்றன. அவரவர் தன் புரிதலுக்கேற்ப அதனை விரித்துக்கொள்ள முடியும் என்பதே பாடலின் சிறப்பு.

"என் வீட்டில் அவன் சுதந்திரமாக இருந்தான். சுதந்திரமாக இருப்பவன்தான் பேச முடியும். காதலில் திளைத்துப் 'பெருமொழி' கூற முடியும். ஆனால் அவள் வீட்டில் அவன் பேச்சற்றவன். வெறும் ஆடி பிம்பம். அவன் அங்க அசைவுகளைக் கூட அவளே தீர்மானிக்கிறாள். அங்கிருப்பது அவன் சுயம் இல்லை. அவள் விரும்பும் பிம்பத்தின் நகல்.." என்று போட்டுடைக்கிறாள். 'மரபுகளால் உருவாகும் கற்பை விட சுதந்திரத்தில் மலரும் காதலே உயர்வானது' என்று பறைசாற்றுகிறாள்.

அடுத்த வார்த்தையை அணுகுண்டு மாதிரி வீசுகிறாள். அவன் ஏன் நீ சொல்வதைக் கேட்டு ஆடி பிம்பமாக நடக்க வேண்டும் அல்லது அப்படி நடிக்க வேண்டும்? அந்த ஒன்றைத்தானே நீ கிரீடமெனக் கருதி அகம்பாவம் கொண்டு என்னைத் துச்சமாகப் பேசுகிறாய். அடி லூசுப்பெண்ணே! அது உனக்காகக் கிடைக்கும் மரியாதை இல்லை. உன் மகனுக்காகக் கிடைக்கும் மரியாதை. நெல்லுக்கு இறைத்த நீரைக் கொண்டு புல் புளகாங்கிதம் அடையக் கூடாதடி. நான் அவன் காதலி. நீ அவன் புதல்வனின் தாய். இதுதான் உன் இடம். அதிகம் ஆடாதே.

எவ்வளவு நுட்பமான துல்லியத் தாக்குதல். இந்தப் பாடலை வைத்து தலைவிகளை மட்டம் தட்டுவது நம் நோக்கமன்று. எவ்வளவு காலம்தான் ஒரு குலம் வசைகளையும், சாபங்களையும் மௌனமாக ஏற்றுக்கொள்ள முடியும். இது அடங்க மறுத்து அத்து மீறிய ஒரு பரத்தையின் குரல். இந்தப் பாடல் வழியே நிகழ்வது ஓர் அழகிய சமப்படுத்தல்.

நீயும் நானும் ஒரே உயிர் என்று ஒத்துக்கொள்வது ஆன்மீகம். என்னைப் போல் உனக்கும் சுயமரியாதை உண்டு என்று ஒத்துக்கொள்வதுதான் நிஜமான பகுத்தறிவு. பரத்தைக்கும் சுயமரியாதை உண்டுதானே என்று யோசித்த ஆலங்குடி வங்கனாரும் காலத்தால் மூத்த சுயமரியாதைக்காரரே!

மூலம் : ஜப்பானிய மொழி

தமிழில்—மணி சண்முகம்

கமெலியா மலர் வீழ்கிறது
ஆதிகாலத்து ஓடையொன்றின்
இன்றைய நீரில்
~ மிட்சுஹாஷி டகாஜோ (1899 - 1972)


ஆயுதமேந்திய போர் வீரன்
அடுக்குத் தண்டினைவிட்டு வெளியேறும்
மூங்கில் துளிர்
~ கவாய் சிகெட்சு (1634 - 1718)

புத்தருக்கான
என்னுடைய காணிக்கை
நெல் மலர்கள்
~ கவாய் சிகெட்சு (1634 - 1718)

கேட்பவரிடம்தான் இருக்கிறது
தனிமை
ஒரு குயிலின் அழைப்பொலி
~ சியோஜோ (1703 - 1775)

மேசைமீது இருக்கும் கிளிஞ்சல்கள்
மூடி மறைக்கின்றன
ஆழ்கடலின் பாடல்களை
~ டகேஷிட்டா ஷிசுனோஜோ (1887 - 1951)

மாதங்களுக்கும் நாட்களுக்கும் இடையில்
திரும்பிப்பார்க்கிறேன்
வசந்தத்தின் நதி
~ நகமுரா டெய்ஜோ (1900 - 1988)






# வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் – எதிர்மறை விளைவுகள்

There are some defeats more triumphant than victories - Michel de Montaigne

வெற்றி என்பது பொதுவாக சாதனை மற்றும் நிறைவு போன்ற நேர்மறையான விளைவுகளுடன் தொடர்புடையது என்றாலும், அது எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தலாம் அல்லது அடிக்கடி கவனிக்கப்படாத சவால்களை உருவாக்கலாம். இந்த எதிர்மறை அம்சங்கள் வெற்றியின் பின்விளைவுகள், தனிநபர்கள் அல்லது குழுக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை உளவியலாளர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகளும் பலவகையில் விவாதிக்கிறார்கள். அவற்றைப் பற்றிச் சற்று தெரிந்துகொள்ளலாம்.

1. அதீத நம்பிக்கை மற்றும் பெருமிதம் என்பது "வெற்றியாளரின் சாபம்" என்று சொல்கிறார்கள். குறிப்பிடத்தக்க வெற்றிக்குப் பிறகு, தனிநபர்கள் அல்லது குழுக்கள் தாங்கள் வெல்ல முடியாதவர்கள் என்று நம்பி, அதீத தன்னம்பிக்கை அல்லது பெருமிதத்தை வளர்த்துக்கொள்ளலாம். இது மோசமான முடிவெடுப்பதற்கும், பொறுப்பற்ற நடத்தைக்கும், எதிர்கால முயற்சிகளில் எச்சரிக்கையின்மைக்கும் வழிவகுக்கும். இதற்கு வரலாற்றில் நெப்போலியன் போனபார்ட் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

போலவே, வெற்றி மனநிறைவுக்கு (Complacency) வழிவகுக்கும். ஒரு இலக்கை அடைந்த பிறகு, தனிநபர்கள் அல்லது குழுக்கள் குறைவான உந்துதல் பெறலாம் அல்லது எதிர்கால வெற்றிகள் எளிதாக வரும் என்று கருதி முன்னேற்றத்திற்கான முயற்சியை நிறுத்தலாம். இந்த மனநிறைவு அவர்களைக் காலப்போக்கில் தோல்வி அல்லது சவால்களுக்கு ஆளாக்கிவிடும்.

2. ஒரு வெற்றிக்குப் பிறகு, அந்த வெற்றியைத் திரும்பப் பெறுவதற்கு அல்லது அதை மீறுவதற்கு உண்டான அழுத்தம் அதிகமாகும். தனிநபர்கள், விளையாட்டு

வீரர்கள் அல்லது நிறுவனங்கள் தங்கள் மீது மற்றவர்களால் வைக்கப்படும் புதிய மற்றும் பெரும்பாலும் நம்பத்தகாத எதிர்பார்ப்புகளைச் சமாளிப்பது கடினமாக இருக்கலாம். இந்த எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வாழ ஏலாத பயம், மன அழுத்தம், பதட்டம் ஆகியவற்றை உருவாக்கும். தனது வெற்றியால் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளை இழக்க நேரிடும். இந்த பயம் வெற்றிபெற்ற தனிநபர்களை முடக்கி, அவர்களை அதிக எச்சரிக்கையுடன் அல்லது எதிர்காலத்தில் ஆபத்துக்களை எதிர்கொள்ள தயங்க வைக்கிறது.

3. வெற்றி சில நேரங்களில் வெற்றிபெற்ற நபர்களைச் 'சமூகத் தனிமைப்படுத்தலுக்கு' வழிவகுக்கும். வெற்றியை அடைபவர்கள் மற்றவர்களால் பொறாமை அல்லது வெறுப்புடன் பார்க்கப்படலாம், இது உறவுகளில் இடைவெளியை ஏற்படுத்தும். நண்பர்கள், சகாக்கள் அல்லது சக ஊழியர்கள் யாரோ ஒருவரின் வெற்றியைப் பற்றி அச்சுறுத்தல் அல்லது பொறாமையாக உணரலாம், இது வெற்றியாளரை அந்நியப்படுத்த வழிவகுக்கும். சில தனிநபர்கள் தங்கள் வெற்றிகள் அல்லது சாதனைகளால் அடையாளம் காணப்படலாம், அவர்கள் வெற்றிக்கு வெளியே சுயஉணர்வைத் தக்கவைத்துக்கொள்ள போராடுகிறார்கள். வெற்றியின் ஆரம்ப உற்சாகம் மங்கும்போது, அவர்கள் வெறுமையை உணரலாம், ஏனெனில் அவர்களின் அடையாளம் உள்ளார்ந்த குணங்களுக்குப் பதிலாக வெளிப்புறச் சாதனைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

4. சில நேரங்களில், வெற்றிக்கான நாட்டம் நெறிமுறை அல்லது தார்மீகத் தரங்களின் அடிப்படையில் வருகிறது. ஏமாற்றுதல் அல்லது சுரண்டல் போன்ற வழிகளில் வெற்றியைப் பெற தனிநபர்கள் அல்லது குழுக்கள் நெறிமுறையற்ற தந்திரங்களை நாடலாம். அவர்கள் இதுபோன்ற வெற்றியை அடைந்தாலும், அது பெறப்பட்ட வழிமுறைகள், வெற்றியைக் கெடுக்கும். நற்பெயர் மற்றும் உறவுகளுக்கு நீண்டகால சேதத்தை இந்த வகை வெற்றிகள் ஏற்படுத்தும்.

விளையாட்டு, அரசியல் அல்லது வணிகத்தில் நெறிமுறை சமரசங்களுக்கு வழிவகுத்து ஊழல்கள் வழியில் வெற்றியை எந்த விலையில் வாங்கினாலும், அவ்வகை வெற்றியின் மீது கருப்பு நிழல் விழுவதைத் தடுக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில், அதீத விலை கொடுத்து வெற்றி அடையப்படலாம். ஆனால் அத்தகைய குறிப்பிடத்தக்க விலையில் கிடைக்கும் வெற்றியின் விளைவு அர்த்தமற்றதாக உணர்வதைத் தவிர்க்கமுடியாது.

"பைரிக் வெற்றி" (Pyrrhic victory) என்ற சொற்றொடர் மிகவும் பெரிய செலவில் வரும் வெற்றியைக் குறிக்கிறது, வெற்றியாளரை முன்பை விட மோசமாக்குகிறது. போரில் வெற்றி அடைவதற்குப் பெரும் இழப்புகளோ பெரும் காலதாமதமோ ஏற்பட்டால் அது "பைரிக் வெற்றி" எனப்படுகிறது. அது போல இன்னொரு வெற்றி கிட்டுமெனில், அதுவே தோல்வியடையப் போதுமான அளவுக்கு வெற்றி பெறும் தரப்புக்கு இழப்புகள் உண்டாக்கும். "பைரிக் வெற்றி" என்ற சொல் எபிரஸின் மன்னர் பைரஸிடமிருந்து வந்தது, அவர் ரோமுக்கு எதிரான போர்களில் வெற்றி பெற்றார், ஆனால் அவரது வெற்றிகள் இறுதியில் நீடிக்க முடியாத அளவுக்குக் கடுமையான இழப்புகளைச் சந்தித்தன. இந்தக் கருத்து பல நவீனச் சூழல்களில் பொருந்தும். ஒரு வெற்றியை அடைவது ஒரு பெரிய தனிப்பட்ட, உணர்ச்சி, நிதி அல்லது நெறிமுறை செலவில் வருகிறது, அது இறுதியில் இழப்பாக உணர்கிறது.

5. வெற்றியை அடைந்த பிறகு, தனிநபர்கள் வெற்றிக்குப் பிந்தைய மனச்சோர்வை அனுபவிக்கலாம். வெற்றியை நோக்கி அவர்களைத் தூண்டிய உற்சாகமும் நோக்கமும் மங்கி, அவர்கள் வெறுமையாகவோ அல்லது திசையற்றவர்களாகவோ உணரும்போது

இந்த நிகழ்வு நிகழ்கிறது. விளையாட்டு வீரர்கள் அல்லது கலைஞர்கள் தங்களது மிகப்பெரிய இலக்குகளை அடைந்த பிறகு, அவர்கள் வெற்றிக்கு அப்பால் புதிய அர்த்தத்தை அல்லது நோக்கத்தைக் கண்டறியப் போராடுவதால், உணர்ச்சித் தாழ்வுகளை அனுபவிக்கலாம்.

வெற்றியைப் பின்தொடர்வது பரிபூரணவாதத்தின் (perfectionism) மனநிலையை வளர்க்கும், அங்கு தனிநபர்கள் எல்லா விலையிலும் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். இது முடிவில்லாத அதிருப்தியின் சுழற்சிக்கு வழிவகுக்கும், அங்கு எந்த அளவிலான வெற்றியும் போதுமானதாக இல்லை, மேலும் எந்தச் சிறிய தோல்வியும் பேரழிவை ஏற்படுத்தும்.



*6.* வெற்றியை அடைவதற்குத் தேவைப்படும் தீவிர கவனம் தனிப்பட்ட உறவுகளைச் சீர்குலைக்கும். தனிநபர்கள் தங்கள் வெற்றியைத் தேடுவதில் நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது கூட்டாளர்களைப் புறக்கணிக்கலாம், இதன் விளைவாக கைவிடப்பட்ட அல்லது மனக்கசப்பு உணர்வுகள் ஏற்படும். வெற்றியை அடைந்தவுடன், இந்த உறவுகளைச் சரிசெய்வது சவாலானது. போட்டிச் சூழல்களில், வெற்றியானது போட்டிகளை உருவாக்கலாம் அல்லது அதிகரிக்கலாம். ஆரோக்கியமான போட்டி ஊக்கமளிக்கும் அதே வேளையில், அதிகப்படியான போட்டியானது சகாக்கள், அணியினர் அல்லது சக ஊழியர்களிடையே பகைமை, பொறாமை மற்றும் ஆரோக்கியமற்ற இயக்கவியலுக்கு வழிவகுக்கும்.

*7.* கூட்டு அல்லது தேசிய வெற்றிகளின்போது (அரசியல் அல்லது இராணுவ வெற்றிகள்), ஒரு குழுவின் வெற்றி மற்றொரு இழப்பின் இழப்பில் வரலாம். வெற்றியாளர்கள் கொண்டாடலாம், ஆனால் தோற்கடிக்கப்பட்டவர்கள் அவமானப்படுத்தப்பட்டதாகவோ, ஒடுக்கப்பட்டதாகவோ அல்லது உரிமையற்றவர்களாகவோ உணரலாம். இது மோதல், சமத்துவமின்மை அல்லது அநீதியின் சுழற்சியை நிலைநிறுத்தலாம். காட்டாக, அரசியல் வெற்றிகள் சமூகங்களைத் துருவப்படுத்தலாம், தோல்வியுற்ற தரப்பினர் அதிகாரம் இழந்தவர்களாகவோ அல்லது ஒதுக்கப்பட்டவர்களாகவோ உணர்கிறார்கள், இது மேலும் சமூகப் பதற்றத்திற்கு வழிவகுக்கும்.

ஒரு வெற்றிக்குப் பிறகு, வெகுமதிகள் அல்லது அங்கீகாரம் விநியோகம் சீரற்றதாக இருக்கலாம், அவர்கள் சமமாகப் பங்களித்ததாக உணருபவர்களிடையே வெறுப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அவர்கள் ஒப்புக் கொள்ளப்படவில்லை. இது அணிகள் அல்லது நிறுவனங்களுக்குள் நீண்ட காலப் பிளவுகளை உருவாக்கலாம்.

*8.* வெற்றி பெரும்பாலும் புதிய பொறுப்புகளைக் கொண்டுவருகிறது. தலைவர்கள் அல்லது வெற்றியாளர்கள் திடீரென்று முடிவெடுப்பது, தலைமைத்துவம் மற்றும் தங்கள் வெற்றியைத் தக்கவைத்துக்கொள்வது போன்ற சுமைகளால் தங்களைத் தாங்களே சுமையாகக் காணலாம்.

குறிப்பாக அவர்கள் வெற்றியுடன் வரும் புதிய சவால்களுக்கு ஆயத்தமாக இல்லை என்றால் இந்தப் பொறுப்பு மிகப்பெரியதாக இருக்கலாம். தேர்தல்களில் வெற்றிபெறும் அரசியல் தலைவர்கள், ஆளுமையின் சிக்கலான தன்மைக்குத் தங்களைத் ஆயத்தப்படுத்தாமல் இருப்பதைக் காணலாம். அவர்கள் தலைமையின் கோரிக்கைகளுக்குச் செல்லும்போது மன அழுத்தம் மற்றும் விரக்திக்கு வழிவகுக்கும்.

ஒருவர் எவ்வளவு உயரத்தில் ஏறுகிறாரோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதாக உணரலாம். வெற்றியாளர்கள், குறிப்பாக தலைமைப் பாத்திரங்களில், அவர்களுக்கும் அவர்கள் வழிநடத்தும் அல்லது போட்டியிடும் நபர்களுக்கும் இடையே உள்ள தூரம் காரணமாக தனிமை உணர்வை அனுபவிக்கலாம். அவர்கள் இனி மற்றவர்களுடன் தொடர்புகொள்ள முடியாது அல்லது தங்கள் போராட்டங்களை வெளிப்படையாகப் பகிர்ந்துகொள்ள முடியாது.

9. வெற்றி, குறிப்பாக மோதல் அல்லது போட்டியில், தோற்கடிக்கப்பட்ட மனிதர்களுக்கிடையே மனக்கசப்பு மற்றும் பழிவாங்கும் விருப்பத்தைத் தூண்டும். இது போட்டி, விரோதம் அல்லது வன்முறையின் தொடர்ச்சியான சுழற்சிகளுக்கு வழிவகுக்கும். அங்கு தீர்வு அல்லது அமைதியைத் தேடுவதற்குப் பதிலாக ஆதிக்கத்தைப் பேணுவதில் கவனம் செலுத்துகிறது.

புவிசார் அரசியல் மோதல்களில், வெற்றி பெற்ற நாடு அல்லது குழு தோற்கடிக்கப்பட்டவர்கள் மீது கடுமையான நிபந்தனைகளை விதிக்கலாம். இது நீண்ட கால மனக்கசப்பு மற்றும் எதிர்கால மோதல்களுக்கு வழிவகுக்கும். இது முதலாம் உலகப் போர் மற்றும் வெர்சாய்ஸ் உடன்படிக்கைக்குப் பிறகு காணப்படுகிறது என்று சமூக அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இனி, வரலாற்று ரீதியில் சில எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம்.

1. ஜப்பானின் சரணடைதலை நிர்ப்பந்திக்க அமெரிக்கா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தியது. மிகப்பெரிய தொகையில் பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் மற்றும் நீண்டகாலத் துன்பங்களை ஏற்படுத்தியது. ஹிரோஷிமா மற்றும் நாகசாகி குண்டுவெடிப்புகளில் 200,000 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் பொதுமக்கள். மேலும் பல தசாப்தங்களாக கதிர்வீச்சு நோய், புற்றுநோய் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான நெறிமுறை தீவிர விவாதத்திற்கு உட்பட்டது.

குண்டுவெடிப்புகள் ஜப்பானின் சரணடைதலை விரைவுபடுத்தியிருக்கலாம் என்றாலும், மனிதாபிமான எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக பேரழிவு தரும் இது தேவையற்ற மற்றும் விகிதாசாரமற்ற சக்தியைப் பயன்படுத்துவதாக விமர்சகர்கள் வாதிடுகின்றனர். போலவே, நேச நாடுகள் மற்றும் அச்சு சக்திகள் இரண்டும் நகரங்களைக் குறிவைத்துப் பரவலான குண்டுவீச்சுப் பிரச்சாரங்களில் ஈடுபட்டன. இது பாரிய பொதுமக்கள் மரணங்களுக்கு வழிவகுத்தது. டிரெஸ்டன் (ஜெர்மனி) மற்றும் டோக்கியோ (ஜப்பான்) தீக்குண்டு வீச்சு பல்லாயிரக்கணக்கான போர் அல்லாதவர்களைக் கொன்றது மற்றும் பெரிய நகர்ப்புறங்களை இடிபாடுகளில் ஆக்கியது. இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சைப் பயன்படுத்துவது பற்றிய நெறிமுறைக் கேள்விகளை எழுப்பின.

2. நாஜி ஜெர்மனிக்கு எதிரான வெற்றி ஐரோப்பாவின் பிளவுக்கு வழிவகுத்தது, சோவியத் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு ஐரோப்பாவிற்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் இடையே கண்டம் பிளவுபட்டு, அமெரிக்கா

மற்றும் அதன் நட்பு நாடுகளுடன் இணைந்தது. இந்தப் பிரிவானது பனிப்போரில் விளைந்தது, நீண்ட கால அரசியல் மற்றும் இராணுவப் பதற்றம் உலகை அணுசக்தி மோதலின் விளிம்பிற்குப் பலமுறை கொண்டு வந்தது (1962இல் கியூபா ஏவுகணை நெருக்கடி).

இரும்புத்திரையின் உருவாக்கம் (establishment of the Iron Curtain) கிழக்கு ஐரோப்பாவில், குறிப்பாக கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி மற்றும் போலந்து போன்ற நாடுகளில் அடக்குமுறை ஆட்சிகளை உருவாக்கியது. அங்கு மக்கள் சர்வாதிகாரக் கம்யூனிச அரசாங்கங்களின் கீழ் வாழ்ந்தனர். 1956ஆம் ஆண்டு ஹங்கேரியப் புரட்சி மற்றும் 1968ஆம் ஆண்டு ப்ராக் ஸ்பிரிங் (Prague Spring) ஆகியவற்றில் காணப்பட்டதைப் போல, இந்த ஆட்சிகள் சுதந்திரங்களை ஒடுக்கின. மேலும் கருத்து வேறுபாடுகள் பெரும்பாலும் வன்முறையில் நசுக்கப்பட்டன.

3. தொடர் போர்கள் ஐரோப்பியக் காலனித்துவச் சக்திகளைப் பலவீனப்படுத்திய அதே வேளையில், பல நட்பு நாடுகள், குறிப்பாக பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் தங்கள் காலனித்துவப் பேரரசுகளைப் பராமரிக்க முயன்றன. போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் காலனித்துவ நாடுகள் சுதந்திரத்தை நாடியதால் இது மிருகத்தனமான மோதல்களுக்கு வழிவகுத்தது. டச்சுக்கு எதிரான இந்தோனேசிய தேசியப் புரட்சி (1945–1949) மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கும் வியட்நாமியப் புரட்சியாளர்களுக்கும் இடையே நடந்த முதல் இந்தோசீனாப் போர் (1946–1954) காலனித்துவத்தின் வன்முறைப் பின்விளைவுகளை எடுத்துக்காட்டியது.

பல சந்தர்ப்பங்களில், நேச நாடுகளின் வெற்றி காலனித்துவ மக்களுக்கு உடனடி சுதந்திரத்தை ஏற்படுத்தவில்லை. மேலும் அவர்கள் சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது. 1947இல் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவதற்கான பிரிட்டிஷ் பேரரசின் முடிவு, இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பிரிவினைக்கு வழிவகுத்தது. இது வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் கொடுமையான வன்முறை. இந்துக்கள், முஸ்லீம்கள் மற்றும் சீக்கியர்களுக்கு இடையிலான வகுப்புவாத வன்முறையில் நூறாயிரக்கணக்கான மக்கள் இறந்தனர் மற்றும் லட்சக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்தனர்.

தொகுப்பாக, இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகளின் வெற்றி பாசிசத்தைத் தோற்கடிப்பதிலும், பேரழிவு தரும் உலகளாவிய மோதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதிலும் அதன் பங்கிற்காகக் கொண்டாடப்படும் அதே வேளையில், அது அழிவு, நெறிமுறை சங்கடங்கள் மற்றும் துன்பத்தின் புதிய வடிவங்களை விட்டுச்சென்றது. அணுகுண்டுகளின் பயன்பாடு, பொதுஇட குண்டுவெடிப்புகள் போன்ற நிகழ்வுகளைச் சுற்றியுள்ள நெறிமுறை கேள்விகள், சோவியத் அடக்குமுறையின் எழுச்சி, பனிப்போரின் ஆரம்பம் மற்றும் காலனித்துவத்தின் தொடர்ச்சி ஆகியவை வெற்றி, அவசியமானதாக இருந்தாலும், தார்மீகத் தெளிவின்மை மற்றும் எதிர்மறையான இணை அழிவுகள் ஆகியவற்றால் நிறைந்ததாக நமக்கு நினைவூட்டுகின்றன.

முடிவாக, வெற்றி, அடிக்கடி கொண்டாடப்படும் என்றாலும், அதன் சொந்த சவால்கள் மற்றும் சாத்தியமான குறைபாடுகள் நிறையவே உள்ளன. தனிநபர்கள் மீதான உளவியல் பாதிப்பு முதல் குழுச் சூழல்களில் உள்ள தார்மீக மற்றும் நெறிமுறை சங்கடங்கள் வரை எதிர்மறையான விளைவுகளைக் கொண்டு வரலாம். இந்த அம்சங்களைப் புரிந்துகொள்வதும் உரையாடுவதும் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் அரசு மற்றும் பெருநிறுவனங்கள் தங்கள் வெற்றிகளை மிகவும் சிந்தனையுடனும் நிலையானதாகவும் நிர்வகிக்க உதவும்.

தனிப் பொருளாகுமோர் கடல்

தொடர் - 1

கவிதா லட்சுமி



# பாரதி மறந்த ஆசைமுகம்

பாரதியின் கவிதைகளில் அதீத காதலுள்ளவள் நான். சில பாடல்களை வருடக்கணக்கில் இரைமீட்டுக் கொண்டிருப்பேன். அப்படியாக என்னை அலைக்கழித்த பாடலில் ஒன்று ‘ஆசைமுகம் மறந்து போச்சே.’ பல வருடங்களாக இதன் பொருளைத் தேடி அலைந்திருக்கிறேன். பாரதியின் கவிதைகள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை. சொற்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அதை அடுக்கும் முறையிலும் அதன் எளிமையை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

எளிய இனிய சொற்களைக் கொண்ட கவிதைகளாயினும் அக்கவிதைகளின் பொருளுணர்ந்து கொள்வது பெரும்பாலும் அத்தனை இலகுவானதல்ல. பாரதியின் கவிதைகளை ஒரு ஒழுங்குடன் படித்தறிந்தவர்களால் மட்டுமே கவிதையின் பொருளுணர்ந்து அதன் உட்கருத்தை உய்த்துணர முடியும். ‘ஆசைமுகம் மறந்து போச்சே’ என்ற பாரதியின் கவிதையை இந்த வகைமைக்குள் சேர்க்கலாம்.

காதலனின் முகம் எப்படி காதலிக்கு மறந்துபோகும் என்ற கேள்வி எனக்குள் எழுந்ததில் இருந்து பல வருடங்களாக இதற்கான பொருளை அறிய முற்பட்டு வந்திருக்கின்றேன். அந்தத் தேடலில் இருந்து பிறந்ததே இந்தப் பதிவு.

பாரதியின் கண்ணன் பாட்டில் வரும் கண்ணன் என் காதலன் என்ற தலைப்பிலமைந்த “ஆசைமுகம் மறந்து போச்சே” என்று தொடங்கும் கவிதை மிகவும் எளிமையான பாடுவதற்கு இனிமையான ஒரு பிரிவாற்றாமைக் கவிதை.

இந்தக் கவிதையின் வெளிப்படையான கருத்தும் மிக எளிமையானது. காதலனை நீண்ட நாள்களாகக் காணவில்லை. அவன் முகம் பார்த்தும் பல நாள்கள் ஆகிவிட்டன. பிரிவாற்றாமையால் காதலிக்குத் தன் காதலனின் முகமே மறந்து போய்விட்டது. தான் பார்ப்பதற்குக் கூட அவன் படம் இல்லையே என்று தன் தோழிக்குத் தலைவி கூறுவதாக இக்கவிதை அமைக்கப்பட்டிருக்கின்றது.

உண்மையில் இந்த நேர்க் கருத்தில்தான் இந்தக் கவிதை எழுதப்பட்டிருக்கிறதா



அல்லது வேறு உட்கருத்து ஏதேனும் இருக்கின்றதா என்பதே கேள்வி?

**பாட்டும் உட்பொருளும்**

ஒரு கவிதையை மனதிலிருந்து உணர்வுப்பூர்வமாகப் பாட்டிலோ, ஆட்டத்திலோ கொண்டுவர அதன் உட்கருத்தை ஆழ்ந்து விளங்கிக்கொள்ளுதல் என்பது மிகவும் இன்றியமையாதது.

கண்ணனை காதலனாக, தோழனாக, தாயாக, தந்தையாக, காதலியாக, சேவகனாக, அரசனாக, சீடனாக, ஆண்டானாக, காந்தனாக, விளையாட்டுப் பிள்ளையாக, சத்குருவாகக் கொண்டு எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்ட 'கண்ணன் பாட்டு' என்ற தொகுதியில் ஒரு கவிதையாக இந்தக் கவிதை இருப்பதால் அதன் ஒரு பகுதியாகவே இக்கவிதையை நோக்க வேண்டி இருக்கிறது.

கண்ணன் பாட்டுத் தொகுப்பு எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது? எவ்வகையான சிந்தனையைக் கொண்டிருக்கிறது என்பவற்றின் அடிப்படையில்தான் இக்கவிதை பற்றிய உட்கருத்தினை நாம் அறிந்துகொள்ள முடியும். பாரதியின் கண்ணன் பாட்டில் உள்ள கவிதைகள் பலவும் வேதாந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்காகவே எழுதப்பட்டவை. வேதாந்தத் தத்துவங்களை வைத்தே பல கவிதைகளை எழுதியிருப்பதாகப் பாரதியே பற்பல கவிதைகளிலும் கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கின்றார். சான்றாக அவரது குயில்பாட்டில் இறுதியாக "வேதாந்தமாகக் கருத்துரைக்கவல்லீர்" என்று குறிப்புணர்த்துகின்றார்.

வேதாந்தமாகக் கருத்துரைக்கவல்லீர்

பாரதி சொல்லும் வேதாந்தத் தத்துவம் என்பது என்ன?

பாரதியினுடைய வேதாந்தத் தத்துவத்தில் ஜீவாத்மா பரமாத்மா என இரண்டு விடயங்கள் பேசப்படுகின்றன.

ஜீவாத்மா: மனிதர்கள்.

பரமாத்மா: முழுமையான அகண்ட பிரபஞ்சம்.

இந்த ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் ஒரு பேதமும் இல்லை என்பதுதான் வேதாந்தத்தினுடைய கருத்து. ஜீவாத்மாதான் பரமாத்மா. ஜீவாத்மா பரமாத்மாவின் ஒரு பாகம் மட்டுமே. அகண்ட முழுப் பிரபஞ்சத்தின் ஒரு பாகம் மட்டுமே மனித உயிர்கள். மனித உயிர்கள், தாம் வேறு என்று உணர்வதற்கான காரணம் மாயை. மாயையின் காரணமாகத்தான் தம்மை வேறு ஒரு பொருள் என்றும் பிரபஞ்சத்தின் பாகம் இல்லை என்றும் எண்ணிக்கொள்கிறோம்.

மனித மனதின் இயக்கமானது சிந்தனை என்கிற இருமை, எதிர்வுக்கோட்பாட்டை (binary) வைத்தே பொருளை விளங்கிக்கொள்ளும் தன்மையுடையது. மனம், எப்போதும் ஒரு விடயத்தை அதற்கு எதிர்மறையான மற்றொரு விடயத்துடன் ஒப்பிட்டே புரிந்துகொள்ளும் தன்மையுடையது. மனித மனதின் இயங்கியலின் அடிப்படையானது முரண்பாடுகளை இணைத்துவைத்துப் பொருள் கொள்வதேயாகும்.

இருளைப் புரிந்துகொள்ள ஒளியும், இன்பத்தைப் புரிந்துகொள்ளத் துன்பமும், உண்மையைப் புரிந்துகொள்ளப் பொய்யும் தேவைப்படுகிறது. அதைப்போலவே இந்தப் பேரண்டம் வேறு தான் வேறு என்ற

மனநிலையிலேயே மனிதமனம் இயங்குகிறது. இந்த மாயை அழிந்துபோகுமானால் மனித உயிர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் தானும் ஒரு பாகம் மட்டுமே என்பதை உணர்ந்துகொள்ளும்.

இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டே “ஆசைமுகம் மறந்து போச்சே” என்ற கவிதையின் உட்கருத்தை அறிய விழைகிறேன். காலங்காலமாக மனித உயிர்களும் பிரபஞ்சமும் பேதமற்ற ஒன்றுதான் என்று மாயையற்று இருந்த தனது முகம் தனக்கு மறந்து போய்விட்டது. இங்கே பாரதி தேடுவது மாயையற்ற தனது முகத்தினைத்தான். மறந்துபோனது பிரபஞ்சத்தோடு பேதமற்று இருந்த தனது முகம்தான்.

நேசம் மறக்கவில்லை நெஞ்சம் – எனில்

நினைவு முகம் மறக்கலாமோ?

உயிர்க்கும் பிரபஞ்சத்திற்குமான தொடர்பு ஆழ்மனதிற்குத் தெரிந்துதான் இருக்கிறது. முற்றிலும் மறக்கப்படவில்லை. ஆனாலும் நினைவு (மனது) அந்த முகத்தை மறக்கலாமோ?

கவிதையை உச்சரிக்கும்போது “நினைவுமுகம் மறக்கலாமோ” என்பதற்கும், “நினைவு முகம் மறக்கலாமோ” என்பதற்கும் நுண்ணிய வேறுபாடுகள் உண்டு.

கண்ணில் தெரியுதொரு தோற்றம் – அதில்

கண்ண னழகு முழுதில்லை

நண்ணு முகவடிவு காணில் – அந்த

நல்ல மலர்ச்சிரிப்பை காணோம்.

பேதமற்ற உயிர்களும் பிரபஞ்சமும் பற்றிய ஒரு தோற்றம் மனக் கண்ணில் தெரிகிறது. ஆனாலும் அதன் முழுமை அங்கு இல்லை.

ஓய்வு மொழிதலுமில் லாமல் – அவன்

உறவை நினைத்திருக்கு முள்ளம்;

வாயு முரைப்பதுண்டு கண்டாய் அந்த

மாயன் புகழினை யெப்போதும்.

மாயை மறைத்தாலும், உயிர்களின் ஆழ்மனம் எப்போதும் பிரபஞ்சத்தோடு கலப்பதையே நினைத்திருக்கும்.

பிரபஞ்சத்தோடு கலந்து நிற்க வேண்டி பாடல்களையும் தோத்திரங்களையும் உயிர்கள் பாடிக்கொண்டு இருந்தாலும் அவைகள் அதன் உட்பொருளை விளங்கிக்கொள்ளாமலே பாடுகின்றன.

மேலும் ஆழ்மனதில் உள்ளதை, புறமனம் செய்த பாவம்தான் இந்த விடயங்கள் மறந்துபோகக் காரணமாகின்றனவோ என விளங்கக் காணலாம்.

கண்கள் புரிந்துவிட்ட பாவம் – உயிர்க்

கண்ண னுருமறக்க லாச்சு;

பெண்க ளினிடத்திலிது போலே – ஒரு

பேதையை முன்புகண்ட துண்டோ?

பெண்க ளினிடத்திலிது போலே – ஒரு

பேதையை முன்புகண்ட துண்டோ?

எனும் வரிகள் பரமாத்மாவை ஆணாகவும் ஜீவாத்மா அனைத்தும் பெண்ணாகவும் பார்க்கும் வேதாந்தத் தத்துவ மரபைப் பாரதியும் இக்கவிதையில் கையாண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

தேனை மறந்திருக்கும் வண்டும் – ஒளிச்

சிறப்பை மறந்துவிட்ட பூவும்

வானை மறந்திருக்கும் பயிரும் இந்த

வைய முழுதுமில்லை தோழி.

மனதை மாயை மறைத்திருந்தாலும் பிரபஞ்சமும் உயிர்களும் ஒன்றென்பது பிரிக்க முடியாத விடயங்கள் ஆகும். ஆயினும் மனித மனத்தின் யதார்த்தங்கள் இவற்றை விளங்கிக்கொள்வதில்லை.

பாடல் வரிகள் அனைத்திலும்..

பாரதி மறந்த ஆசைமுகமும் அவர்தான்!

அதைத் தேடுவதும் அவர்தான்!

ஆத்தா நா பாஸாயிட்டேன்

தொடர் 4

ஆண்டன் பெனி



# அய்ந்து விண்மீன்கள் ஓட்டலும் அரை பாக்கெட் வெந்நீரும்

நான் என்னுடைய முதல் அனுபவமாக அய்ந்து நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைகிறேன். பளிங்குக் கற்கள் விரித்த தரையில் நடக்கும்போது, காதலைச் சொல்லிவிட்டுத் திரும்புகிறவனின் தள்ளாட்டத்தை உணர்ந்தேன்.

வரவேற்பு ஹாலில் நின்றிருந்த வெள்ளை வெளேர் பெண்ணின், பால் ஐஸ் நாக்கின் ஆங்கிலப் புழக்கம் எனக்குப் புரியவில்லை. அந்த மயிலாப்பூர் பெண் மாநகரப் பேருந்திலும் 'ஒன் லஸ் கார்னர்' டிக்கெட் கேட்கிறவள், கடைசியாக அவள் தமிழில் பேசியது, இதே வராண்டாவில் ஹை ஹீல்ஸ் சறுக்கி விழுகையில் 'அம்ம்மாமாமா..' என்றபோது.

சாவியைக் கொடுத்து அறை வரைக்கும் உதவிக்கு வந்தவரையும் தவிர்த்துவிட்டேன். மூன்றாவது மாடியின் முன்னூற்று ஐந்தாவது அறையின் முன்பாக நிற்கிறேன். ஏடிஎம் கார்டில் கீசெயின் போட்டுத் தந்திருந்தார்கள். கொசுவர்த்திச் சுருள் பாக்கெட்டில்கூட ஆறேழு மொழிகளில் செய்முறை வைத்திருக்கிறார்கள். நாள் வாடகையாக இருபதாயிரம் வாங்கும் அறையின் சாவியில் எந்த விளக்கமும் இல்லை. இந்த இருபதாயிரம் என்பது என் அலுவலகத்தில் பிடித்தம் போக நான் வீட்டுக்குக் கொண்டு போகக்கூடிய தொகை. என் உயர் அதிகாரி தன்னுடைய எக்ஸ் கல்யாணத்துக்குப் போய் வந்த சோகத்தில் போதை தெளியாத காரணத்தினால் நான் வர வேண்டியதாகிவிட்டது.

நான் போவதென்று முடிவானதிலிருந்து மனதுக்குள் அப்படியொரு கிளர்ச்சி.

பதினைந்து நிமிடப் போராட்டத்திற்குப் பிறகு, ஏறிய லிப்டிலேயே இறங்கி, ரோஸ் நிறத்தில் உள்நாக்கு அணிந்திருந்த இன்னொரு ரிசப்ஷன் பெண்ணிடம் உதவிக்கு நின்றேன். உடன் வந்தாள், அவளின் கண்களுக்குள் மல்லிகைப் பூக்கள் பூத்திருந்தன, அதிலிருந்து ஒரு பூவை எடுத்துப் பூப்போலக் கதவைத் திறந்து தந்தாள். ஏன் எல்லா அழகான பெண்களும் அழகான இடத்திலேயே வசிக்கிறார்கள் என்று தெரியவில்லை.

ரூமில் இருப்பதைச் சலவைக்குப் போடலாம், ரூமையே சலவைக்குப் போட்டு எடுத்திருந்தார்கள்.

சரி தலைப்புக்கு வருவோம். நீண்ட தூரம் பயணம் களைப்பாக இருந்ததால், வெந்நீரில் குளித்தால் பரவாயில்லை என்று தோன்றியது. குளியலறைக்குப் போனேன். அது நான் தங்கியிருக்கும் திருவல்லிக்கேணி மேன்ஷன் அறையை விடவும் பெரிதாக இருந்தது. துபாய் ரோடு மாதிரி முகம்

பார்க்கலாம். நானும் பார்த்துக்கொண்டேன். பாத்ரூமில் வழுக்கி விழுந்தால் கூட தலையில் அடிபடாத அளவுக்கு விசாலமாக இருந்தது. ஒரு டிப்பர் லாரியைத் தாராளமாக அதில் நிறுத்தி வைக்கலாம்.

அறையைச் சுற்றிப் பார்த்தேன். கோடு போடாத கண்ணாடியை இதற்கு முன் பார்த்ததில்லை. என் உயரத்துக்கு நின்றிருந்தது. சோப், பேஸ்ட், பிரஷ், ஷேம்பு இத்தியாதிகளைச் சுற்றிப் பார்த்து முடிக்கவே பத்து நிமிடங்கள் ஆகியிருந்தது. இறுதியாக வெந்நீருக்குத் திரும்பும்போதுதான் தண்ணீர்க் குழாய்கள் என்ற பெயரில் மினி சைஸ் ஹெலிக்காப்டரைச் சுவரில் பொருத்தியிருந்தார்கள்.

என்னால் எத்தனை பக்கங்களில் திருப்ப முடியுமோ அத்தனை பக்கங்களிலும் திருப்பினேன். ஆனாலும் நான் விரும்பும் வெந்நீர் வரவேயில்லை. நான் காதலுக்காகக்கூட இவ்வளவு கஷ்டப்பட்டதில்லை. திருகுவது, இழுப்பது, தள்ளுவது, தூக்குவது மற்றும் என்னுடைய இன்னபிறவும் முயற்சிகள் கூட வேலைக்கு ஆகவில்லை.

வெந்நீர் எப்படி இருக்கும்? சூடாக இருக்கும். உடனே ஞானம் வந்துவிட்டது. அந்தக் குழாய்களைத் தொட்டுப் பார்த்ததில் ஒன்று மட்டும் சூடாக இருந்தது. ஆக 12பி பஸ் இந்த வழியாகத்தான் வரவேண்டும். கண்டுபிடித்தாகிவிட்டது. என்னையே நான் கண்ணாடியில் பெருமையாகப் பார்த்துக் கொண்ட தருணம் அது.

சூடான குழாயின் அருகில் இருந்த டேப்பைத் திருகினேன். தண்ணீர் வரவில்லை. என் பலம் மொத்தமும் செலுத்தி வேகமாக இழுத்ததில் அது கையோடு வந்துவிட்டது. தண்ணீர் கொட்டத் தொடங்க, பயத்தில் அதே அளவிற்கு எனக்கு வியர்வையும். டேமேஜ் பொருளுக்கு அபராதம் கட்டச் சொன்னால், அந்த அளவிற்கு என்னிடம் பணம் இல்லை. என்னால் இதைச் சரிசெய்ய முடியாது என்று மட்டும் புரிந்தது.

கதவைத் திறந்து வெளியே வந்தேன். வராண்டா வழக்கமான அமைதியில் இருந்தது. லிப்டை நோக்கி நடந்தேன். எதிரில் வந்த பணியாள் என்னை ஆச்சர்யமாகப் பார்த்துச் சிரித்தான். அப்போதுதான் உணர்ந்தேன் இடுப்பில் கட்டிய துண்டோடு வெளியில் வந்திருப்பதை. அவனை இழுத்துக்கொண்டே என் அறைக்கு ஓடினேன். காரணம் தெரியாததால் பாவம் அவன் ரொம்பவும் பயந்துவிட்டான். பாத்ரூமைக் காட்டியதும், என்னை ஆறுதல்படுத்தியவாறே இண்டர்காமில் தகவலைச் சொன்னான். அடுத்த பத்து நிமிடத்தில் பிளம்பர் வந்தான்.

எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. ரோஸ் நிறத்தில் உள்நாக்கு அணிந்திருந்த அந்த ரிசப்ஷன் பெண்ணின் அடையாளம் சொல்லி அவள் வந்து இதைச் சரி செய்யட்டும் என்றேன். அவர்கள் சிரித்தார்கள். பிளம்பர் பையன் என் தோளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, விலகிய குழாயைச் சரிசெய்தான்.

அவர்கள் என்னுடைய அறையை விட்டுச் செல்ல முற்படும்போது அவர்களைத் தடுத்து, “ஒரு பக்கெட் வெந்நீர் பிடிச்சிக் கொடுத்துட்டு எங்க வேணா போங்க” என்றேன். மறுபடியும் சிரித்தார்கள். எனக்குக் கோவம் கோவமாக வந்தது. நான் அவனை இழுத்துக்கொண்டே என் அறைக்கு வந்தது போலவே அவன் என்னை பாத்ரூம்க்கு இழுத்துப் போய்க் காட்டினான். அங்கு பக்கெட் என்ற ஒன்றே இல்லை. பாத்ரூமைப் பத்து நிமிடம் சுற்றிப் பார்த்தும், மண்ட மேல இருக்கிற கொண்டைய மறந்த கதையா அது இல்லாததை நான் கவனிக்கவே இல்லை. பாத்டப்பைப் பார்த்துட்டு, இத்தாந்தண்டி வாஷ் பேசின் எதுக்கு வச்சிருக்காங்கன்னு நினைச்சது நெனப்புக்கு வந்தது. அதற்குள் அவர்கள் கிளம்பியிருந்தார்கள். இப்போது என் கண்ணீர் வெந்நீராக ஓடி என்னை நனைத்துக்கொண்டிருக்கிறது.



## நகுலன்

### நான்

இருவருமே
ஆசாரமான குடும்பப்பின்புலம் கொண்டவர்கள்

இருவருமே
மரபறிந்தவர்கள்

இருவருமே
உறவுகளை மதிப்பவர்கள்

இருவருமே
பணத்தைப் பொருட்படுத்தாதவர்கள்

இருவருமே
குடிப்பழக்கமுள்ளவர்கள்

இருவருமே
நண்பர்கள்

இருவருமே
கவிஞர்கள்

பின்னேயென்ன
கொள்வினையே கொடுப்பினைதானே ஜக்கம்மா

### கனல் பறக்கும் காவிரி

ஒரு புராதன நகரம்
தோண்டி எடுக்கப்பட்டது

ஒரு மறைந்துபோன நதியை
கண்டுபிடித்தார்கள்

கடல் கொண்டிருக்கக்கூடும்,
இந்நாட்டையென அனுமானித்தார்கள்


கண்டெடுத்த எலும்புகளிலிருந்து
ஆற்றங்கரை நாகரிகம் அழிந்ததைத் தீர்மானித்தார்கள்

முதுமக்கள்தாழி என்று முடிவு செய்தார்கள்
ருத்ரனை வழிபட்டிருக்கலாமென்று யூகித்தார்கள்
இன்னும்
என்னென்னவோ சொல்லிக்கொண்டே வருகிறார்கள்

காட்சி மாறுகிறது
கதை போல
உண்ணாவிரதம் இருக்கிறார்
ஒரு நடிகர்

உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார் ஒரு இயக்குநர்
எல்லோரையும் பந்தாடுகிறார்கள் அரசியல்வாதிகள்

கானல் பரத்துகிறது காவிரி
துக்கம் கொண்டாடுகிறான் எளிய கவிஞன்





## ஹேமவதி

பொதிகையில்
மலையுச்சியில்
*

எப்படித்தான் சூல்கொண்டதோ
இப்படிப் பூமி குளிர
*

மழைமேகம் எவ்விதம்
கண்டுகொள்ளும் பொழியுமிடம்
*

வேறெங்கோ பெய்கிறது
இங்கே மழைக்காற்று
*

குற்றால மேகம்
கொங்கராயக் குறிச்சிக்கில்லை
*

திருநெல்வேலி மழை
தென்மலைக்குக் கிடையாது
*

இமயத்துக்கு எதுக்கு
மேக மழை
▪

## காலத்தின் பொறுப்பு

மழைக்காலத்து
மழை
வெயில்காலத்து
வெயில்
காற்றுக்காலத்து
காற்று
பனிக்காலத்து
பனி
எல்லாவற்றையும் கூடவே சுமந்து
எடுத்துக்கொண்டு திரிகிறது காலம்
▪



படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறைவாசிகளுக்கு
# புத்தக தானம் செய்வீர்...!



**#ஒரு_நூல்_புரட்சி**

"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரிய எண்ணத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு நூல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறது **இலக்கிய படைப்பு குழுமம்**."

புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


இலக்கிய படைப்பு குழுமம்
#03, அஜந்தா டவர், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024.
Ph : +91 73388 97788